# TNPSC-நடப்பு நிகழ்வுகள் – அக்டோபர் – 2017

| |
|---|
| உணவுப் பொருட்கள் மற்றும் LPGக்கு பிறகு உரங்களுக்கான(fertilizers) நேரடி மானியத் திட்டத்தை(DBT) இன்று முதல்(01-10-2017) மத்திய அரசு அமல்படுத்த உள்ளது<br>"திட்டம் செயல்படுத்தப்படும் வழிமுறைகள்"<br>- மானிய விலையில் வழங்கப்படும் அனைத்து உரங்களும் சில்லரை விற்பனை கடைகளில் பொருத்தப்பட்டுள்ள, பாயின்ட் ஆப் சேல் எந்திரங்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்<br>- இந்த திட்டத்தின் கீழ் பயன் பெறும் விவசாயிகள் ஆதார் கார்டு, கிசான் கடன் அட்டை, மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை மூலம் அடையாளம் காணப்படுவார்கள்.<br>- இத்திட்டம் முதற்கட்டமாக ஒரு சில மாநிலங்களில் மட்டும் இன்று அமல்படுத்தப்படும், நாடு முழுவதும் ஜனவரி 1,2018 முதல் நடைமுறைப்படுத்தப்படும்<br>"இத்திட்டத்தின் பயன்கள்"<br>- இந்த நேரடி உர மானியத் திட்டத்தின் மூலம், 100 சதவீத மானியத்துடன், உர நிறுவனங்கள் மூலம், பல்வேறு வகையான உரங்கள், சில்லரை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, அவை பயனாளிகளுக்கு வழங்கப்படும்.<br>மற்ற மானியங்களுடன் உர மானியம் மாறுபட்டது எவ்வாறு?<br>- வழக்கமான கியாஸ் மானியத்தைக் காட்டிலும் சிறிது வித்தியாசமானது. இந்த திட்டத்தின்படி, மானியங்கள் அனைத்தும் பயனாளிகளுக்கு செல்லாமல், நேரடியாக உர நிறுவனங்களுக்கு செல்லும். |
| "புதிய தேசிய வனவிலங்கு உயிர்வாழ் திட்டம் 2017-2031"(New National Wildlife Action Plan- 2017-31)<br>- 2017 முதல் 2031ம் ஆண்டு வரையிலான புதிய வனவிலங்கு உயிர்வாழத் திட்டத்தை மத்திய அரசு நாளை(02-10-2017) புதுடெல்லியில் நடைபெற உள்ள உலகளாவிய வனவிலங்கு திட்ட(GWP) மாநாட்டில் வெளியிட உள்ளது<br>"GWP"<br>- வனவிலங்குகள் கடத்தலை குறைத்தல் மற்றும் பாதுகாப்பில் நீடித்த வளர்ச்சியை நோக்காக கொண்டு உலக வங்கியின் உதவியுடன் 2015ம் ஆண்டு GWP தொடங்கப்பட்டது<br>"புதிய தேசிய வனவிலங்கு உயிர்வாழ் திட்ட சிறப்புகள்"<br>- புதிய 14 வருட திட்டங்கள் புதிய தொழில்நுட்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது அதாவது ஆளில்லா விமானங்கள் மூலம் கண்காணித்தல், இணைய வழி காண்காணித்தல்(e-Surveillenace) போன்றவை<br>- இத்திட்டங்கள் நாட்டில் உள்ள வன விலங்கு சரணலாயங்கள் மற்றும் தேசிய பூங்காக்களில் உள்ள வனவிலங்குகளின் பாதுகாப்புக்காக செயல்படுத்தப்படும்<br>- முதல் தேசிய வனவிலங்கு உயிர்வாழ் திட்டம் 1983ம் ஆண்டு தொடங்கப்பட்டது(1983-2001)<br>- இரண்டாவது தேசிய வனவிலங்கு உயிர்வாழ் திட்டம் 2002ம் ஆண்டு தொடங்கப்பட்டது(2002-2016)<br>- தற்போது மூன்றாவது தேசிய வனவிலங்கு உயிர்வாழ் திட்டம் தொடங்கப்பட உள்ளது(2017-2031) |
| இந்தியாவில் உணவுக் கழிவுகளை குறைப்பதற்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் ஹர்ஷிமரத் கௌர், "வாஷிங்டன்" நகரில் நடைபெற்ற அமெரிக்கா-இந்தியா பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டில் தெரிவித்துள்ளார்<br>- இந்தியாவில் உணவு சார்ந்த சந்தையின் மதிப்பு 6 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது, அதில் 70 சதவீதம் சில்லறை அடிப்படையிலான உணவுச் சார்ந்த சந்தையாகும். இதை "2020"ம் ஆண்டுக்குள் 3 மடங்கு அதிகரிப்பதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார் |
| தமிழ் திரைப்படங்களுக்கான கேளிக்கை வரியை 10 சதவீதமாக குறைத்தும், பிற மொழிப் படங்களுக்கு 20 சதவீதம் கேளிக்கை வரி விதித்தும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது |
| ஆசிரியர்களுக்கு மதிப்பு மற்றும் அங்கீகாரம் வழங்கும் நோக்கில் "ஹரியானா" மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் ஆசிரியர்களின் புகைப்படங்களை பொறுத்த அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது |
| 3 வது இந்திய பெண்கள் கரிம விழா 'Organic Festival' தில்லியில் துவக்கி வைத்தார் மேனகா காந்தி... |
| சர்வதேச தகவல் அறியும் உரிமை தினம்<br>(IDUAI- International Day for Universal Access to Information Observed Globally)<br>september – 28, 2017 ஆம் ஆண்டு இரண்டாவது முறை செப்டம்பர் 28 ம் தேதி தகவல் அறியும் உரிமைக்கான சர்வதேச தினமாக UNESCO வால் கொண்டாடபடுகிறது... |

| |
|---|
| தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் (IMR) 17ஆக குறைந்துள்ளது.<br>- 2015ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் IMR 19ஆக இருந்துள்ளது<br>- அதே வேலையில் தேசிய அளவில் IMR 34 ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது<br>- இதனை மாதிரி பதிவேடு ஆய்வறிக்கை(SRS) வெளியிட்டுள்ளது<br>- மேலும் 2023க்குள் IMR விகிதம் 10 ஆக குறைக்க தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது<br>Infant Mortality Rate (IMR)<br>- IMR என்பது 1000 குழந்தைகளுக்கு, எத்தனை குழந்தைகள் இறக்கிறது என்ற கணக்கீடாகும் |
| உள்ளூர் பயணியருக்காக, 'வோலோகாப்டர்' எனும், இரண்டு நபர்கள் அமர்ந்து பயணம் செய்யக்கூடிய, ஆளில்லா ஆகாய, 'டாக்சி' சேவையின் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. இடம்: துபாய். |
| பஞ்சாப் மாநில விவசாயிகள் கடன் தள்ளுபடி தொடர்பாக NITI Aayog அமைத்த "Tajamul Haque" தலைமையிலான குழு தனது பரிந்துரையை மத்திய அரசிடம் சமர்பித்துள்ளது<br>- இப்பரிந்துரையில் இந்தியாவின் உணவுக் கிண்ணம் என கருதப்படும் பஞ்சாப் இந்தியாவின் உணவுத் தேவைகளின் போது மிகுந்த உதவியை செய்துள்ளது, எனவே இது போன்ற நெருக்கடி சூழல்களில் பஞ்சாப் மாநில விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்வது ஏற்றத்தக்கது என மத்திய அரசுக்கு தனது அறிக்கையை பரிந்துரைத்துள்ளது |
| இந்தியாவிலேயே தூய்மையான கோவிலாக மதுரை மீனாட்சி அம்மன் கோவில்: மத்திய அரசு தேர்வு! |
| மராட்டிய மாநிலம் சீரடியில் பிரசித்தி பெற்ற சாய்பாபா கோயில் அமைந்துள்ளது.<br>அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள விமான நிலையத்தை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இன்று (OCT - 1) திறந்து வைத்தார். இந்த விழாவில் மகாராஷ்டிரா ஆளுநர் வித்யாசாகர் ராவ், முதல் மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர். |
| உலகிலேயே அதிவேகத்தில் மணிக்கு (4,020 கி.மீ.)செல்லும் பறக்கும் ரயிலை தயாரிக்க சீனா திட்டமிட்டுள்ளது.<br>பறக்கும் ரயில்<br>ரயில்வே துறையினல்பல சாதனைகளை சாதனைகளை கொண்டிருக்கும் சீனா, அடுத்ததாக சூப்பர்சானிக் பறக்கும் ரயிலை தயாரிக்க திட்டமிட்டுள்ளதாக அறிவிதுள்ளது. இதற்கான காலம் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.<br>சிறப்பம்சங்கள்<br>இந்த பறக்கும் ரயில் மணிக்கு 4,020 கி.மீ., வேகத்தில் செல்லும் திறன் பெற்றது.இது பயணிகள் விமானங்களின் வேகத்தை விட 4 மடங்கு அதிகம்.<br>மேலும் சீனாவில் செயல்பாட்டில் உள்ள உலகின் அதிவேக புல்லட் ரயிலை(மணிக்கு 350 கி.மீ.,) விட, இது 10 மடங்கு வேகம் கொண்டது. மேலும், அமெரிக்காவின் எலன்மஸ்க் கண்டுபிடித்த ஹை ப் லூப் ரயில் ( மணிக்கு 1,200 கி.மீ.,) தொழில் நுட்பத்தை விட மூன்று மடங்கு வேகத்தில் செல்லும் திறன் பெற்றது.<br>இந்தியாவின் அதிவேக ரயில் காதிமான் எக்ஸ்பிரஸ். இது டில்லி-ஆக்ரா இடையே பயணிக்கிறது. இதன் வேகம் மணிக்கு 160 கி.மீ., |
| அமெரிக்க சுகாதார அமைச்சர் டாம் பிரைஸ் (62) ஊழல் புகார் காரணமாக பதவி விலகி உள்ளார். இதையடுத்து, அந்தப் பதவிக்கு பரிசீலிக்கப்படும் நபர்கள் பட்டியலில் 2 இந்தியர்கள் இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.<br>இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சீமா வர்மா முதலிடத்தில் இருக்கிறார்.<br>இவர் இப்போது ‘சென்டர் பார் மெடிகேர் அன்ட் மெடிகெய்ட் சர்வீசஸ்’ நிர்வாகியாக உள்ளார். இவர் முன்னாள் அதிபர் ஒபாமாவின் மருத்துவ காப்பீட்டு (ஒபாமாகேர்) திட்டத்துக்கு மாற்று திட்டத்தைக் கொண்டுவர முக்கிய காரணமாக இருந்து வருகிறார்.<br>இதுபோல மற்றொரு இந்திய-அமெரிக்கரும் லூசியானா மாகாண முன்னாள் ஆளுநருமான பாபி ஜிண்டால் உட்பட மேலும் சிலர் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.. |
| அருணாச்சலப் பிரதேசம் மாநில எல்லையோரம் திபெத்தில் 409 கி மீ நீளமுள்ள புதிய அதிவிரைவுச்சாலையை சீன அரசு இன்று வாகனப் போக்குவரத்துக்கு திறந்ததுள்ளது.<br>சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சுமார் 3500 கிலோமீட்டர் நீளம்கொண்ட எல்லைப்பகுதி அருணாச்சலப் பிரதேசம் மாநிலத்தில் அடங்கியுள்ளது. அருணாச்சலப் பிரதேசம் மாநிலத்தை தனது அதிகாரத்துக்குட்பட்ட திபெத் நாட்டின் தென்பகுதி என்று சீனா உரிமை கோரி வருகிறது.<br>இந்நிலையில், திபெத் நாட்டின் லாசா பகுதியை நிய்ங்ச்சி நகருடன் இணைக்கும் 409கிலோமீட்டர் நீளம் கொண்ட அதிவிரைவு நெடுஞ்சாலையை சீனா அமைத்து வந்தது. சுமார் 580 கோடி அமெரிக்க டாலர் செலவில் அமைக்கப்பட்ட |

| |
|---|
| இந்த நெடுஞ்சாலையை வாகனப் போக்குவரத்துக்கு சீன அரசு இன்று திறந்து வைத்துள்ளது.<br>நுழைவுக் கட்டணம் இல்லாத இந்த புதிய சாலையின் வழியாக செல்வதன் மூலம் லாசாவுக்கும் நியங்ச்சிக்கும் இடையிலான பயணநேரம் மூன்று மணிநேரம் குறையும் என தெரிகிறது. குறிப்பாக, ராணுவப்படைகளை விரைவாக இப்பகுதிக்கு அனுப்பி வைக்கும் நோக்கத்தில்தான் சீன அரசு இந்த சாலையை அமைத்துள்ளதாக கருதப்படுகிறது. |
| இன்று உலக முதியோர் தினம்<br>OCTOBER - 1<br>Theme 2017 : “Stepping into the Future : Tapping the Talents, Contributions and Participation of Older Persons in Society” |
| உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் புகையிலை பொருட்கள், சக்தி அளிக்கும் பானங்கள்(energy drinks) மற்றும் கார்பனேடட் பானங்களுக்கு 100% கலால் வரியை விதித்து ஐக்கிய அரபு நாடுகள்(UAE) உத்தரவிட்டுள்ளது<br>- இந்த நடைமுறை இன்று(01-10-2017) முதல் நடைமுறைக்கு வந்துள்ளது |
| முதல் முறையாக இஸ்லாமிய பெண் முக்திகளும் சமய கட்டளைகளை(Fatwas) வழங்க சவூதி அரேபியா அரசு அனுமதியளித்துள்ளது<br>- இந்த உத்தரவின் மூலம் 45 ஆண்டுகளாக ஆண்கள் மட்டுமே சமய கட்டளைகளை வழங்கும் முறை முடிவுக்கு வந்துள்ளது |
| கர்நாடக மாநில காவல்துறையினர், 5 வருடம் பணி நிறைவடைவதற்கு முன்பே பதவி விலகும் காவலர்களுக்கு அபாரதம் விதிக்க அம்மாநில அரசு முடிவெடுத்துள்ளது<br>- இதன்படி பதவி விலகும் காவல்துறை துணை ஆய்வாளர்களுக்கு(sub-inspector) 2 இலட்சம் அபராதமும், காவலர்களுக்கு(Constables) 1 இலட்சம் அபராதம் விதிக்கவும் உத்தரவிட்டுள்ளது |
| மியான்மரில் ரோஹிங்கயா முஸ்லீம்களுக்கு எதிராக அந்த நாட்டு ராணுவம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து வரும் அந்த நாட்டின் தலைவர் "ஆங் சான் சூ கின்"(Aung San Suu Ky) உருவப்படம், லண்டனின் "ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகக் கல்லூரி"(Oxford University) பிரதான நுழைவு வாயிலில் இருந்து அகற்றப்பட்டுள்ளது |
| Red bull அணியின் "Max Verstappen" மலேசியா கிராண்ட்பிரிக்ஸ்(Malaysia GP) F1 கார்பந்தய போட்டிகளில் பட்டம் வென்றுள்ளார் |
| Burkhas அல்லது niqabs போன்ற முகத்தின் மூடுதிரைகளாக பயன்படுத்தும் உடைகளுக்கு தடை செய்யும் சட்டமானது ஆஸ்திரிய நாட்டில் நடைமுறைக்கு |
| இந்திய விமானப்படை 85 வது ஆண்டு நிறைவையொட்டி இரண்டு நாள் நிகழ்ச்சி ஈஸ்டன் ஏர் கமாண்ட் தலைமையகம் ஷில்லாங்கில் தொடங்கப்பட்டது... |
| "சதுப்பு நில (பாதுகாப்பு, நிர்வாகம்) விதிகள் 2017"<br>- மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகம் சதுப்பு நிலங்கள் தொடர்பான விதிகளை மாற்றியமைத்துள்ளது<br>- இந்த விதிகள் சதுப்பு நில (பாதுகாப்பு, நிர்வாகம்) விதிகள் 2010’ என்பதில் மாற்றங்களைச் செய்து, ‘சதுப்பு நில (பாதுகாப்பு, நிர்வாகம்) விதிகள் 2017' என உருவாக்கப்படவிருக்கிறது.<br>சதுப்பு நிலங்கள்(Wetlands) என்றால் என்ன?<br>- ஏராளமான பறவைகள், மீன்கள், இதர பிராணிகள் வாழும் இடங்கள் சதுப்பு நிலங்களாகும். ஏரி அல்லது குளம் என்பது வெறும் நீர்த்தேக்கம் மட்டுமே. சதுப்பு நிலம் என்பது ஏராளமான உயிரினங்கள் வாழும் இடம்<br>"புதிய விதியின் சிறப்பியல்புகள்"<br>- எந்த வகை சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பது, எந்தவிதமான செயல்களைச் சதுப்பு நிலங்களில் அனுமதிப்பது என்ற முடிவுகளை இனி மாநில அரசுகளே எடுத்துக்கொள்ளலாம்.<br>- இதற்காக மாநில சுற்றுச்சூழல் அமைச்சரை தலைவராக கொண்ட "மாநில சதுப்புநில ஆணையம்"(State Wetland Authority) அமைக்கப்படும்<br>- இயற்கை வளங்களின் குன்றா வளர்ச்சி, இயற்கைச் சமநிலை சேவை போன்றவற்றுக்குப் பாதிப்பு இல்லாமல், இந்த முடிவுகளை மாநில அரசுகள் மேற்கொள்ள புதிய விதிகள் அனுமதிக்கப்பட இருக்கின்றன<br>"இந்தியாவில் உள்ள சதுப்பு நிலங்கள்"<br>- இந்தியாவில் இதுவரை 115 சதுப்பு நிலங்கள் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன, அதில் 26 சதுப்பு நில பகுதிகள் ஈராக் ராம்சேர் மாநாட்டின்படி(Ramsar Convention-1971) சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன |

| |
|---|
| ரேடாரிலிருந்து தப்பி செல்லும் முதல் J-20 போர் விமானங்களை சீனா தனது இராணுவ படையில் சேர்த்துள்ளது |
| மியான்மர் மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு எல்லைகளின் இந்தியா குடியேற்ற சோதனைச்சாவடிகளை திறந்துள்ளது இந்தியா... |
| மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஆகியோர், புதுடில்லியில், 2017-26- செப்டம்பரில் நிதி மேலாண்மை பற்றிய ஒரு புத்தகம் வெளியிட்டனர்.<br>“A to Z of Financial Management in Autonomous Institutions” என்ற தலைப்பிலான புத்தகம்.<br>டாக்டர் ராஜத் பார்கவா மற்றும் ஸ்ரீ தீநநாத் பத்தாக் இந்த புத்தகத்தின் ஆசிரியர்கள்.<br>(Rajat Bhargava and Shri Deenanath Pathak.) |
| மூன்றாம் இந்திய சர்வதேச அறிவியல் விழா (IISF-2017) சென்னை, அக்டோபர் 13-16, 2017 ல் நடைபெற உள்ளது... |
| ஆப்ரிக்க நாடான கானாவில் உள்ள இந்திய தொழில் அதிபரான பிரேந்திர சஸ்மாலுக்கு இந்த ஆண்டிற்கான சர்வதேச தொழில் அதிபர் விருது கிடைத்துள்ளது . லண்டனில் நடந்த ஆசிய சாதனையாளர் விருது விழாவில் இவ்விருது வழங்கப்பட்டது |
| Single Click Pension Delivery திட்டத்தினை மத்திய பிரதேச மாநிலம் அறிமுகப்படுத்தியுள்ளது |
| ஆஸ்திரியாவில் பொது இடங்களில் முஸ்லிம் பெண்கள், முழு முகத்தையும் மூடும் முகத்திரை(Burqa) அணிவதற்கான தடை நேற்று முதல்(Oct-1-2017) அமலுக்கு வந்தது.<br>- ஆஸ்திரியவின் கோட்பாடுகளைப் பாதுகாக்கும் விதமாக, தலைமுடியில் இருந்து, தாடை வரை முகம் முழுமையாக தெரிய வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது. |
| புகையிலை பொருட்கள், ஆற்றல் பானங்கள் மற்றும் மென்மையான பானங்கள் மீது புதியதாக பாவ வரிகளை [SIN TAX] ஐக்கிய அரபு நாடுகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளது |
| இந்தியாவில் வனவிலங்குகள் வாரம்(Wildlife Week) அக்டோபர் மாதம் 2 முதல் 8 வரை(Oct 2-8) கொண்டாடப்படுகிறது |
| ஈரோடு மாவட்டம் "சத்தியமங்கலம் புலிகள்" காப்பகத்தில் உள்ள சிறுத்தைகளின் எண்ணிக்கை 111-ஐ தாண்டியுள்ளதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.<br>- வனத்தில் வசிக்கும் சிறுத்தை, புலி ஆகியவற்றின் நடமாட்டத்தை கண்காணிக்கவும், இனப்பெருக்கத்தை துல்லியமாக கணக்கிடவும் 350 இடங்களில் தானியங்கி கேமரா வைத்து கணக்கெடுப்பு மேற்கொண்டனர். |
| இந்திய-நேபாள் மற்றும் இந்திய-பூடான் எல்லைப் பகுதிகளை பாதுகாக்கும் எல்லைப் பாதுகாப்பு படையான SSBன் புதிய தலைவராக "Rajni Kant Mishra" பதவியேற்றுக்கொண்டார் |
| இந்த வாரம் செய்தித்தாள்களில் வந்த புத்தகங்கள்<br>1. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு தொடர்பான "The Empress: The Dramatic Life of a Powerful and Enigmatic Leader" என்ற புத்தகத்தை எழுதியவர் "Kalyani Shankar"<br>2. "Gandhi's Dharma" என்ற புத்தகத்தை எழுதியவர் "Ramakrishna Rao Koneru"<br>3. "Ants Among Elephants: An Untouchable Family and the Making of Modern India" என்ற புத்தகத்தை எழுதியவர் " Sujatha Gidla"<br>4. இந்தியா மற்றும் UKவில் உள்ள நீதித்துறையை ஒப்பிட்டு "Balanced Constitutionalism: Courts and Legislatures in India and the United Kingdom" என்ற புத்தகத்தை எழுதியவர் " Chintan Chandrachud"<br>5. "Water Colours" என்ற புத்தகத்தை எழுதியவர் "Lidia Ostałowska"<br>6. "In the Land of Buried Tongues" என்ற புத்தகத்தை எழுதியவர் "Chaity Das" |
| 4வது ஈர்ப்பு அலைகளை அமெரிக்காவின் LIGO ஆய்வுக்கூடம் மற்றும் இத்தாலியின் VIRGO ஆய்வுக்கூட உதவியுடன் கண்டறிந்துள்ளனர்<br>- இந்த அலைகள் ஆகஸ்ட் 14, 2017 அன்று கண்டறிந்துள்ளனர்<br>ஈர்ப்பு அலைகள்(Gravitational Waves) என்பது என்ன?<br>- அண்டவெளியில் இரு கருந் துளைகள் ஒன்றையொன்று சுற்றி பிணையும் போது ஏற்படும் அலைகளே ஈர்ப்பு அலைகள் எனப்படும்<br>- முதல் ஈர்ப்பு அலை செப்டம்பர் 2015லும், இரண்டாவது ஈர்ப்பு அலை டிசம்பர் 2015லும், மூன்றாவது ஈர்ப்பு அலை ஜனவரி 2017ல் கண்டறியப்பட்டது<br>- - LIGO- Laser Interferometer Gravitational Observatory |
| பழங்கள் மற்றும் காய்கள் உற்பத்தியில் உலக அளவில் இந்திய இரண்டாம் இடத்தில் உள்ளது |

| |
|---|
| தமிழகம் மற்றும் புதுவையில் கடந்த 26 ஆண்டுகாளாக இல்லாத அளவில் தென்மேற்கு பருவமழை 41 செ மீ பெய்துள்ளது.<br>வழக்கமான தென்மேற்கு பருவமழை 32 செ மீ |
| சிறந்த சுற்றுலா மாநிலத்திற்கான விருதை மத்திய பிரதேசம் வென்றுள்ளது |
| "அடுத்தவருக்கு கொடுத்து உதவுவோம்" என்ற கருத்துடன் oct 2 முதல் 8 ம் தேதி வரை "தான உத்சவ்" வாரம் கொண்டாடப்படுகிறது |
| புதுடெல்லியில் nov.1 முதல் 5 வரை இந்திய உணவு கண்காட்சி நடைபெற உள்ளது |
| இந்தியாவில் முதல் முறையாக சென்னை தரமணியில் ஜப்பான் தொழில்நுட்ப உதவியுடன் 6 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள கீழ்நிலை தொட்டி அமைத்து அதில் வாட்டர் ஏடிஎம் வரும் நவம்பர் மாதம் அமைய உள்ளது |
| மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் நாராயண ரானே " மகாராஷ்டிரா ஷ்வாபிமான் பக்ஸ்" என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கி உள்ளார் |
| மனித மூலதன குறியிட்டில் இந்திய 103 வது இடம் பிடித்துள்ளது.<br>முதல் இடம் நார்வே<br>2ம் இடம் பின்லாந்து<br>3ம் இடம் ஸ்விட்சர்லாந்து |
| புதுக்கோட்டை கவிநாடு கண்மாயில் மரபுவழி நடைபயணத்தின் பொது சமணர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது |
| சர்வதேச பளுதூக்குதல் சம்மேளனத்தின்(IWF) இரு துணைக் குழுக்களின் தலைவராக இந்திய பளுதூக்குதல் சம்மேளனத் தலைவர் "பீரேந்திர பிரசாத் பாய்ஷியா"(Birendra Prasad Baishya) தேர்வு செய்யப்பட்டுள்ளார் |
| இந்தியாவில் இம்மாதம் தொடங்கவுள்ள 17வயதுக்கு உட்பட்டோருக்கான(U-17) உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் பெண் உதவி நடுவர்கள் பணியாற்ற உள்ளனர்<br>- FIFA ஆடவர் போட்டியில் பெண் நடுவர் ஈடுபடுத்துவது இதுவே முதல் முறையாகும் |
| "National Institute of Nutrition(NIN) Report"<br>- நகர்ப்புறங்களில் வாழும் பெண்களை விட ஆண்கள் மன அழுத்தத்தில்(Hypertension) அதிக அளவில் பாதிக்கப்படுவதாக ஹைதராபாத்தில் உள்ள "தேசிய ஊட்டச்சத்து கல்வி நிறுவனம்"(NIN) ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது<br>- நகர்ப்புறங்களில் வாழும் ஆண்கள் 31 சதவீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்<br>- பெண்களில் 26 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்<br>- கேரளாவில் இந்த பாதிப்பு அதிகமாக உள்ளது, அதாவது 31 முதல் 39 சதவீதமாக இருக்கிறது<br>- பீகாரில் மன அழுத்த பாதிப்பு குறைவாக உள்ளது(16-22 சதவீதம் வரை)<br>- நாட்டில் 16 சதவீதம் பேர் புகையிலை பொருட்களான பீடி, சிகரெட் உள்ளிட்டவற்றை பிடிக்கின்றனர்<br>- 30 சதவீதம் பேர் மது அருந்துகின்றனர்<br>- ஆண்களில் 22 சதவீதம் பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்<br>- பெண்களில் 19 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் |
| தென்னிந்தியாவில் முதல் முறையாக வேலூர் மாவட்டம் திருபத்தூர் வட்டம் கந்திலி தோக்கியம் கிராமத்தில் காளான் பாறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது |
| "New Haj Policy 2017"<br>- இஸ்லாமியர்கள் மேற்கொள்ளும் புனித யாத்திரையான ஹஜ் யாத்திரை தொடர்பான புதிய கொள்கையை மத்திய அரசு இந்த வாரத்தில் வெளியிட உள்ளது<br>"ஹஜ்"(Haj)<br>- சவூதி அரேபியாவில் உள்ள ஜெட்டா நகரை அடுத்துள்ள மெக்கா நகருக்கு உலக நாடுகளிலிருந்து கோடிக்கணக்கான இஸ்லாமியர்கள் புனித யாத்திரை மேற்கொள்வது வழக்கம்<br>"ஹஜ் யாத்திரை மானியம்"<br>- இந்தியாவை பொறுத்தவரை ஹஜ் யாத்திரை மேற்கொள்வதற்கு விமான கட்டணத்தில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது, இதனால் அரசுக்கு கோடிக்கணக்கில் வருவாய் இழப்பு ஏற்படுவதாக 2012ல் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது<br>- இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் 2022ம் ஆண்டுக்குள் யாத்திரைக்கு வழங்கப்படும் மானியத்தை முழுவதுமாக |

நிறுத்துமாறு தீர்ப்பளித்தது
- இதனை தொடர்ந்து இதனை ஆராயவும் புதிய ஹஜ் கொள்கை உருவாக்க 6 நபர்கள் கொண்ட குழுவை மத்திய அரசு நியமித்தது
"புதிய கொள்கையின் சிறப்புகள்"
- விமான கட்டணத்துக்கான மானியம் அதிகரித்து வருவதால் மும்பை முதல் ஜெட்டா நகர் வரை (Mumbai-Jeddah sea route) கப்பல் வழியாக யாத்திரிகர்களை அனுப்பி வைக்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது
- ஹஜ் யாத்திரிகர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் ஒரு யாத்திரிகரிக்கு ஒரு முறை மட்டுமே மானியம் வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது
- தற்போது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஹஜ் யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு மானியம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது

புதுமையான கண்டுபிடிப்புக்கான IT Solutions UK வர்த்தக விருது
கானாவை சேர்ந்த இந்திய வம்சாவளி பிரேந்திரா சாஸ்மல் (Birendra Sasmal, CEO of Subah,) தொழிலதிபர்
ஆப்பிரிக்காவிற்க்கு புதுமையான IT தீர்வைக் கொண்டுவந்த முயற்சிகளுக்கு பிரிட்டனின் மதிப்புமிக்க வர்த்தக (or) வணிக விருதை பெற்றுள்ளார்.
சுபாவின் தலைமை நிர்வாக அதிகாரியான இவர் லண்டனில் உள்ள ஆசிய சாதனையாளர் விருதுகள் வழங்கும் விழாவில் சர்வதேச வர்த்தக விருது இவருக்கு வழங்கப்பட்டது...

ஜப்பான், ஜெர்மனி, கனடா மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளிலும், சோவியத் யூனியனில் இடம் பெற்றிருந்த நாடுகளிலும் ஒலி பரப்பு சேவையை தொடங்க அகில இந்திய வானொலி(All India Radio) திட்டமிட்டு வருகிறது
- தற்போது 150 நாடுகளில் 27 மொழிகளில் வானொலிச் சேவையை AIR வழங்கி வருகிறது

கனடாவில் பெரிய கட்சியை வழிநடத்தும் முதல் இந்திய வம்சாவளி சீக்கியர் அரசியல்வாதி..
38 வயதான சீக்கிய வழக்கறிஞான ஜக்மித் சிங் ஞாயிறன்று கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார், இதன் மூலம் நாட்டில் ஒரு பெரிய அரசியல் கட்சியைத் தலைமையேற்ற முதல் சீக்கியர் அரசியல்வாதியாக இவர் திகழ்கிறார்.

ஆப்கானிஸ்தானின் விமான சேவை நிறுவனமான காம் ஏர் நிறுவனம் ஆப்கானிஸ்தானின் இரண்டாவது மிகப்பெரிய நிறுவனமான மஷார்-இ-ஷாரிப் முதல் டெல்லி வரை தனது முதல் விமான சேவையை துவக்கியுள்ளது

சீனா தனது 68 வது தேசிய தினமான அக்டோபர் 01 ல் பெய்ஜிங்கில் உள்ள Tian'anmen என்ற இடத்தில் தேசிய கொடி ஏற்றி கொண்டாடினர்..

இஸ்லாமிய மன்னரால் கட்டப்பட்டதால் முக்கிய சுற்றுலா மையங்களின் பட்டியலில் இருந்து தாஜ்மஹால் நீக்கம்..! : உ.பி அரசு அடாவடி
ஆக்ரா; உலகப் புகழ் பெற்ற தாஜ்மஹால் சுற்றுலாத் தலம் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. உத்திரப்பிரதேச அரசு வெளியிட்ட முக்கிய சுற்றுலா மையங்களின் பட்டியலில் தாஜ்மஹால் இல்லை. உத்திரப்பிரதேச அரசின் இந்த நடவடிக்கையால் நாடு முழுவதும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. முகலாயப் பேரரசர் ஷாஜகான், தனது மனைவி மும்தாஜின் நினைவாக கட்டியது தான் தாஜ்மஹால். இஸ்லாமிய மன்னரால் கட்டப்பட்டது என்பதால் முக்கிய சுற்றுலா தலங்களின் பட்டியலில் இருந்து உத்திரப்பிரதேச அரசு தாஜ்மஹாலை நீக்கியுள்ளது. இந்திய கலாச்சாரத்தை பின்பற்றி தாஜ்மஹால் கட்டப்படவில்லை என உத்திரப்பிரதேச முதல்வர் விளக்கமளித்துள்ளார்.
எனவே சுற்றுலா மைங்களின் பட்டியலில் இருந்து தாஜ்மஹாலை நீக்கிவிட்டு, புதுப்பட்டியலை மாநில அரசு வெளியிட்டுள்ளது. உத்திரப்பிரதேச அரசின் புதிய சுற்றுலா மையங்களின் பட்டியலில் காசி நகரத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணரின் பிறப்பிடமான மதுராவுக்கு இரண்டாவது இடம் அளிக்கப்பட்டுள்ளது. உத்திரப்பிரதேச முதல்வர் ஆதித்யநாத்தின் கோரக்பூர் மடத்திற்கு நான்காவது இடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்து குவியும் இடமான தாஜ்மஹாலை, சுற்றுலா மையங்களின் பட்டியலில் இருந்து மாநில பாரதிய ஜனதா அரசு நீக்கியுள்ளது நாடு முழுவதுமுள்ள மக்களை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

திருநங்கைகளுக்கு தனிக்கழிவறை, கிராமம்: மத்தியப்பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் அறிவிப்பு...
திருநங்கைகளுக்கான தனிக்கழிவறை போபால் நகராட்சியின் உதவியுடன் முதல்கட்டமாக இங்கு அமைக்கப்படுகிறது. திருநங்கைகள் சமுதாயம் முன்னேறும் வகையில் விரைவில் அவர்களுக்கென தனி கிராமம் ஏற்படுத்தித் தரப்படும். ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் செலவில அனைவருக்கும் வீடுகள் அமைத்துத் தரப்படும். மேலும் அவர்களின் குறைகளைப் போக்கும் வகையில் வாரியம் அமைக்கப்படும். இதன்மூலம் திருநங்கைகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளும்

| |
|---|
| செய்து தரப்படும். |
| மராட்டிய மாநிலம் ஷீரடியில் சர்வதேச விமான நிலையம் : ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார் |
| அக்.2 :காந்திஜி (ம) லால்பகதூர் சாஸ்திரி பிறந்தநாள்<br>==> தூய்மை இந்தியா பணியின் 3 ம் ஆண்டு நிறைவு விழா<br>==> விழா நடைபெறும் இடம் : விக்யான் பவன், புதுடெல்லி |
| 50 லட்சம் ரூபாய் வரி செலுத்துவோருக்கு சஹாஜ்(SAHAJ) எனும் முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாகவும், 2.5 லட்சம் முதல் 5 லட்சம் வரை வரி செலுத்துவோரின் வரி விகிதம் 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைத்துள்ளதாகவும் மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார் |
| மகாத்தமா காந்தியின் சுயசரிதையான THE STORY OF MY EXPERIMENT WITH TRUTH புத்தகத்தை நேபாளி மொழியில் ஸ்ரீ சேகர் கிரி என்பவர் மொழிபெயர்த்துள்ளார். |
| 2017ம் ஆண்டிற்கான மருத்துவ நோபல் பரிசு 3 நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது<br>- Jeffrey C.Hall<br>- Michael Rosbash<br>- Michael W.Young<br>- மூலக்கூறுகளின் செயல்பாடு பற்றிய கண்டுபிடிப்புக்காக இம்மூவருக்கும் நோபல் பரிசு கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது |
| ஓ.பி.சி உட்பிரிவை ஆய்வு செய்யும் குழுவுக்கான தலைவரை நியமித்து ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டுள்ளார்.<br>குழுவின் தலைவராக டெல்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரோகிணி செயல்படுவார். குழுவின் உறுப்பினராக ஜே.கே.பஜாஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த குழு ஓபிசி வகுப்பினர் தெரிவிக்கும் குறைகளை ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை அளிக்கும். இக்குழு தனது பரிந்துரைகளை 12 வார காலத்திற்குள் ஜனாதிபதிக்கு அளிக்க காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. |
| ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மஹாராஷ்டிரா, மாநிலத்தின் நகர்ப்புற பகுதிகள் திறந்த வெளி கழிப்பிடம் இல்லா பகுதியாக அறிவித்துள்ளார். இது அவர் பிறந்த நாள் அன்று (1/10/2017) தெரிவித்துள்ளார்...<br>இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மகாராஹ்ட்ரா முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் ஸ்வாட்ச் பாரத் அபியானுடன் ஸ்வாட்ச் மகாராஷ்டிரா அபிஹானை அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. அரசின் நகர்ப்புற மேம்பாட்டுக் குழ மாநிலத்தில் 384 நகர்ப்புறங்களிலும் கழிப்பறைகளை உள்ளது என உறுதி செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது... |
| பொருளாதார வளர்ச்சிக்கான செயல் திட்டங்களை வகுத்து தருமாறு NITI Aayogகிற்கு பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்<br>- இதனை தொடர்ந்து NITI Aayog பல்வேறு குழுக்களை நியமித்துள்ளது<br>"தொழில் துறை குறித்த குழு"<br>- NITI Aayog தலைமை ஆலோசகர் "ரத்தன் வட்டல்"(Ratan Watal) தலைமையிலான குழு நாட்டின் தொழில் துறை குறித்து மக்களின் மனதில் சிறப்பான நம்பிக்கையை ஏற்படுத்துவது, தனியார் துறை முதலீட்டை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து பரிந்துரைக்க உள்ளது<br>"வேளாண்மை சார்ந்த குழு"<br>- NITI Aayogன் மற்றொரு ஆலோசகரான "தாஜ்முல் ஹக்"(Tajamul Haque) வேளாண்மை, அது சார்ந்த துறைகளில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து பரிந்துரைக்க உள்ளார்<br>"பொருளாதார விவகாரங்கள் தொடர்பான குழு"<br>- முன்னதாக நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆய்வு நடத்த "விவேக் தேப்ராய்" தலைமையிலான குழுவை மோடி அமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது |
| ஒவ்வொரு வியாழக்கிழமையும் டெங்கு ஒழிப்பு நாளாக கடைபிடிக்க முடிவு : அமைச்சர் விஜயபாஸ்கர் தகவல்<br>சென்னை: தமிழகத்தில் டெங்குவை ஒழிப்பது தொடர்பாக முதல்வர் பழனிசாமி தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுகாதார துறை அமைச்சர் விஜயபாஸ்கர், டெங்கு ஒழிப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதல்வர் அறிவுரை வழங்கியதாக குறிப்பிட்டார். மேலும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் டெங்கு ஒழிப்பு நாளாக கடைபிடிக்கப்படவுள்ளாத முடிவு... |
| ஓ.பி.சி(OBC) எனப்படும் இதர பிற்படுத்தப் பட்டோர் பிரிவினருக்கான மத்தியப் பட்டியலில் சேர்க்கப்படாத ஜாதிகளையும் சேர்ப்பது குறித்து ஆராய்வதற்கு, நீதிபதி "G.Rohini" தலைமையில் குழு ஒன்றை குழு ஒன்றை குடியரசுத் தலைவர் 'ராம்நாத் கோவிந்த்' அரசியலமைப்பு விதி 340ன் படி அமைத்துள்ளார் |

| |
|---|
| - மத்தியப்பட்டியலில் சேராத ஜாதிகளையும் சேர்ப்பது குறித்து, கமிஷன் ஆராயும். கமிஷன் தலைவர் நியமனத்தில் இருந்து,12 வாரங் களுக்குள் அறிக்கை கிடைக்கும். அவர் கூறினார்.<br>- இதன் மூலம் மத்தியில் சேர்க்கப்படாத உட்பிரிவுகளை சேர்ப்பதன் மூலம் அரசு வேலை மற்றும் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு கிடைக்கும் |
| #தமிழகம்<br>இனயம் துறைமுக திட்டத்தின் சிறப்பு பணி அலுவலராக ஐ.ஏ.எஸ் அதிகாரி விஷ்ணு நியமிக்கப்பட்டுள்ளார் |
| மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் 'உரிமம் பெற்ற துப்பாக்கிகள்'(Gun Licences) வைத்து இருக்கும் மாநிலங்கள் பட்டியலில் "உத்திர பிரதேச" மாநிலம் முதலிடத்தில் உள்ளது<br>- உத்திர பிரதேசத்தில் மட்டும் 12.77 லட்சம் உரிமம் பெற்ற துப்பாக்கிகள் உள்ளன<br>- அடுத்ததாக ஜம்மு&காஷ்மீரில் 3.69 லட்ச மக்கள் துப்பாக்கி உரிமம் பெற்றுள்ளனர்<br>- மாநிலங்களில் குறைந்தபட்சமாக கேரளாவில் 9459 நபர்கள் உரிமம் பெற்றுள்ளனர்<br>- தமிழகத்தில் 22,532 நபர்கள் உரிமம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது |
| அக்டோபர் மாதத்தின் முதல் திங்கள் அன்று உலக வசிப்பிட தினமாக அனுசரிக்கப்படுகிறது<br>2017ம் ஆண்டிற்கான உலகவசிப்பிட தினம் அக்டோபர் 2 அன்று அனுசரிக்கப்பட்டது<br>கருபொருள் :- Housing Policies: Affordable Homes |
| SAARC கூட்டமைப்பு நாடுகளின் நாடளுமன்ற தலைவர்கள் மாநாடு(SAARC Speaker, Parliamentarians conference) அக்டோபர் 4 அன்று இலங்கை தலைநகர் "கொழும்பில்" தொடங்கப்பட உள்ளது<br>- இதில் இந்தியாவின் சார்பில் மக்களவைத் தலைவர் "சுமித்ரா மஹாஜன்" '2030க்குள் நிலைக்கத்தக்க வளர்ச்சி பெறுவதற்கு ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய அவசியம்' என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார் |
| 2017ம் ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து சொந்த நாடுகளுக்கு பணம் பெறும் (Remittances) நாடுகள் பட்டியலில், 66 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடன் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் வகிக்கும் என உலக வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது |
| அதி வேகமாக வளர்ந்து வரும், பெட்ரோலிய பொருட்கள் உற்பத்தி செய்யும் ஆசிய நாடுகளில் சீனாவை பின்னுக்கு தள்ளி 2018ல் இந்தியா முதலிடத்தை பிடிக்கும் என "Moody's முதலீட்டாளர்கள் சேவை" நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது<br>Source: The Hindu |
| 2017-2031 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது தேசிய வனவிலங்கு நடவடிக்கை திட்டத்தை இந்தியா திங்கள் கிழமை வெளியிட்டது.<br>முதல் 1983 ஆம் ஆண்டில் முதல் திட்டம்<br>2002 முதல் 2016 வரை இரண்டாவது திட்டம்.<br>திங்களன்று உலக வனவிலங்கு திட்டம்<br>(GWP- Global Wildlife Programme ) மாநாட்டின் தொடக்க நாளில் சுற்றுச்சூழல் அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் இந்த திட்டம் வெளியிட்டார்.<br>2015 ல் தொடங்கப்பட்டது GWP. |
| கடந்த 2016ம் ஆண்டு செப்டம்பர் மாதம், இந்தியா மற்றும் ப்ரான்ஸ் நாடுகளுக்கிடையே கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி ரப்பேல் ரக விமானங்கள்(Rafale fighter Jets) வரும் 2019ம் ஆண்டு செப்டம்பர் முதல் இந்திய விமானப்படையில் சேர்க்கப்பட உள்ளன<br>- இந்த ஒப்பந்தத்தின்படி 36 விமானங்கள் இறக்குமதி செய்யப்பட உள்ளன, இதில் பாதி விமானங்கள் ஹரியானா மாநிலத்தில் உள்ள 'அம்பலா'(Ambala) விமானப்படை தளத்திற்கும் மீதம் உள்ள விமானங்கள் மேற்கு வங்கத்தில் உள்ள 'ஹஷிமாரா'(Hasimara) விமானப்படை தளத்திற்கும் வழங்கப்பட உள்ளன<br>Source: The Hindu |
| அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு முதல் கச்சா எண்ணெய் இறக்குமதி குஜராத் மாநிலத்தில் உள்ள "பாரதீப் துறைமுகத்தை"(Paradip Port) வந்து அடைந்துள்ளது<br>- 1.6 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்(IOC), பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்(BPCL) மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்(HPCL) நிறுவனத்திற்காக இறக்குதி செய்யப்பட்டுள்ளன |

| |
|---|
| - இதன் மூலம் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும் மூன்றாவது இடத்தில் உள்ள நாடுகளில் இந்தியாவும் இணைந்துள்ளது<br>Source: The Hindu |
| சர்வதேச பளுதூக்குதல் சம்மேளம் ரஷ்யா சீனா உள்ளிட்ட 9நாடுகளுக்கு அடுத்த ஓராண்டிற்கு சர்வதேச பளுதூக்குதல் போட்டியில் பங்கேற்க தடை விதித்துள்ளது<br>அமெரிக்காவில் ஏற்றுமதி செய்யப்பட்ட முதல் கச்சா எண்ணெய் கப்பல் ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகத்தை வந்து அடைந்துள்ளது<br>ஸ்பெயினிடம் இருந்து காட்டலோனியாவை தனி நாடாக பிரிக்க 90 சதவீதம் பேர் ஆதரவு அளித்துள்ளனர் |
| "SECURE Himalaya Project"<br>- இமயமலையின் சூழல் அமைப்பை பாதுகாக்கும் நோக்கில் "SECURE Himalaya Project" என்னும் 6 ஆண்டு திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது<br>- இத்திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகவ் சபையின் மேம்பாட்டு திட்டமும்(UNDP) இணைந்து தொடங்கியுள்ளன<br>- இமயமலை பரவியுள்ள மாநிலங்களில் உள்ள உயிரினங்களை பாதுகாக்கவும், வளங்களை பேணவும், வளங்களை நீடித்த உபயோகத்திற்கும், இமயமலையின் சூழல் அமைப்பை திரும்ப பெறும் நோக்கிலும் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது<br>Source: Press Information Bureau(PIB) |
| ஆரம்ப பள்ளிகளில் பணிபுரியும் பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் மத்திய மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சகம் ஆரம்பக்கல்வி பயிற்சிக்கான பட்டப்படிப்பை(D.EI.ED) தொடங்கியுள்ளது<br>- இதன் மூலம் அரசு பள்ளிகள், அரசு உதவிப்பெறும் ஆரம்பப் பள்ளிகளில் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் 15 லட்சம் ஆசிரியர்கள் பயனடைவர்<br>- மேலும் இந்த நிகழ்ச்சியின் போது ஆன்லைன் மூலம் கல்வி பெறும் "SWAYAM" வலைத்தளம் தொடங்கி ஓராண்டு நிறைவுற்றதையும் பிரகாஷ் ஜவடேக்கர் நினைவு கூர்ந்தார்<br>- D.EI.ED- Diploma in Elementary Education<br>Source: Press Information Bureau(PIB) |
| பண்டிட் தீன்தயாள் உபத்யாயாவின் நூற்றாண்டு பிறந்த நாளை கொண்டாடும் வகையில் மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் "Hastakala Sahyog Shivirs" என்ற தேசிய அளவில், கைத்தறி நெசவாளர்களுக்கான முகாம்களை அக்டோபர் 7 முதல் 17 வரை(Oct 7-17) நடத்த திட்டமிட்டுள்ளது<br>- இந்த முகாம்கள் மூலம் 1.2 லட்சம் நெசவாளர்கள் 421 கைத்தறி நெசவாளர்கள் தொகுதிகளில் இருந்து பயனடைவர்<br>Source: Press Information Bureau(PIB) |
| அமெரிக்க நாட்டினரால் வழங்கப்படும் NATIONAL ACADEMY OF PUBLIC ADMINISTRATION என்ற கௌரவ விருதினை பெற உள்ள முதல் இந்தியர் என்ற பெருமை ப்ராஜாப் திரூவேதி பெற உள்ளார் |
| தமிழகத்தில் அதிகளவு வாக்களர்களை கொண்ட தொகுதியாக "சோழிங்கநல்லூர்" தொகுதி உள்ளது, அதில் 6.24 லட்சம் வாக்களர்கள் உள்ளனர்<br>- மாநிலத்திலியே குறைந்தளவு வாக்களர்களைக் கொண்ட தொகுதியாக நாகை மாவட்டம் "கீழ்வேளூர்" தொகுதி உள்ளது, அங்கு 1.68 லட்சம் வாக்களர்கள் உள்ளனர் என தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி "ராஜேஷ் லக்கானி" தெரிவித்துள்ளார்<br>Source: Dinamani |
| டெல்லியில் உள்ள மேடம் தூசட் அருங்காட்சியகத்தில்(Madame Tussauds museum) பிரபல பாடகி "ஆஷா போஸ்லேவின்"Asha Bhosle) மெழுகு சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது<br>Source: Dinamani |
| அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்நத அஜித் வரதராஜ் பாயை மத்திய தகவல் தொடர்பு ஆணையத்தின் தலைவராக தொடர்ந்து 2வது முறையாக நியமிக்க செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது |
| உத்திர பிரதேச மாநிலத்தில் பெருந்திரள் திருமணத்திற்கு(Mass Marriage) உதவும் "Mukhyamantri Samoohik Vivaah Yojana" திட்டத்திற்கு அம்மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது<br>- இத்திட்டத்தின் மூலம் திருமணமாகும் தம்பந்திகளுக்கு ரூ.35000 வழங்கப்படும்<br>Source: All India Radio(AIR) |
| காந்திஜியின் சமாதி அமைந்துள்ள ராஜ்கோட்டில் முதன்முறையாக காந்திஜியின் உருவசிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சிலையை ராம் சுடர் என்ற சிலை வடிவமைப்பாளர் வடிவமைத்துள்ளார் |

| |
|---|
| கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவினை வழங்க மத்ரு பூர்ணா திட்டத்தினை கர்நாடக முதல்வர் சீத்தாராமையா துவங்கி வைத்துள்ளார் |
| சுகாதார அமைச்சகம் சிறந்த துறைக்கான விருதை 'சுச்ச்தா பக்வாடா' ('Swachhta Pakhwada') விற்கு வழங்கியுள்ள்து...<br>சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் ஸ்வட்ச் பக்வாடாவின் பங்களிப்பிற்கான சிறந்த துறையாக தேர்வு செய்யப்பட்டு , இது குடிநீர் மற்றும் சுகாதார துறை அமைச்சகத்தின் ஸ்வச்ச் பாரத் மிஷனின் முன்முயற்சிக்காகவும் இந்த விருது அளிக்கப்பட்டது.<br>அக்டோபர் 2 ம் தேதி சுவாச் பாரத் மிஷனின் மூன்றாவது ஆண்டு விழாவில் இந்த விருது சி.சி. மிஸ்ரா, செயலாளர் (HFW - Health and Family Welfare) பெற்றார். |
| ஐ.நா., சபையின் உலக சுகாதார நிறுவனத்தின்(டபிள்யு.எச்.ஓ.,) துணை இயக்குனராக தமிழகத்தைச் சேர்ந்த சவுமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.<br>உலக சுகாதார நிறுவனத்தின் துணை இயக்குனர் பதவிக்கு, அதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் சார்பாக ஒருவரை பரிந்துரை செய்தன. இந்தியா சார்பில் சவுமியா சுவாமிநாதன் பரிந்துரைக்கப்பட்டிருந்தார்.<br>இந்நிலையில், உலக சுகாதார நிறுவனத்தின் உயர் பதவிகளில் ஒன்றான துணை இயக்குனர் பதவிக்கு, சவுமியா சுவாமிநாதன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.<br>இவர், பசுமைப் புரட்சியின் தந்தை என அழைப்படும் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மகள். குழந்தைகள் நல மருத்துவரான இவர், இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளார். |
| உலக விண்வெளி வாரம்(World Space Week) (4–10 October)<br>Theme 2017 : "Exploring New Worlds In Space" |
| அருணாச்சல பிரதேச முதலமைச்சர் பெமா கந்து, டிசம்பர் 31, 2017 ம் ஆண்டுக்குள் அருணாச்சல பிரதேசம் திறந்த வெளி கழிப்பிடமில்லா மாநிலமாக உருவாக்கவிருப்பதாக அறிவித்தார். இந்த இலக்கை அடைய மாநில அரசு தீவிரமாக முயற்சி செய்து வருகின்றது என்றார். |
| <u>அரவிந்த் குமார் கோயல் குழு</u><br>மனைவியை கொடுமைப்படுத்தும் வெளிநாடுவாழ் இந்தியர்களின் கடவுச்சீட்டை முடக்க பரிந்துரைத்த குழு |
| தேசிய பூங்காக்கள்,காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் இந்தியாவும் நேபாளமும் இணைந்து முதன்முறையாக புலிகள் கணக்கெடுப்பு பணியை விரைவில் துவக்க உள்ளது |
| 2017ம் ஆண்டிற்கான உலகளாவிய தொழில் முனைவோருக்கான உச்சி மாநாடு ஹைதராபாத்தில் நவம்பர் மாதம் நடக்க உள்ளது.<br>கருபொருள் :- Women First, Prosperity for All |
| சிட்னியில் நடந்த மிஸ் இந்தியா ஆஸ்திரோலியாவிற்கான போட்டியில் ஆர்ஜூ சிங் மிஸ் இந்தியா-ஆஸ்திரேலியாவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் |
| 2017ம் ஆண்டிற்கான பீம்ஷன் ஷோஜி விருது மாணிக் பிதேவிற்கு [ Manik Bhide ] வழங்கப்பட்டுள்ளது |
| இங்கிலாந்து நாட்டின் முதல் பெண் உச்ச நீதிமன்ற தலைவராக [ first female president]<br>பிரன்டா ஹாலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் |
| மகாத்தமா காந்தியின் சுயசரிதையான THE STORY OF MY EXPERIMENT WITH TRUTH புத்தகத்தை நேபாளி மொழியில் ஸ்ரீ சேகர் கிரி என்பவர் மொழிபெயர்த்துள்ளார். |
| லாரி ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு இலவச கண் பார்வை பரிசோதனை மற்றும் கண் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்ச்சி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால்(NHAI) தொடங்கப்பட்டுள்ளது<br>- தெளிவான கண் பார்வை மற்றும் சாலை பாதுகாப்பை நோக்கமாக கொண்டு இந்நிகழ்ச்சி தொடங்கப்பட்டுள்ளது |
| கொரிய நிறுவனமான "POSCO FIASCO" நிறுவனம் ஒடிசாவை விட்டு வெளியேறியதை தொடர்ந்து, தொழிற்சாலைகளுக்கென 1.2 லட்சம் ஏக்கர் அளவில் மாநிலம் முழுவதும் "நில வங்கியை"(Land Bank) தொடங்க "ஒடிசா" மாநில அரசு முடிவெடுத்துள்ளது<br>- இந்த நில வங்கியின் மூலம் தொழிற்சாலைகளுக்காக நிலம் கையகப்படுத்துதல் பிரச்சினைகள் குறையும் |
| பாதுகாப்பு படை வீரர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் முன்னேற்றம் தொடர்பான கோப்புகளை பதிவேற்றம் செய்வதற்கு "ARPAN 3.0" மென்பொருள் இந்திய இராணுவத்தால் வெளியிடப்பட்டுள்ளது<br>- இராணுவ மென்பொருள் மேம்பாட்டு மையம்(ASDC) மற்றும் "Tech Mahindra" நிறுவனமும் இணைந்து இந்த மென்பொருளை உருவாக்கியுள்ளது |

| |
|---|
| - இதன் மூலம் 12 லட்சம் இராணு வீரர்கள் தங்கள் ஊதியம், வெளியேறும் கால அளவு, மற்ற வீரர்களுடன் பதவியுர்வு ஒப்பீடு ஆகியவற்றை அறிய முடியும் |
| ஆச்சரியமளிக்கும் வகையில் சக்தி வாய்ந்த சூறாவளி(Storm) செவ்வாய்(Mars) கிரகத்தை தாக்கியதையொட்டி, "ஒருதிறப்பொன்"(Aurora) என்று அழைக்கப்படும் வண்ணமயமான காட்சியமைப்பு உருவாகியுள்ளது<br>- சூறாவளி தாக்கியதையடுத்து கதிரியக்க நிலை இரடிப்பானதை தொடர்ந்து இந்த Aurora உருவாகியுள்ளது<br>- இதனை NASAவைச் சேர்ந்த MAVEN விண்கலம் கண்டறியுள்ளது<br>- 2014ம் ஆண்டு முதல் செவ்வாயின் கதிரியக்க ஆராய்ச்சிகளில் MAVEN ஈடுபட்டு வருகிறது, இதுவரை தோன்றிய 25க்கும் மேற்பட்ட Auroraக்களில் இது மிகவும் பிரகாசமானதாகும்<br>குறிப்பு: Auroraக்கள் பற்றிய அறிய 7ம் இரண்டாம் பருவம் வகுப்பு வானிலையும் காலநிலையும்(Weather and Climate) பாடத்தை பார்க்கவும் |
| உத்தரபிரதேசத்தில் 100 அடி பிரமாண்ட சிலையுடன் மோடிக்கு கோவில்<br>இந்த கோவில் உத்தர பிரதேச மாநிலம் மீரட் அருகே கட்டப்பட உள்ளது. இதை ஜே.பி.சிங் என்பவர் கட்டுகிறார். இவர், உத்தரபிரதேச மாநில பொதுப்பணித்துறை நீர்ப்பாசன கோட்டத்தில் என்ஜினீயராக பணியாற்றி கடந்த 29-ந் தேதிதான் ஓய்வு பெற்றார்.<br>ஆரம்பத்தில் இருந்தே ஜே.பி.சிங் பிரதமர் மோடியின் தீவிர ஆதரவாளராக இருந்து வந்தார். மோடியின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அவரை மிகவும் கவர்ந்தது. மேலும் மோடி கொண்டு வந்துள்ள வளர்ச்சி திட்டங்கள் அவரிடம் ஈர்ப்பை ஏற்படுத்தியது. |
| தமிழகத்தில் 5,95,88,002 வாக்காளர்கள் உள்ளனர்- தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி அறிவித்துள்ளார் |
| GIFT (Gujarat International Finance Tec-City )நகரம் (International Financial Services Centre) சர்வதேச நிதி மைய குறியீட்டில் 10 வது இடம் பிடித்துள்ளது.<br>லண்டன் உலகளாவிய நிதி மைய குறியீட்டு (GFCI - Global Financial Centres Index ) சமீபத்திய கணக்கெடுப்பில் 10 வது இடம் பெற்றுள்ளது. |
| ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு காந்தி ஜெயந்தி நிகழ்ச்சியில் சுவாச் ஆந்திர மிஷன் (Swachh Andhra Mission) திட்டத்தை தொடங்கிவைத்தார்.<br>ஸ்வட்ச் ஆந்திராவின் நல்லெண்ண தூதராக பி.வி. சிந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்<br>ஆந்திரப் பிரதேச ஆளுநர் ஈக்குடு சீனிவாசன் லட்சுமி நரசிம்மன். |
| தொலைத்தொடர்பு நிறுவனங்களான "IDEA" மற்றும் "Vodafone" இணைப்பு 2018 மார்ச் மாதத்திற்குள் முடிவடையும் என அந்த நிர்வாகங்கள் தெரிவித்துள்ளது |
| மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம், உலக வங்கி மற்றும் UN மேம்பாட்டு அமைப்பு(UNDP) ஆகியவை இணைந்து நடத்தும் உலகளாவிய வனவிலங்கு திட்ட மாநாடு(Global Wildlife Program) 'டெல்லியில்' நேற்று(02-10-2017) தொடங்கியுள்ளது<br>- மேலும் இம்மாநாட்டின் போது தேசிய வனவிலங்கு உயிர்வாழ் திட்டம் 2017-2031ம் வெளியிடப்பட்டுள்ளது |
| ஆந்திர மாநில அரசு NTR வீடு திட்டத்தை (NTR Housing Scheme) தொடங்கியுள்ளது<br>- இத்திட்டத்தின்படி 12 லடசம் வீடுகள் கிராமப்புறத்திலும், 5.40 லட்சம் வீடுகள் நகர்ப்புறத்திலும் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது |
| 2017ம் ஆண்டிற்கான இயற்பியல் பிரிவில் நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த 3 நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது<br>1. Rainer Weiss<br>2. Barry C. Barish<br>3. Kip S. Thorne<br>- LIGO ஆய்வுக்கூடத்தில் ஈர்ப்பு அலைகள் கண்டுபிடிப்பு தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது |
| பிரதமர் நரேந்திர மோடி இமாச்சல பிரதேச மாநிலம் "பிலாஷ்பீரில்"(Bhilaspur) புதிய AIIMS மருத்துவனைக்கான அடிக்கலையும், யுனா (UNA) நகரில் புதிய IIT தொடங்குவதற்கான அடிக்கல்லையும், காங்க்ரா (Kangra) நகரில் புதிய SAIL இரும்பு எஃகு ஆலைக்கான அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்<br>Source: Ministry Of Information Broadcasting(MIB) |
| இந்திய விமானப்படையின் முதல் பெண் போர் விமான விமானிகளாக தேர்வு செய்யப்பட்ட "பாவனா காந்த், மோகனா சிங் மற்றும் அவானி சத்ருவேதி" ஆகிய மூவரும், டிசம்பர் மாதம் முறைப்படி பணி நியமனம் பெற்று பணியைத் தொடங்கப் போவதாக விமானப்படை தளபதி பி.எஸ். தனோயா தெரிவித்துள்ளார்<br>- இரண்டாவது 3 பெண் விமானிகள் தற்போது பயிற்சி பெற்று வருவதாகவும், அவர்கள் அடுத்த ஆண்டு இந்திய |

| |
|---|
| விமானப்படையில் சேர்க்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்<br>குறிப்பு: கடந்த ஆண்டு குருப்1 மெயின்ஸ் தேர்வில் 3 மதிப்பெண் பகுதியில் இந்த கேள்வி கேட்கப்பட்டது |
| ஆகஸ்ட்.,20ம் தேதி உலக கொசு ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது<br>அக்டோபர் மாதம் முதல் பிரதி வியாழன் அன்று டெங்கு கொசு ஒழிப்பு தினம் தமிழகத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>இன்று முதல் வியாழன் 05.10.2017 |
| "புதுமைப் பள்ளித் திட்டம்"<br>- சென்னையில் புத்தாக்கமான பள்ளிகளை உருவாக்கிட, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இணைந்து செயல்படுத்தும் "புதுமைப் பள்ளித் திட்டம்" செயல்பாடுகளை பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் காமன்வெல்த் அலுவலகத்திற்கான இணை அமைச்சர் "மார்க் ஃபீல்டு" பார்வையிட்டுள்ளார்<br>- பிரிட்டிஷ் கவுன்சிலின் "மெக் ஆர்தர்" அறக்கட்டளையின் சார்பில் சென்னையில் மொத்தம் 70 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது<br>Source: Dinamani |
| நாடு முழுவதும் தேர்தலை திறம்பட நடத்துவதற்காக "வாக்காளர் பதிவு அதிகாரி ஒருங்கிணைப்பு" என்ற இணையதள செயலியை டெல்லியில் தேர்தல் கமிஷன் அறிமுகம் செய்துள்ளது<br>==> இந்நிகழ்ச்சியில் EVM(Electronic Voters Machine) (ம) VVPAT(Voters Verified Paper Audit Trail) எந்திரங்கள் தேவையான அளவு கிடைத்துவிட்டால் 2018 ல் பாராளுமன்றம் (ம) சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த தயார் என தேர்தல் கமிஷனர் ஒ.பி.ராவத் கூறியுள்ளார் |
| மங்கோலிய நாட்டின் புதிய பிரதமராக உக்ஹானா குரேஷ்ஷூக்கை (Ukhnaa Khurelsukh) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.<br>Khurelsukh முன்பு இராணுவத்தில் பணியாற்றினார். இவர் மங்கோலியாவின் 30 வது பிரதம மந்திரி ஆவார். |
| வரும் 2022ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் மரபுசாரா எரிசக்தித் திறன்(Renewable energy) இரு மடங்கை விட அதிகமாக இருக்கும் என சர்வதேச மரபுசாரா எரிசக்தி முகமை(International Energy Agency) தெரிவித்துள்ளது<br>- இது தொடர்பாக IEAன் சமீபத்திய அறிக்கையின்படி தற்போது இந்தியாவின் திறன் 58.30 ஜிகா வாட்டாக(GW) உள்ளது வரும் 2022ஆம் ஆண்டுக்குள் 175GW உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கயிக்கப்பட்டுள்ளது<br>- இதன் மூலம் முதல் முறையாக மரபுசாரா எரிசக்தி திறனில் இந்தியா ஐரோப்பிய யூனியனை முந்த இருக்கிறது<br>- அதே சமயம் இந்த காலக்கட்டத்தில் சீனா 360GW மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது<br>Source:Dinamani |
| மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லியின் பங்களாதேஷ் பயணத்தின் போது அந்நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் சமூகத்துறை மேம்பாடுகள் தொடர்பாக $4.5 பில்லியன் மதிப்பிலான 3வது கடன்சார்புத் தொடர்(Line of Credit-LoC) ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளார்<br>- முதல் LoC ஆகஸ்ட் 2010லும், இரண்டாவது Loc மார்ச் 2016லும் கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது<br>Source: The Hindu |
| ஆந்திர பிரதேசத்தில், போலாவரம் நீர்ப்பாசனத் திட்டம் வரும் 2019ஆம் ஆண்டு மக்களவை தேர்தலுக்கு முன் பயன்பாட்டிற்கு வரும் என்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்<br>- இந்த நீர்ப்பாசன திட்டத்தை 2018ஆம் ஆண்டு டிசம்பருக்குள் ஆந்திர முதல்வர் முடிக்குமாறு கோரிக்கை விடுத்து இருந்தது குறிப்பிடத்தக்கது<br>"Polavaram Project"<br>- கோதாவரியில் வீணாகும் தண்ணீரை சேமித்து கிருஷ்ணா நதியுடன் இணைக்க ஆந்திர அரசுமுடிவு செய்தது, இதற்காக கோதாவரி நதியில் 'போலாவரம்' என்ற இடம் அருகே நீர்த்தேக்கம் கட்டி அங்கிருந்து 174 கி.மீக்கு கால்வாய் அமைத்து கிருஷ்ணா மாவட்டம் விஜயவாடா அடுத்த பெர்ரி கிராமம் அருகே கிருஷ்ணா நதியுடன் இணைக்க இத்திட்டம் கொண்டு வரப்பட்டது<br>Source: Dinamani |
| ஓரின சேர்க்கை மரண தண்டனைக்கு உட்பட்டது அல்ல என்ற தீர்மானம் ஐ.நாவில் தீர்மானம் வெற்றி பெற்றது.<br>இயற்கைக்கு மாறானது ஓரினச்சேர்க்கை என்பதால் அதை தடை செய்ய வேண்டும் என்றும் ஓரினச்சேர்க்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும் என்றும் இந்தியா, சீனா உள்பட பல நாடுகள் வலியுறுத்தி வருகின்றன<br>இந்த நிலையில் இதுகுறித்த வாக்கெடுப்பு ஒன்று ஐநாவில் சமீபத்தில் நடைபெற்றது. 47 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் வாக்களித்தனர். |

| |
|---|
| ஓரின சேர்க்கை மரண தண்டனைக்கு உட்பட்டது அல்ல என்ற தீர்மானத்திற்கு ஆதரவாக 27 நாடுளும், எதிராக இந்தியா, சீனா, அமெரிக்கா, 13 நாடுகள் வாக்களித்தன. ஆனால் இந்தியாவின் முயற்சி வீண் ஆனது. அதிகபட்ச வாக்குகள் அடிப்படையில் ஓரின சேர்க்கை மரண தண்டனைக்கு உட்பட்டது அல்ல என தீர்மானம் ஐ. நா. வில் வெற்றி பெற்றது. |
| வேதியியல் நோபல்பரிசு :<br>==> ஜாக்குஸ் டியூபோ செட் (Switzerland Lousen University), ஜோக்கிம் பிராங் (USA Columbia University), ரிச்சர்ட் ஹண்டர்சன் (London Campridge University) ஆகிய 3 பேருக்கு வழங்கப்படுகிறது<br>==>#Shortcut : "ரிச்சா" இருக்க "ஜாக்குஸ்"க்கு "பிராங்க்கா ஜோக்" அடிக்கிற #Chemistry workout ஆகுது<br>==> இவர்கள் மூலக்கூறுகளை முப்பரிமாண முறையில் துல்லியமாக படம்பிடிக்க உதவும் "#கிரையோ_எலக்ட்ரான்_நுண்ணோக்கி" யை வடிவமைத்துள்ளனர்<br>==> இந்த நுண்ணோக்கியால் உயிர்வேதியியல் துறையில் ஒரு புதிய சகாப்தம் நகர்த்தப்பட்டு இருப்பதால் இவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது<br>==> பரிசுத்தொகை 9 மில்லியன் சுவீடிஷ் குரோனர் ( 7 கோடி) |
| மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம், உலக வங்கி மற்றும் UN மேம்பாட்டு அமைப்பு(UNDP) ஆகியவை இணைந்து நடத்தும் உலகளாவிய வனவிலங்கு திட்ட மாநாடு(Global Wildlife Program) 'டெல்லியில்' நேற்று(02-10-2017) தொடங்கியுள்ளது<br>- மேலும் இம்மாநாட்டின் போது தேசிய வனவிலங்கு உயிர்வாழ் திட்டம் 2017-2031ம் வெளியிடப்பட்டுள்ளது |
| நன்றி - current affairs for competitive exam<br>நமாமி கங்கை திட்டத்தின் கீழ் அலகாபத்தில் திரிவேணி சங்கமம் ( கங்கை, யமுனை , சரஸ்வதி சங்கமிக்கும் இடம் ) பகுதியில் ஆமைகள் சரணாலயம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| இயற்பியல் நோபல் பரிசு :<br>==> பேரி பேரிஷ் (USA) , கிப் தோர்ன் (USA) ,ரெயினர் வெயிஸ் (ஜெர்மனியில் பிறந்தவர்) ஆகியோர்களுக்கு அளிக்கப் படுகிறது<br>==> #ஈர்ப்பு_விசை_அலைகள் (பொது சார்பியல் கோட்பாட்டின் ஒரு பகுதி) குறித்த கண்டுபிடிப்புக்காக வழங்கப்படுகிறது<br>==>#Shortcut : TRB ( T-தோர்ன், R-ரெயினர், B-பேரி பேரிஷ்)<br>#நன்றி : Suresh Tnpsc (Tnpsc Ocean Grup) |
| 2017ம் ஆண்டிற்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசு பிரிட்டனைச் சேர்ந்த ஆங்கில எழுத்தாளர் "Kazuo Ishiguro"விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது |
| இந்தியாவின் இரண்டாம் ஸ்கார்ப்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல் "ஐ.என்.எஸ். கந்தேரி"(INS Khanderi) தனது கடற்பயண சோதனைகளை(Sea Trails) தொடங்கியுள்ளது<br>- மேலும் இந்தியவின் மூன்றாவது ஸ்கார்பியன் வகை நீர்மூழ்கி கப்பலான "INS Karanj" இந்த வருட இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்<br>- கடந்த செப்டம்பர் 21 அன்று "INS Kalvari" மும்பையில் உள்ள மசாகன் கப்பல் கட்டும் நிறுவனம் மற்றும் ப்ரான்சின் "DCNS" நிறுவனத்தின் உதவியுடன் இந்திய கப்பற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது<br>- Project 75 திட்டத்தின் கீழ் 6 நீர்மூழ்கி கப்பல்கள் செய்து இந்திய கப்பற்படைக்கு தர ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது, மீதமுள்ள 3 நீர்மூழ்கி கப்பல்கள் 2020-21க்குள் இந்திய கப்பற்படையில் சேர்க்கப்படும்<br>Source: The Hindu |
| இந்தியாவில் 10ல் 8 நபர்கள் இணைய வழி தொந்தரவுக்கு(online harassment) ஆளாகின்றனர் எனவும், சமூக வலைத்தளங்களில் 41 சதவீத பெண்கள் பாலியல் துன்புறுத்துலுக்கு(sexual harassment) உள்ளாகிறார்கள் எனவும் "Symantec" நிறுவனம் தனது ஆய்வில் தெரிவித்துள்ளது<br>Source: The Hindu |
| இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2017 - பிரிட்டன் நாட்டைச்சாரந்த கசுவோ இஷிகுரோ.. |
| பார்வயாளர்களை கவரும் வகையில் முதல் டி10 கிரிக்கெட் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரகத்தில் நடக்க உள்ளது |
| காவலர்களின் உத்தரவு இல்லாமல் வீடுகளில் சோதனை மற்றும் தேடல்களை நடத்த வகையிலான புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் (ANTI TERROR LAW) பிரஞ்சு நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது |
| வடகிழக்கு மாநிலங்களில் உள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்வது தொடர்பாக, NITI Aayog துணைத் தலைவர் "ராஜீவ் குமார்" தலைமையில் உயர்மட்ட குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது<br>- இக்குழு 2018 ஜீன்க்குள் தனது அறிக்கையை சமர்பிக்கும் |

Source: PIB

அக்டோபர் 5= உலக ஆசிரியர் தினம்
கருபொருள் ;- TEACHING IN FREEDOM, EMPOWERING TEACHERS

இந்திய ராணுவத்தின் போரிடும் திறனை அதிகரிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகள் அளித்த "டிபி ஷெகாத்கர்"(DB Shekatkar) குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவது பற்றி பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் ஆய்வு செய்தார்
"DB Shekatkar குழு"
- இந்திய இராணுவத்தில் சீர்த்திருத்தம்(Army Reforms) ஏற்படுத்த மத்திய அரசு 2016ம் ஆண்டு "DB Shekatkar" தலைமையில் குழு ஒன்றை அமைத்தது
- இந்த குழு டிசம்பர் 2016ல் தனது பரிந்துரைகளை மத்திய அரசிடம் சமர்பித்தது
- இக்குழுவின் 65 பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது, 34 பரிந்துரைகள் மீது எந்த வித முடிவும் மத்திய அரசு எடுக்கவில்லை
"34 பரிந்துரைகளை அமல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்"
- DB Shekatkar குழுவின் பரிந்துரையின்படி முப்படைகளுக்கும் பொதுவான தலைமைத் தளபதியை நியமிக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது, இதனால் முப்படைகளும் பாதிக்கப்படும் என மத்திய அரசு கருதியதே காரணமாகும்
"DB Shekatkar குழு முக்கிய பரிந்துரைகள்"
- முப்படைகளுக்கும் பொதுவான தலைமைத் தளபதி
- இந்திய இராணுவத்தில் போரிடும் துறை அல்லாது அலுவலக ரீதியில் அதுகாரிகள், இளநிலை அதிகாரிகள் போன்ற பதவிகளில் 57000 பேர் பணியாற்றுகின்றனர், அவர்களை போரிடும் களத்தில் தயார்படுத்துவது
- இராணுவ வீரர்களின் ஓய்வு பெறும் வயதை இரண்டாண்டு அதிகரிப்பது போன்றவை
Source: Dinamani

நாட்டின் வேறுபட்ட கலாச்சாரம் மற்றும் பராம்பரியத்தை எடுத்துறைக்கும் வகையில், "Tourism For all" என்ற தலைப்பில் "Prayatan Parv 2017" என்ற நிகழ்ச்சியை, மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் தேசிய அளவில் இன்று முதல்(05-10-2017) இம்மாதம் 25ம் தேதி வரை நடத்த உள்ளது
Source: PIB

"The Future We Need Campaign"
- புதிய தேசிய கனிம கொள்கையை(New National Mineral Policy) பிரபலபடுத்தவும், தலைமுறைகளுக்கிடையே உள்ள இடைவெளியை குறைத்து கனிம வளங்களை பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சில தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து "The Future We Need Campaign" இயக்கத்தை தொடங்கியுள்ளது
- புதிய தேசிய கனிமக் கொள்கையை வகுக்க அமைக்கப்பட்ட "K.R.Rao" குழு தனது அறிக்கையை அக்டோபர் 31 அன்று மத்திய அரசிடம் சமர்பிக்கப்பட உள்ளது
Source: The Hindu

2017ம் ஆண்டிற்கான "தேசிய சமஸ்கிருத திருவிழா" (Rashtriya Sanskriti Mahotsav) அக்டோபர் 7 முதல் 9 வரை குஜராத் மாநிலம் "அகமதாபாத்" நகரில் மத்திய கலாச்சார துறை அமைச்சகத்தின் சார்பில் நடைபெற உள்ளது
Source: PIB

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த H1B விசா வழங்கும் நடைமுறையை "அமெரிக்கா" மீண்டும் தொடங்கியுள்ளது
- அமெரிக்காவில் வெளிநாட்டினர் தங்கி பணிபுரிய "H1B" விசா மூலம் விண்ணபித்து, விண்ணப்பித்த 15 நாட்களில் இந்த விசா வழங்கப்படும்
- இந்த விசாவுக்கான விண்ணப்பங்கள் அளவுக்கு அதிகமாக குவிந்ததால், H1B விசா வழங்கும் முறையை குடியேற்ற அதிகாரிகள் கடந்த ஏப்ரல் மாதம் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தனர்
Source: Dinamai

தமிழக பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவ் இன்று( 5/10/17) விடைபெற்றார்: சென்னை விமான நிலையத்தில் பிரிவுபசார விழா நடைபெற்றபொழது...

தமிழகத்தின் 29 வது கவர்னராக பன்வாரிலால் புரோகித் நாளை பதவியேற்பு
==> சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி பதவி பிரமாணம் செய்து வைக்கிறார்
==> இதற்கு முன்பு அசாம் மாநில கவர்னராக இருந்தார்
==> மராட்டிய மாநிலம் விதர்பா பகுதியை சேர்ந்தவர்

| |
|---|
| ==> தற்போது "தி ஹதாவதா" என்ற நாளிதழின் உரிமையாளர், நிர்வாக ஆசிரியராகவும் (ம) நாக்பூரில் பொறியியல் கல்லூரி ஒன்றின் தலைவராக உள்ளார்<br>==> இந்தியா சுதந்திரம் அடைந்த போது தமிழக கவர்னராக லெப்டினெட் ஜெனரல் சர் ஆர்சிபால் எட்வர்ட்நை இருந்தார் |
| துபாய்: இந்திய டிரைவரை தீ விபத்தில் இருந்து காப்பாற்றிய பெண்ணுக்கு ஐக்கிய அரபு அரசு விருது வழங்கியுள்ளது. ஜாவஹெர் சயீப் அல் குமைத்தி என்பவர் அஜ்மான் நகரை சேர்ந்தவர் ஆவர். ராஸ் அல் கமையா நகர மருத்துவமனையில் 2 நாட்களுக்கு முன்பு தனது தோழியை சந்தித்து விட்டு காரில் அஜ்மான் திரும்பிக் கொண்டிருந்தார். அல் குமைத்தி காரை ஓட்டி வந்தபோது சாலையில் 2 சரக்கு லாரிகள் மோதிக்கொண்டு தீ பிடித்து எரிந்துள்ளது. அந்த லாரிகளின் டிரைவரான இந்தியாவை சேர்ந்த ஹர்கிர்த் சிங் என்பவரின் உடலில் தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது. அப்போது அல் குமைத்தி, தனது தோழி அணிந்திருந்த மேல் அங்கியை கழற்றி மின்னல் வேகத்தில் காரில் இருந்து கீழே இறங்கிச் சென்றுள்ளார். |
| ஆண்கள் கிரிக்கெட் போட்டிக்கு முதன்முறையாக பெண் ஒருவர் அம்பயராக நியமிக்கப்பட்டுள்ளார்.<br>ஆஸ்திரேலியாவில் உள்ளூர் அணிகள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் ஆஸ்திரேலிய லெவன் அணியுடன் உள்ளூர் அணிகள் மோதுகின்றன. இதில் ஆஸ்திரேலியா லெவன், நியூசவுத் வேல்ஸ் அணிகள் வரும் ஞாயிற்றுக்கிழமை மோத உள்ளன. இந்தப் போட்டியில் கிளைர் போலோசாக் என்ற பெண், அம்பயராக களமிறங்குகிறார். இவர் பிரபல நடுவர் பால் வில்சனுடன் இணைந்து இதில் நடுவராக<br>செயல்பட உள்ளார்.<br>29 வயதான கிளைர், இங்கிலாந்தில் நடந்த பெண்கள் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் நான்கு போட்டிகளுக்கு நடுவராக செயல்பட்டுள்ளார். ஆண்கள் கிரிக்கெட்டுக்கு நடுவராக செயல்பட இருப்பது பற்றி கூறும்போது, 'நான் அதிகமாக கிரிக்கெட் பார்ப்பேன். எனது பெற்றோர் நடுவர் தேர்வுக்கு படிக்க வைத்தனர். ஆனால், இதற்கான தேர்வில் சிலமுறை பெயில் ஆகிவிட்டேன். பிறகு போராடி வென்றேன். ஆனால் நான் ஒரு போதும் கிரிக்கெட் விளையாடியதில்லை' என்கிறார் கிளைர். |
| 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக்கோப்பை கால்பந்தாட்டம் முதல்முறையாக இந்தியாவில் நடைபெறுகிறது....<br>போட்டியை நடத்தும் நாடு இந்தியா...<br>இந்தியா உட்பட இதில் கலந்துகொள்ளும் நாடுகளின் (அணிகள்) எண்ணிக்கை = 24 அணிகள்<br>06.10.2017 முதல் 28.10.2017 வரை நடைபெறுகிறது...<br>நடைபெறும் இடங்கள்...<br>1) கொல்கத்தா<br>2) கொச்சி<br>3) டெல்லி<br>4) நவிமும்பை<br>5) கௌஹாத்தி<br>6) மர்மகோவா<br>தொடக்க நாளில் (06.10.2017) மோதும் அணிகள் = கொலம்பியா & கானா = இடம் டெல்லி<br>இந்தியா தொடக்க ஆட்டத்தில் 06.10.2017 -ல் அமெரிக்காவை எதிர்த்து விளையாடுகிறது..<br>இறுதிப்போட்டி அக்டோபர் 28-ல் நடைபெறும் இடம் கொல்கத்தா. |
| கனடாவின் ஒண்டரியோ மாகாணத்தின் M.P யும், சீக்கியருமான ஜக்மீத் சிங், அந்நாட்டின் மிகப்பெரிய இடதுசார்பு கட்சியான புதிய ஜனநாயக கட்சியின் தலைவராக தேர்வு<br>==> கனடாவில் வெள்ளையர் அல்லாத ஒருவர் மிகப்பெரிய அரசியல் கட்சியின் தலைவராக இருப்பது இதுவே முதல்முறை. |
| ஆப்பிரிக்க நாடான கானாவில் உள்ள இந்திய தொழில் அதிபர் #பிரேந்திர_சஸ்மாலுக்கு இந்த ஆண்டின் #சர்வதேச_தொழில்_அதிபர் விருது கிடைத்துள்ளது |
| #தாஜ்மகால்_நீக்கம் :<br>==> உ.பி யின் சுற்றுலா தலங்கள் அடங்கிய புதிய புத்தகத்தில் உலக அதிசயமாக திகழும் #தாஜ்மகால்இடம் பெறவில்லை. இது புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது ==> இதற்கு முன்பும் "உ.பி யின் கலாச்சார பாரம்பரியம் " என்ற தலைப்பிலான பகுதியிலும் தாஜ்மகால் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது |
| #மருத்துவ_நோபல்பரிசு :<br>==> அமெரிக்காவை சேர்ந்த மரபணு விஞ்ஞானிகள் ஜெப்ரி சி.ஹால், மைக்கேல் ரோஸ்பாஷ், மைக்கேல் டபள்யு. யங் |

ஆகிய 3 பேருக்கு வழங்கப் படுகிறது
==> #Short cut : (Hall ல Young ஆன Rose இருக்கு)
==> "#மூலக்கூறுகளின்_செயல்பாடுகள் " பற்றிய ஆராய்ச்சிகாக இவர்கள் தேர்வு
==> மனிதர்கள், தாவரங்கள், விலங்குகள் ஆகிய அனைத்து உயிரினங்களின் உடலிலும் "#உயிர்க்கடிகாரம்" என்ற அமைப்பு செயல்படுகிறது
==> இவைதான் உயிரினங்களின் 24 மணிநேர சுழற்சியில் தூக்கம், விழிப்பு ஆகியவை சீராக நடைபெறுவதை செயல் படுத்துகின்றன
==> இதற்காக இவர்கள் ஒரு #ஈ யை மாதிரி உயிரினமாக வைத்து ஆராய்ச்சி செய்து வெற்றி பெற்றுள்ளனர்

---

மஹாவீர் ரகுநாதன்;
இத்தாலியின் இமோலாவி என்ற இடத்தில் நடைபெற்ற ஐரோப்பிய கார் பந்தய சாம்பியன்ஷிப்பை வென்ற முதல் இந்திய வீரர் ஆவார்...

---

பரம் ஷா (Param Shah) வர்த்தகம் மற்றும் தொழில்துறை இந்திய அறக்கட்டளை கூட்டமைப்பு (Federation of Indian Chambers of Commerce and Industry (FICCI) இங்கிலாந்துக்கான இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்திய தொழில் நுட்பம் மற்றும் தொழிற்துறை ஆகியவற்றின் கூட்டமைப்பு இந்த அறிவிப்பை வெளியிட்டது.

---

முதன் முறையாக இந்திய உதிரி பாகங்களை கொண்டு ரயில் பெட்டிகள் தயாரிப்பு
சென்னை: மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் நாட்டிலேயே முதன் முறையாக சென்னை ஐ.சி.எஃப் ரயில் பெட்டி தொழிற்சாலையில் இந்திய உதிரி பாகங்களை கொண்டு ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1995-ம் ஆண்டு முதல் ஜெர்மன் நாட்டுடனான ஒப்பந்த அடிப்படையில் சென்னை, புனே, பஞ்சாப் உள்ளிட்ட இடங்களில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
இந்நிலையில் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.9 கோடி செலவில் ஐ.சி.எஃப் ரயில் பெட்டி தொழிற்சாலையில் இந்திய உதிரிபாகங்களை கொண்டு இரண்டு குளிர்சாதன வசதி ரயில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை ஐ.சி.எஃப் பொது மேலாளர் இன்று பார்வையிட்டார். இதுகுறித்து பேசிய அவர், தயாரிப்பு செலவு 30 சதவிகிதம் குறைந்துள்ளதாகவும், இனி இந்திய உதிரிபாகங்களை கொண்டே ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இந்த ரயில் எப்போது பயன்பாட்டிற்கு வரும் என்பது குறித்த தகவல்கள் அளிக்கவில்லை.

---

ஆரம்ப பள்ளிகளில் பணிபுரியும் பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் மத்திய மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சகம் ஆரம்பக்கல்வி பயிற்சிக்கான பட்டப்படிப்பை(D.El.ED) தொடங்கியுள்ளது
- இதன் மூலம் அரசு பள்ளிகள், அரசு உதவிப்பெறும் ஆரம்பப் பள்ளிகளில் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் 15 லட்சம் ஆசிரியர்கள் பயனடைவர்
- மேலும் இந்த நிகழ்ச்சியின் போது ஆன்லைன் மூலம் கல்வி பெறும் "SWAYAM" வலைத்தளம் தொடங்கி ஓராண்டு நிறைவுற்றதையும் பிரகாஷ் ஜவடேக்கர் நினைவு கூர்ந்தார்
- D.El.ED- Diploma in Elementary Education
Source: Press Information Bureau(PIB)

---

"SECURE Himalaya Project"
- இமயமலையின் சூழல் அமைப்பை பாதுகாக்கும் நோக்கில் "SECURE Himalaya Project" என்னும் 6 ஆண்டு திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது
- இத்திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகவ் சபையின் மேம்பாட்டு திட்டமும்(UNDP) இணைந்து தொடங்கியுள்ளன
- இமயமலை பரவியுள்ள மாநிலங்களில் உள்ள உயிரினங்களை பாதுகாக்கவும், வளங்களை பேணவும், வளங்களை நீடித்த உபயோகத்திற்கும், இமயமலையின் சூழல் அமைப்பை திரும்ப பெறும் நோக்கிலும் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது
Source: Press Information Bureau(PIB)

---

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 400 விக்கெட்டுளை எடுத்த முதல்
இடது கை சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையை இலங்கை கிரிக்கெட் வீரர் ரங்கனா ஹெராத் படைத்துள்ளார்

---

மாற்றுதிறனாளிகளுக்கான முதல்
தொழிற் பயிற்சி நிறுவனம் [ஐடிஐ] அமைவதற்கு அஸ்ஸாம் மாநிலம் திப்ருகரில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது

---

இந்திய ரிசர்வ் வங்கியின் கிளை வங்கி உத்ரகாண்ட் மாநிலம் டேராடூனில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

| |
|---|
| 2018ம் ஆண்டிற்கான உலக அரசாங்க கூடுகை பிப்ரவரி மாதம் துபாயில் நடக்க உள்ளது. இதில் இந்தியா கௌரவ நாடாக ஆறாவது முறையாக கலந்து கொள்ள இருக்கிறது |
| ரஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச உஷூ சாம்பியன்ஷிப் போட்டியில் பூஜா கடியன் இந்தியாவிற்கு முதன்முறையாக தங்கப்பதக்கம் பெற்று தந்தார்.<br>உஷூ மரபார்ந்த சீனச் சண்டைக் கலைகளை அடிப்படையாகக் கொண்ட ஒருவரோடொருவர் மோதும் உடல் திறன் விளையாட்டு ஆகும். பன்னாட்டு உஷூ கூட்டமைப்பு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச அளவில் உஷூ போட்டிகளை நடத்துகின்றது. முதல் சர்வதேச போட்டிகள் சீன தலைநகர் பீஜிங்கில் 1991-ம் ஆண்டு நடைபெற்றன.<br>14-வது சர்வதேச உஷூ போட்டிகள் ரஷியாவின் கஸான் நகரில் கடந்த மாதம் 29-ம் தேதி தொடங்கியது. இப்போட்டியின் 75 கிலோ எடைப்பிரிவில் இன்று இந்தியாவின் பூஜா கடியன், ரஷியாவின் எவ்ஜெனியா ஸ்டெப்பனோவாவை எதிர்கொண்டார். இதில் எவ்ஜெனியா ஸ்டெப்பனோவாவை வீழ்த்தி பூஜா கடியன் இந்தியாவுக்கு முதன்முறையாக தங்கப்பதக்கத்தை வென்று தந்துள்ளார் |
| #மிதக்கும்_சூரிய_ஒளி மின்திட்டம் :<br>==> "Floating Solar" என்றழைக்கப்படும் இந்த திட்டம் நாட்டிலேயே முதன்முறையாக மே.வ மாநிலத்தில் 2014ல் தொடங்கி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது<br>==> இதன்பிறகு ஆந்திரா (ம) கேரளாவில் 10 மெகாவாட் அளவில் மின்னுற்பத்தி திறன் கொண்ட மிதக்கும் சூரிய ஒளி மின்திட்டம் தொடங்க திட்டமிடப் பட்டுள்ளது<br>==> ஆந்திராவில் 2018 செயல்படுத்தப்பட உள்ளது |
| ரஷ்யா 'உலகின் மிகப்பெரிய மற்றும் சக்திவாய்ந்த அணு சக்தியால் இயங்கும் பனிக்கட்டி உடைக்கும் கப்பலை தயாரித்துள்ளது<br>கப்பலின் பெயர் - சிபிர் (சைபீரியா) Sibir (Siberia). |
| #ரோஹிங்யா_விவகாரத்தில்_அதிருப்தி :<br>==> மியான்மரின் நடைமுறை தலைவர் சூ கி க்கு இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், மியான்மரில் ஜனநாயக உரிமைகளுக்காக அவர் நடத்திய போராட்டத்தை அங்கீகரித்து "பிரீடம் ஆப் ஆக்ஸ்போர்டு " என்ற உன்னத கவுரவம் வழங்கியிருந்தது<br>==> தற்போது ஏற்பட்ட அதிருப்தியால் அந்த கவுரவத்தை பறித்து தீர்மானம் இயற்றியுள்ளது |
| #வரி_ஏய்ப்பு செய்பவர்களை கண்டுபிடிக்க அதிநவீன கணினி தொழில்நுட்பத்தையும் இணையத்தையும் பயன்படுத்த மத்திய அரசு திட்டம்<br>==> இதற்காக எல் அண்ட் டி இன்போடெக் என்ற தனியார் நிறுவனத்துடன் 650 கோடியில் (100 மில்லியன்) ஒப்பந்தம் செய்துள்ளது மத்திய அரசு |
| #காந்தியடிகள்_காவலர்_விருது :<br>==> S.கண்ணன் (தஞ்சாவூர்), K.ராமகிருஷ்ணன் (சேலம்), K.நாராயணன் (வேலூர்), E.ஜோசப் (விழுப்புரம்), K.நாராயணன் (சென்னை) ஆகியோர்களுக்கு 2018 ம் ஆண்டு குடியரசு தினவிழாவில் விருதுகள் வழங்கப்படுகிறது<br>==> தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் நிரஞ்சன் மார்டி அறிவிப்பு |
| பாரத ஸ்டேட் வங்கியின் தலைவராக ரஜ்னிஷ்குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளர்.<br>3 ஆண்டுகள் பதவியில் இருப்பார். |
| 2017ம் ஆண்டிற்கான வேதியியல் பிரிவில் நோபல் பரிசு 3 நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது<br>1.Jacques Dubochet(Switzerland)<br>2.Joachim Frank (USA)<br>3.Richard Henderson (United Kingdom)<br>cryo-electron microscopy மூலம் உயிர் மூலக்கூறுகளின் உயர்-தீர்மானமான கட்டமைப்பு உறுதிப்பாடுத்தியதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| "அடுத்தவருக்கு கொடுத்து உதவுவோம்" என்ற கருத்துடன் oct 2 முதல் 8 ம் தேதி வரை "தான உத்சவ்" வாரம் கொண்டாடப்படுகிறது |
| உலக சுகாதார அமைப்பின் புதிய துணை இயக்குனராக சௌமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் |
| ஜெர்மனியில் ஓரின ஆர்வலர்கள் திருமணம் சட்டப்பூர்வம் ஆக்கப்பட்டுள்ளது |
| October 4 =உலக விலங்குகள் தினம் |

| |
|---|
| ஸ்பெயினில் இருந்து காட்டலோனியாவை பிரிக்க 90% பேர் பொது வாக்கெடுப்பில் ஆதரவு தெரிவித்துள்ளனர் |
| மலேசிய அரசு, போர் பதற்றம் நிலவி வருவதால் தன் நாட்டு மக்கள் வடகொரியா செல்வதற்கு தடை விதித்துள்ளது |
| உலகப் புகழ்பெற்ற கவர்ச்சி இதழ் "பிளேபாய் (1953 ல் தொடக்கம்) " நிறுவனர் ஹூக் ஹெப்னர் மரணம் |
| இந்தியாவில் பலவிதங்களிலும் பாதிப்புக்கு ஆளாகியுள்ள குழந்தைகளின் கல்விக்காக "#பிரதாம்" என்ற இந்திய தன்னார்வ நிறுவனம் 4 மில்லியன் (26 கோடி) நிதி திரட்டியுள்ளது |
| கர்நாடகா அரசு கிராமப்புற கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு இலவச மத்திய உணவுத் திட்டத்தை (mid-day Meals) அறிமுகப்படுத்தியுள்ளது<br>Mathru Poorna scheme,<br>இது அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும் எனவும் இதில் உணவு, ஒரு முட்டை, அரிசி, பருப்பு வகைகள், காய்கறிகள், பால் ஆகியவை அடங்கும். குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைப்பு மற்றும் குழந்தை இறப்புகளை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம்.. |
| திருப்பத்தூர் அருகே 1300 ஆண்டுகள் பழமை வாய்ந்த, சிற்ப வேலைப்பாடு நிறைந்த நடுகல் கோட்டம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.<br>வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர்கள் பிரபு, சிவசந்திரகுமார் மற்றும் தொல்லியல் ஆர்வலர் முத்தமிழ் ஆகியோர் நேற்று முன்தினம் திருப்பத்தூர் அடுத்த சந்திரபுரம் ஊராட்சி பகுதியில் களப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்திரபுரம் ஏரியின் அருகே தென்புறம் ஏரிக்கோடி என்ற இடத்தில் ஜெய்குமார் என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் மிகப்பெரிய நடுகல் கோட்டம் இருப்பதை கண்டறிந்தனர். |
| சர்வதேச பளுதூக்குதல் சம்மேளம் ரஷ்யா சீனா உள்ளிட்ட 9நாடுகளுக்கு அடுத்த ஓராண்டிற்கு சர்வதேச பளுதூக்குதல் போட்டியில் பங்கேற்க தடை விதித்துள்ளது<br>அமெரிக்காவில் ஏற்றுமதி செய்யப்பட்ட முதல் கச்சா எண்ணெய் கப்பல் ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகத்தை வந்து அடைந்துள்ளது<br>ஸ்பெயினிடம் இருந்து காட்டலோனியாவை தனி நாடாக பிரிக்க 90 சதவீதம் பேர் ஆதரவு அளித்துள்ளனர் |
| அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்நத அஜித் வரதராஜ் பாயை மத்திய தகவல் தொடர்பு ஆணையத்தின் தலைவராக தொடர்ந்து 2வது முறையாக நியமிக்க செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது |
| டெல்லியில் உள்ள மேடம் துசட் அருங்காட்சியகத்தில்(Madame Tussauds museum) பிரபல பாடகி "ஆஷா போஸ்லேவின்"Asha Bhosle) மெழுகு சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது<br>Source: Dinamani |
| உத்திர பிரதேச மாநிலத்தில் பெருந்திரள் திருமணத்திற்கு(Mass Marriage) உதவும் "Mukhyamantri Samoohik Vivaah Yojana" திட்டத்திற்கு அம்மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது<br>- இத்திட்டத்தின் மூலம் திருமணமாகும் தம்பந்திகளுக்கு ரூ.35000 வழங்கப்படும்<br>Source: All India Radio(AIR) |
| அதி வேகமாக வளர்ந்து வரும், பெட்ரோலிய பொருட்கள் உற்பத்தி செய்யும் ஆசிய நாடுகளில் சீனாவை பின்னுக்கு தள்ளி 2018ல் இந்தியா முதலிடத்தை பிடிக்கும் என "Moody's முதலீட்டாளர்கள் சேவை" நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது<br>Source: The Hindu |
| அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு முதல் கச்சா எண்ணெய் இறக்குமதி ஒடிசா மாநிலத்தில் உள்ள "பாரதீப் துறைமுகத்தை"(Paradip Port) வந்து அடைந்துள்ளது<br>- 1.6 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்(IOC), பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்(BPCL) மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்(HPCL) நிறுவனத்திற்காக இறக்கிதி செய்யப்பட்டுள்ளன<br>- இதன் மூலம் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும் மூன்றாவது இடத்தில் உள்ள நாடுகளில் இந்தியாவும் இணைந்துள்ளது<br>Source: The Hindu |
| பண்டிட் தீன்தயாள் உபத்யாயாவின் நூற்றாண்டு பிறந்த நாளை கொண்டாடும் வகையில் மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் "Hastakala Sahyog Shivirs" என்ற தேசிய அளவில், கைத்தறி நெசவாளர்களுக்கான முகாம்களை அக்டோபர் 7 முதல் 17 வரை(Oct 7-17) நடத்த திட்டமிட்டுள்ளது |

- இந்த முகாம்கள் மூலம் 1.2 லட்சம் நெசவாளர்கள் 421 கைத்தறி நெசவாளர்கள் தொகுதிகளில் இருந்து பயனடைவர்

கடந்த 2016ம் ஆண்டு செப்டம்பர் மாதம், இந்தியா மற்றும் ப்ரான்ஸ் நாடுகளுக்கிடையே கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி ரப்பேல் ரக விமானங்கள்(Rafale fighter Jets) வரும் 2019ம் ஆண்டு செப்டம்பர் முதல் இந்திய விமானப்படையில் சேர்க்கப்பட உள்ளன

- இந்த ஒப்பந்தத்தின்படி 36 விமானங்கள் இறக்குமதி செய்யப்பட உள்ளன, இதில் பாதி விமானங்கள் ஹரியானா மாநிலத்தில் உள்ள 'அம்பலா'(Ambala) விமானப்படை தளத்திற்கும் மீதம் உள்ள விமானங்கள் மேற்கு வங்கத்தில் உள்ள 'ஹஷிமாரா'(Hasimara) விமானப்படை தளத்திற்கும் வழங்கப்பட உள்ளன

Source: The Hindu

தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மக்கள் மதிப்பெண் வழங்கும் புதிய வலைத்தளமும், தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள் பற்றிய விவரங்கள் அறிய "PMIS" என்ற புதிய மொபைல் செயலியையும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்(NHAI) வெளியிட உள்ளது

- PMIS- Project Monitoring Information System

Source: Press Information Bureau(PIB)

தமிழகத்தில் அதிகளவு வாக்களர்களை கொண்ட தொகுதியாக "சோழிங்கநல்லூர்" தொகுதி உள்ளது, அதில் 6.24 லட்சம் வாக்களர்கள் உள்ளனர்

- மாநிலத்திலியே குறைந்தளவு வாக்களர்களைக் கொண்ட தொகுதியாக நாகை மாவட்டம் "கீழ்வேளூர்" தொகுதி உள்ளது, அங்கு 1.68 லட்சம் வாக்களர்கள் உள்ளனர் என தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி "ராஜேஷ் லக்கானி" தெரிவித்துள்ளார்

Source: Dinamani

2017ம் ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து சொந்த நாடுகளுக்கு பணம் பெறும் (Remittances) நாடுகள் பட்டியலில், 66 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடன் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் வகிக்கும் என உலக வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது

Source: All India Radio(AIR)

அமெரிக்க நாட்டினரால் வழங்கப்படும் NATIONAL ACADEMY OF PUBLIC ADMINISTRATION என்ற கௌரவ விருதினை பெற உள்ள முதல் இந்தியர் என்ற பெருயை ப்ராஜாப் திரூவேதி பெற உள்ளார்

அமெரிக்காவில் உள்ள 15 கியூபா தூதரக அதிகாரிகள் 7 நாட்களில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என அமெரிக்க உள்துறை செயலகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2017-2031 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது தேசிய வனவிலங்கு நடவடிக்கை திட்டத்தை இந்தியா திங்கள் கிழமை வெளியிட்டது.

முதல் 1983 ஆம் ஆண்டில் முதல் திட்டம்

2002 முதல் 2016 வரை இரண்டாவது திட்டம்.

திங்களன்று உலக வனவிலங்கு திட்டம்

(GWP- Global Wildlife Programme ) மாநாட்டின் தொடக்க நாளில் சுற்றுச்சூழல் அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் இந்த திட்டம் வெளியிட்டார்.

2015 ல் தொடங்கப்பட்டது GWP.

காந்திஜியின் சமாதி அமைந்துள்ள ராஜ்கோட்டில் முதன்முறையாக காந்திஜியின் உருவசிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சிலையை ராம் சுடர் என்ற சிலை வடிவமைப்பாளர் வடிவமைத்துள்ளார்

சுகாதார அமைச்சகம் சிறந்த செயலுக்கான விருதை 'சுச்ச்தா பக்வாடா' (‘Swachhta Pakhwada’) விற்கு வழங்கியுள்ளது...

சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் ஸ்வட்ச் பக்வாடாவின் பங்களிப்பிற்கான சிறந்த துறையாக தேர்வு செய்யப்பட்டு , இது குடிநீர் மற்றும் சுகாதார துறை அமைச்சகத்தின் ஸ்வச்ச் பாரத் மிஷனின் முன்முயற்சிக்காகவும் இந்த விருது அளிக்கப்பட்டது.

அக்டோபர் 2 ம் தேதி சுவாச் பாரத் மிஷனின் மூன்றாவது ஆண்டு விழாவில் இந்த விருது சி.சி. மிஸ்ரா, செயலாளர் (HFW - Health and Family Welfare) பெற்றார்.

ஐ.நா., சபையின் உலக சுகாதார நிறுவனத்தின்(டபிள்யு.எச்.ஓ.,) துணை இயக்குனராக தமிழகத்தைச் சேர்ந்த சவுமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் துணை இயக்குனர் பதவிக்கு, அதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் சார்பாக ஒருவரை பரிந்துரை செய்தன. இந்தியா சார்பில் சவுமியா சுவாமிநாதன் பரிந்துரைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், உலக சுகாதார நிறுவனத்தின் உயர் பதவிகளில் ஒன்றான துணை இயக்குனர் பதவிக்கு, சவுமியா

| |
|---|
| சுவாமிநாதன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.<br>இவர், பசுமைப் புரட்சியின் தந்தை என அழைப்படும் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மகள். குழந்தைகள் நல மருத்துவரான இவர், இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளார். |
| உலக விண்வெளி வாரம்(World Space Week) (4–10 October)<br>Theme 2017 : “Exploring New Worlds In Space” |
| 2017ம் ஆண்டிற்கான பீம்ஷன் ஷோஜி விருது மாணிக் பிதேவிற்கு [ Manik Bhide ] வழங்கப்பட்டுள்ளது |
| இந்திய மனித உரிமை கவுன்சில் சார்பில் வழங்கப்படும் 2017 ஆம் ஆண்டுக்கான மனித சாதனையாளர் விருது சமூக ஆர்வலர் டி.எஸ்.சலீம் அகமதிற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| மத்திய அமெரிக்க நாடுகளான கோஸ்டா ரிகா, நிகரகுவா, ஹோண்டுராஸ் நாடுகளில் #நேட்_புயல்தாக்கியுள்ளது |
| கஜல் இசை பாடுவதில் தனக்கென்று தனி இடம்பிடித்த பேகம் அக்தரின் 103வது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் கூகுள் நிறுவனம் தனது முகப்பக்கத்தில் டூடுலை வெளியிட்டுள்ளது .<br>முன்னதாக 100ரூ&5ரூ நாணயங்களை மத்திய அரசு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது |
| ஒரே வீட்டில் 3 கின்னஸ் சாதனையாளர்கள்!<br>ராமநாதபுரம் முத்துராமலிங்க சுவாமி கோவில் தெருவைச் சேர்ந்த அர்ச்சகர் வெங்கட்ராமன் மகன்கள் சுந்தரம், சங்கரநாராயணன், மகள் ரமா ஆகியோர்தான் அந்த கின்னஸ் சாதனையாளர்கள்.<br>முதலில் வெ. சுந்தரம்...<br>கடந்த 2009–ம் ஆண்டு, ஸ்டிரா எனப்படும் குளிர்பானம் அருந்தும் குழல்கள் 398–ஐ வாய்க்குள் நுழைத்து கின்னஸ் உலக சாதனை புரிந்தேன்.<br>எனக்கு முன்பாக ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த சைமன் எல்மோர் என்பவர் 364 ஸ்டிராக்களை வாய்க்குள் திணித்துச் சாதனை படைத்திருந்தார். அதை நான் முறியடித்தேன். எனக்கு என் அண்ணன் கஸ்தூரிரங்கன் உள்ளிட்டோர் உதவியாக இருந்தனர்’’ என்றார்.<br>இவரது தம்பி சங்கரநாராயணன். எம்.இ. கம்யூனிகேஷன் என்ஜினீயரிங்,<br>விதவிதமான 736 டீ, ஜூஸ் கப்புகளை சேகரித்து சமீபத்தில் கின்னஸ் சாதனை புரிந்தார் சங்கரநாராயணன்.<br>இச்சாதனையை லிம்கா மற்றும் அசிஸ்ட் வேல்டு ரெக்கார்டு போன்ற சாதனைப் புத்தகங்களிலும் இடம்பெறச் செய்ய திட்டமிட்டிருக்கிறேன்’’ என்றார்.<br>இவர் கடந்த 2008–ம் ஆண்டு மற்றொரு சாதனை புரிந்திருக்கிறார். அதுபற்றி,<br>151 எரியும் மெழுகுவர்த்திகளை ஒரே மூச்சில் ஊதி அணைத்து கின்னஸ் மற்றும் லிம்கா உலக சாதனைப் புத்தகங்களில் இடம்பிடித்தேன்.<br>இவர்களது தங்கையும், வீட்டில் கடைக்குட்டியுமான ரமா, எம்.சி.ஏ. படித்திருக்கிறார். இவரும் ஒரு கின்னஸ் சாதனையாளரே.<br>ரமா தனது கின்னஸ் சாதனை பற்றிச் சொன்னார்...<br>2010–ம் ஆண்டு விதவிதமான 549 ஹேர்கிளிப்புகளை சேகரித்து கின்னஸ் மற்றும் லிம்கா உலக சாதனைப் புத்தகங்களில் இடம்பிடித்தேன். அன்றைய ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் ஹரிஹரன் முன்னிலையில் எனது சாதனை பதிவானது’’ என்றார். |
| பாரா விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை மற்றும், மேற்கொண்ட பயிற்ச்சிகள் மற்றும் விழிப்புணர்விற்காக இணைய தளம் மூலம் அறிய முதன்முறையாக thenationspride.com என்ற வலையமைப்பு தொடங்கப்பட்டுள்ளது<br>மும்பையைச் சேர்ந்த Saachi Munot என்ற மும்பையைச் சேர்ந்த மாணவன் இந்த இணையதளத்தை வடிவமைத்துள்ளார் |
| தென்கிழக்கு ஆசியாவில் மிசோரத்தில் அதிகமான எண்ணிக்கையிலான பனிச்சிறுத்தைகளை உடைய இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br>மிசோரமில் தம்பா டைகர் ரிசர்வ் பகுதியில் தென்கிழக்கு ஆசியாவின் மிக அதிகமான பனிச்சிறுத்தைகளை கொண்டிருப்பதாகக் கணக்கெடுப்பட்டுள்ளது. இது மிசோரம்-பங்களாதேஷ்-திரிபுராவில் அமைந்திருக்கும் பகுதியாக உள்ளது.<br>அங்கு வாழும் மக்களால் பனிச்சிறுத்தைகள் 'கொல்ரால்' என அழைக்கப்பட்டு வருகின்றது. |
| பல் மருத்துவத்தில் உள்ள பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை எடுத்துரைக்கும் உலக பல் மருத்துவத்துக்கான கண்காட்சி(World Dental Show) "மும்பையில்" தொடங்க உள்ளது<br>Source: AIR |

#தமிழகத்தின் 25-வது ஆளுநராக பன்வாரிலால் புரோஹித் (06:10:2017) இன்று பதவியேற்று கொண்டார்
* சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

---

முதல் முறையாக உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம், பதவி உயர்வு, பணியிட மாற்றம் தொடர்பாக தாங்கள் மேற்கொள்ளும் முடிவுகள் அனைத்தையும் உச்ச நீதிமன்ற இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு கொலீஜியம் குழு(Supreme Court Collegium) முடிவு செய்துள்ளது
- இதன்படி முதன் முதலாக "சென்னை மற்றும் கேரளா" உயர் நீதிமன்ற நிதிபதிகள் நியமனங்கள் தொடர்பாக கொலீஜியம் மேற்கொண்ட முடிவுகள் உச்ச நீதிமன்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன

Source: The Hindu

---

"PRAVEG-2017"
- குஜராத் மாநிலம் "அகமதாபாத்" நகரில் "உங்கள் விமானப்படையை அறிந்து கொள்ளுங்கள்"(Know Your Air Force) எனும் தலைப்பில் "PRAVEG-2017" என்ற விமானப்படையின் கண்காட்சி நடைபெற்று முடிந்துள்ளது
- இதனை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் தொடங்கி வைத்துள்ளார்

---

குஜராத்தில் பிரதமர் நரேந்திரமோடி இன்று (07/10/17) ஒகஹா துறைமுகத்திற்கும் பேட் துவாரகா இடையே நான்கு லேன் பாலத்திற்கு கையோப்பம் இட்டுள்ளார்.
(Okha port & Bet Dwarka today.)

---

#நோபல்_பரிசு_2017

அமைதிக்கான நோபல் பரிசு, அணு ஆயுதத்திற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் ஐகேன் (International Campaign to Abolish Nuclear Weapons -ICAN) என்ற அமைப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவத்திற்கான நோபல் பரிசு, மூலக்கூறு அறிவியலின் புதிய கண்டுபிடிப்புகளுக்களில் சிறந்து விளங்கிய ஜெப்ரி ஹால், மிக்கேல் ராஸ்பாஷ், மைக்கேல் யங் ஆகிய மூன்று அமெரிக்கர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இயற்பியலுக்கான நோபல் பரிசு, ஈர்ப்பு விசை அலைகளின் இருப்பினை உறுதி செய்த விஞ்ஞானிகள் ரெய்னர் வைஸ், பெரி பேரிஸ் மற்றும் தோர்ன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது. இவர்கள் உலகப்புகழ் பெற்ற இயற்பியலாளரான ஐன்ஸ்டீன் ஈர்ப்பு விசை அலைகளின் இருப்பை நிரூபணம் செய்துள்ளனர்.

வேதியியல் துறைக்கான நோபல் பரிசு, மூலக்கூறுகள் பற்றிய ஆய்வுக்கான மைக்ரோஸ்கோப்பி வடிவமைத்த விஞ்ஞானிகள் ஜேக்கெஸ் டெபோசே, ரிச்சர்ட் ஹெண்டர்சன், ஜோசிம் ஃபிராங்க் ஆகிய மூவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டும் வேதியியல் பிரிவில் மூலக்கூறுகள் பற்றிய ஆய்வுக்காக நோபல் பரிசு அளிக்கப்பட்டது.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பிரிட்டனை சேர்ந்த கசுவோ இசிகுரோவுக்கு அறிவிக்கப்பட்டது. இவர் ஆங்கிலத்தில் பல்வேறு நாவல்கள், சிறுகதைகள் எழுதியுள்ளார்.

---

2018ம் ஆண்டு நியூசிலாந்தில் நடைபெறும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான(ICC U-19) உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளுக்காக நியூசிலாந்து வீரர் "Corey Anderson"ஐ தூதராக ICC நியமித்துள்ளது

Source: The Hindu

---

இந்தியாவின் முதல் குவாண்டம் வகை செயற்கைகோளினை ISRO மற்றும் பெங்களூரில் உள்ள 'ராமன் ஆராய்ச்சி நிறுவனமும்'(RRI) இணைந்து உருவாக்க உள்ளன
"குவாண்டம் செயற்கைகோள்"
- இந்த செயற்கைகோள் மூலம் அனுப்பப்படும் தகவல்கள் யாராலும் ஹேக் செய்ய இயலாத அளவிற்கு பாதுகாப்பானவை.
- நவீன தொழில்நுட்பத்தை வைத்து ஒளியை விட அதிக வேகத்தில் தகவல்கள் அனுப்பப் படுவதால் தகவல் பரிமாறி கொள்ளும் இருவரால் மட்டுமே இதை படிக்க முடியும்.
- இதனை வேறு யாரேனும் படிக்க முற்பட்டால் சம்பந்த பட்டவர்களுக்கு உடனே தகவல் அனுப்பி விடும் வகையில் வடிவமைக்கப்படும்

Source: DST India

---

GST கவுன்சிலின் 22வது கூட்டத்தொடர் இன்று டெல்லியில் நடைபெற்று முடிந்தது
- 3 கூட்டத்தொடர்கள் தவிர மற்ற அனைத்து கூட்டங்களும் டெல்லியில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது

---

பெங்களூர் மெட்ரோ ரயில் சேவையின் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு(Phase-2) ஐரோப்பிய முதலீட்டு வங்கி(Europian Investment Bank) €300 மில்லியன் யூரோவினை, இந்திய அரசுக்கு கடனுதவி வழங்க உள்ளது

Source: The Hindu

---

கோயமுத்தூர் வனப்பகுதிகளில் முதல் முறையாக "Sarcogyps Calvus" என்ற அறிவியல் பெயர் கொண்ட சிகப்பு நிற தலைக் கொண்ட 2 கழுகுகள்(Red-headed Vulture) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

| |
|---|
| - பவானி சாகார் நீர்த்தேக்கத்திற்கு அருகே உள்ள சிறுமுகை மலையில் இவை கண்டறியப்பட்டுள்ளன<br>- கழுகுகளின் அழிவைத் தடுக்க மத்திய அரசு "Diclofenac" என்ற மருந்தையும், தமிழக அரசு "Ketoprofen" என்ற மருந்தையும் தடை செய்தது குறிப்பிடத்தக்கது<br>Source : The Hindu |
| "Tidings of Troubled Times" என்ற புத்தகத்தை எழுதியவர் "Manish Tiwari" |
| நாட்டில் சுற்றுச்சூழல் பற்றிய வளங்களை, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அறிய 'இந்திய உலக வனவிலங்கு நிதியம்'(WWF India) மற்றும் "Capgemini" நிறுவனம் இணைந்து "One Planet Academy" என்ற டிஜிட்டல் அறிவுசார் வலைத்தளத்தை தொடங்கியுள்ளது<br>Source: The Hindu |
| இந்தியாவின் முதல் "விலங்கியல் பூங்காக்களுக்கான புதிர்போட்டி" (Zoo Hackathon) நாளை(Oct-7) புதுடெல்லியில் நடைபெற உள்ளது<br>- இதனை 'இந்திய-உலக வனவிலங்கு நிதியம்'(WWF India) நடத்த உள்ளன. |
| அக்டோபர் 10 ம் தேதி புது தில்லியில் 5 வது இந்திய நீர் வாரம் துவக்க உள்ளார் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த்.<br>THEME - Water and energy for inclusive growth |
| மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட, பத்திரிகையாளர், கவுரி லங்கேஷ், இந்த ஆண்டுக்கான 'அன்னா பொலிகோவஸ்கயா' (Anna Politkovskaya Award ) விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட முதல் இந்திய பத்திரிக்கையாளர் இவரே ஆவார்.<br>ஐரோப்பிய நாடான பிரிட்டன் தலைநகர் லண்டனை சேர்ந்த, 'ரா இன் வார்' என்ற அமைப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமைக்காக போராடும் பெண்களுக்கு, அன்னா பொலிகோவஸ்கயா விருது வழங்கி கவுரவிக்கிறது. ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில், 2006ல் கொல்லப்பட்ட, பத்திரிகையாளர், அன்னா பொலிகோவஸ்கயா நினைவாக, இந்த விருதை வழங்கி வருகிறது.<br>இந்த ஆண்டுக்கான விருதுக்கு, கவுரி லங்கேஷ் மற்றும் பாகிஸ்தானில் பயங்கரவாதத்தை எதிர்த்து போராடும், குலாலாய் இஸ்மாயிலுக்கு பகிர்ந்து வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 2017ம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு"அணு ஆயுதங்களை அகற்றுவதற்கான சர்வதேச அமைப்பிற்கு" #International_Campaig_to_Abolish_Nuclear_Weapons_(ICAN) அறிவிக்கப்பட்டுள்ளது. |
| இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் நொறுங்கி விழுந்தில் அதில் பயணித்த 7 வீரர்கள் பரிதாபமாக பலியாயினர்.<br>இந்திய விமானப்படைக்கு சொந்தமான மி-17 வி5 ஹெலிகாப்டர், அருணாச்சல பிரதேசத்தில் இன்று அதிகாலை சென்றுகொண்டிருந்தது. அதில் 7 விமானப்படை அதிகாரிகள் இருந்தனர். சீன எல்லையின் அருகிலுள்ள, தவாங் பகுதியில் பறந்துகொண்டிருந்த போது திடீரென்று ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கியது. இந்த திடீர் விபத்தில் அதில் இருந்த 7 பேரும் பலியாயினர். இவர்கள் அனைவரும் விமானப் பராமரிப்பு பிரிவு அதிகாரிகள் என்று கூறப்படுகிறது. விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. இதுபற்றி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. |
| இந்திய ராணுவத்தின் போரிடும் திறனை அதிகரிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகள் அளித்த "டிபி ஷெகாத்கர்"(DB Shekatkar) குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவது பற்றி பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் ஆய்வு செய்தார்<br>"DB Shekatkar குழு"<br>- இந்திய இராணுவத்தில் சீர்த்திருத்தம்(Army Reforms) ஏற்படுத்த மத்திய அரசு 2016ம் ஆண்டு "DB Shekatkar" தலைமையில் குழு ஒன்றை அமைத்தது<br>- இந்த குழு டிசம்பர் 2016ல் தனது பரிந்துரைகளை மத்திய அரசிடம் சமர்பித்தது<br>- இக்குழுவின் 65 பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது, 34 பரிந்துரைகள் மீது எந்த வித முடிவும் மத்திய அரசு எடுக்கவில்லை<br>"34 பரிந்துரைகளை அமல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்"<br>- DB Shekatkar குழுவின் பரிந்துரையின்படி முப்படைகளுக்கும் பொதுவான தலைமைத் தளபதியை நியமிக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது, இதனால் முப்படைகளும் பாதிக்கப்படும் என மத்திய அரசு கருதியதே காரணமாகும்<br>"DB Shekatkar குழு முக்கிய பரிந்துரைகள்"<br>- முப்படைகளுக்கும் பொதுவான தலைமைத் தளபதி<br>- இந்திய இராணுவத்தில் போரிடும் துறை அல்லாது அலுவலக ரீதியில் அதுகாரிகள், இளநிலை அதிகாரிகள் போன்ற |

| |
|---|
| பதவிகளில் 57000 பேர் பணியாற்றுகின்றனர், அவர்களை போரிடும் களத்தில் தயார்படுத்துவது<br>- இராணுவ வீரர்களின் ஓய்வு பெறும் வயதை இரண்டாண்டு அதிகரிப்பது போன்றவை<br>Source: Dinamani |
| தற்போதைய நிலவரப்படி பெட்ரோலின் உற்பத்தி வரி ₹21.48 எனவும்,டீசலின் உற்பத்தி வரி ₹17.33 எனவும் உள்ளது |
| Nov 28ல் சர்வதேச தொழில்முனைவோர் மாநாடு ஹைத்ராபத்தில் நடைபெறவுள்ளது |
| தூத்துக்குடியில் இருந்து சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகு தென்கொரியவுக்கு 32500 டன் உப்பு ஏற்றுமதி செய்ய பட்டுள்ளது |
| H1N1 என்ற வைரஸ் கிருமியால் ஏற்படும் பன்றி காய்ச்சல் தொடர்பான புள்ளி விவரங்களை மத்திய சுகாதார துறை வெளியிட்டது.அவற்றில் தமிழகம் 4 ம் இடம் பிடித்துள்ளது.<br>முதலிடத்தை குஜராதும்,இரண்டாம் இடத்தை மகாராஷ்டிராவும் பெற்றுள்ளன |
| ஆந்திரா மாநில ஸ்வர்ணல செருவு ஆற்றில் #ரொட்டேல_பண்டுகா என்ற வருடாந்திர ரொட்டி திருவிழா நடைபெற்றது |
| தென்கொரியவின் LG நிறுவனம் முதல் கொசு விரட்டி ஸ்மார்ட்போனை #LGK7i அறிமுகம் செய்துள்ளது |
| இந்தியாவின் இரண்டாம் ஸ்கார்ப்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல் "ஐ.என்.எஸ். கந்தேரி"(INS Khanderi) தனது கடற்பயண சோதனைகளை(Sea Trails) தொடங்கியுள்ளது<br>- மேலும் இந்தியவின் மூன்றாவது ஸ்கார்பியன் வகை நீர்மூழ்கி கப்பலான "INS Karanj" இந்த வருட இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்<br>- கடந்த செப்டம்பர் 21 அன்று "INS Kalvari" மும்பையில் உள்ள மசாகன் கப்பல் கட்டும் நிறுவனம் மற்றும் ப்ரான்சின் "DCNS" நிறுவனத்தின் உதவியுடன் இந்திய கப்பற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது<br>- Project 75 திட்டத்தின் கீழ் 6 நீர்மூழ்கி கப்பல்கள் செய்து இந்திய கப்பற்படைக்கு தர ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது, மீதமுள்ள 3 நீர்மூழ்கி கப்பல்கள் 2020-21க்குள் இந்திய கப்பற்படையில் சேர்க்கப்படும்<br>Source: The Hindu |
| ஆந்திர பிரதேசத்தில், போலாவரம் நீர்ப்பாசனத் திட்டம் வரும் 2019ஆம் ஆண்டு மக்களவை தேர்தலுக்கு முன் பயன்பாட்டிற்கு வரும் என்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்<br>- இந்த நீர்ப்பாசன திட்டத்தை 2018ஆம் ஆண்டு டிசம்பருக்குள் ஆந்திர முதல்வர் முடிக்குமாறு கோரிக்கை விடுத்து இருந்தது குறிப்பிடத்தக்கது<br>"Polavaram Project"<br>- கோதாவரியில் வீணாகும் தண்ணீரை சேமித்து கிருஷ்ணா நதியுடன் இணைக்க ஆந்திர அரசுமுடிவு செய்தது, இதற்காக கோதாவரி நதியில் 'போலாவரம்' என்ற இடம் அருகே நீர்த்தேக்கம் கட்டி அங்கிருந்து 174 கி.மீக்கு கால்வாய் அமைத்து கிருஷ்ணா மாவட்டம் விஜயவாடா அடுத்த பெர்ரி கிராமம் அருகே கிருஷ்ணா நதியுடன் இணைக்க இத்திட்டம் கொண்டு வரப்பட்டது<br>Source: Dinamani |
| இந்தியாவில் முதல் முறையாக புராண கிலா தீவில் (டெல்லி) ASEAN இந்திய இசை விழா இன்று நடைபெற (06 - 08 /10/17) உள்ளது<br>ASEAN-India Dialogue Relations இன் 25 ஆவது ஆண்டு நிறைவை, விழாவாக கொண்டாட 3 நாள் திருவிழாக வெளிவிவகார துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.<br>ஆசியாவின் உறுப்புநாடுகள் மற்றும் இந்திய மக்கள் மத்தியில் கலாச்சார தாக்கங்களை அதிகரிக்க இந்த திருவிழா ஏற்படுத்தப்பட்டது.. |
| அமெரிக்காவில் புற்றுநோய் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இந்திய வம்சவாளி விஞ்ஞானியான "நிஷா டிசில்வாவுக்கு"(Nisha D'silva) அந்நாட்டின் புகழ் பெற்ற தேசிய பல் மற்றும் முக எலும்பு மருத்துவக் கல்வியகம்(NITCR) வழங்கும் கௌரவம் மிக்க சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது<br>Source: Dinamani |
| டிவிட்டரில் அதிகமான மக்கள் பின்தொடரும்(Followers) தலைவர்களில் "டொனால்ட் டிரம்ப்" முதலிடத்தில் உள்ளார், இப்பட்டியலில் இந்திய பிரதமர் மோடி இரண்டாம் இடத்தில் உள்ளார்<br>- பெண் தலைவர்கள் பட்டியலில் வெளியுறவுத் துறை அமைச்சர் "சுஷ்மா சுவராஜ்" முதலிடத்தில் உள்ளார்<br>Source: Affairs Cloud |
| HDFC ஆயுள் காப்பீட்டு நிறுவனம், தனது வாடிக்கையாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய செயற்கை நுண்ணறிவால்(Artificial Intelligence) இயங்கும் "NEO" என்ற புதிய ரோபோ சேவையை டிவிட்டரில் தொடங்கியுள்ளது |

Source: Affairs Cloud

---

BIMSTEC நாடுகளுக்கிடையேயான முதல் பேரீடர் மீட்பு மேலாண்மை பயிற்சி(Disaster Management Exercise) "டெல்லியில்" அக்டோபர் 10 முதல் 13 வரை நடைபெற உள்ளது
Source: AIR

---

இந்தியாவில் மீண்டும் பரம்பரை சொத்து வரியை(Inheritance Tax) கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது
- பரம்பரை வரி என அழைக்கப்படும் inheritance tax, தனிநபர்கள் குடும்ப வழியாகப் பெறப்படும் சொத்துக்கள் மற்றும் பணத்தின் மீது விதிக்கப்படும் ஒரு வரி.
- இந்தியாவில் உயில் வழியாகவோ அல்லது ஒரு இறந்த பின் வரும் சொத்து அல்லது பணத்தின் மீது வரி கிடையாது. ஆனால் கிடைக்கும் சொத்துக்கள் மூலம் வருமானம் கிடைத்தால் அதற்கு வருமான வரி விதிக்கப்படும்.
- இந்தியாவில் பரம்பரை சொத்து வரி 1953 முதல் 1985 வரை நடைமுறையிலிருந்தது, 1985ம் ஆண்டு ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்தில் நிதியமைச்சராக இருந்த "வி.பி.சிங்" பரம்பரை சொத்து வரி சமூக சமனின்மையை ஏற்படுத்துவதாக கூறி அதனை நிறுத்த பரிந்துரை செய்து நிறுத்தப்பட்டது
Source: Economic Times

---

அருணாச்சல பிரதேச மாநிலத்தின் "Thembang" பகுதியில் முதல் முறையாக "பனி சிறுத்தைகள்"(Snow Leopard) நடமாடுவதை இந்திய-உலக வனவிலங்கு நிதியம்(WWF India) நடத்திய ஆய்வின் மூலம் உறுதி செய்துள்ளது
- அரசால் பாதுகாக்கப்படும் இடத்தில் இல்லமால் முதல் முறையாக 'உள்ளூர் வாசிகளால் பாதுகாக்கப்படும் இடத்தில்(Community Conserved Areas) பனி சிறுத்தைகள் நடமாடியுள்ளது புகைப்படத்தின் மூலம் உறுதியாகியுள்ளது
- சமீபத்தில் பனி சிறுத்தைகள் அழிந்து வரும் இனத்திலிருந்து, பாதிப்படையக்கூடிய இனத்திற்கு IUCNல் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது
Source: The Hindu

---

அஸ்ஸாம் மாநிலம் "குவாஹாட்டி" நகரில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம்(ISRO) சார்பில் பிரத்யேக ஆராய்ச்சி மையம் ஒன்றை அமைக்கவுள்ளது
- GPS,GIS உள்ளிட்ட அறிவியல் தொழில்நுட்பங்கள் அஸ்ஸாமின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவது குறித்து இந்த மையத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டும்
- வெள்ளம் ஏற்படுவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளவும், மண் அரிப்பு, நிலச்சரிவு அபாயத்தை முன்கூட்டியே அறிந்து கௌள்ளவும், தொலை உணர் தொழில்நுட்பம்(Remote Sensing) இந்த மையத்தில் பயன்படுத்தப்பட உள்ளது
Source: Dinamani

---

சிக்கிம் மாநிலத்தை ஒட்டியுள்ள எல்லையான "நாது லா" பகுதியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆய்வு மேற்கொண்டு அந்நாட்டு ராணுவத்தினரிடம் நட்புணர்வுடன் கலந்துரையாடியதை அடுத்து, "1890 ஆண்டு பிரிட்டன்-சீனா எல்லை வரையறை" உடன்படிக்கையை ஏற்று செயல்பட சீனா உறுதியளித்துள்ளது
"1890 UK-China Treaty"
- 1890ம் ஆண்டு பிரிட்டன்-சீனா இடையே சிக்கிம் மற்றும் திபெத் எல்லைகள் வரையறுக்கப்பட்டு ஒப்பந்தம் கல்கத்தாவில் கையெழுத்தானது
- இந்த ஒப்பந்தத்தை திபெத் ஏற்றுக் கொள்ளாத நிலையில் 1904ம் ஆண்டு பிரிட்டன்-திபெத் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகி 1890 ஒப்பந்தத்தை திபெத் ஏற்றுக் கொண்டது
- இந்திய சுதந்திரத்திற்கு முன் 1890ல் கையெழுத்தான இந்த ஒப்பந்தம் இந்தியாவின் பேரில் பிரிட்டனால் கைழுத்தானது, ஆகஸ்ட் 14,1947 அன்று கொண்டு வரப்பட்ட இந்திய சுதந்திர அறிவிப்பின்படி "1890 பிரிட்டன்-சீனா ஒப்பந்தம்" இந்திய வரம்புக்குள் கொண்டு வரப்பட்டது
Source: The Hindu

---

முதல்முறையாக போர் விமானத்தை இயக்கவுள்ள பெண் விமானிகள் :
==> மோகனா சிங், அவனி சதுர்வேதி, பாவனாகாந்த் ஆகியோர் போர் விமானத்தை இயக்க கடந்தாண்டு மத்திய அரசு தேர்வு செய்தது
==> கடுமையான பயிற்சிக்கு பின்பு அடுத்த மாதத்திலிருந்து "மிக்-21 பைசன் (mig 21) " ரக போர் விமானத்தை இயக்கவுள்ளனர்

---

திருவில்லா அருகே முள்ள மணப்புரம் சிவன் கோவிலில் அம்மாநிலத்தின் முதல் தலித் அட்சகராக யது கிருஷ்ணன் என்பவர் இன்று தனது பணியை தொடங்கினார். தன்னுடைய குருநாதரிடம் ஆசி பெற்ற பின்னர் அவர் கருவறைக்குள் நுழைந்து பூஜைகள் செய்தார்.

| |
|---|
| திருச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த யது கிருஷ்ணன் முதுநிலை பட்டத்தில் சமஸ்கிருதத்தை பாடமாக எடுத்து இறுதியாண்டு படித்து வருகிறார். தனது 15 வயது முதலே வீட்டின் அருகில் உள்ள கோவிலில் பூஜை செய்து வந்ததாகவும், பின்னர் முறைப்படி சமஸ்கிருதம் கற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.<br>கேரளாவில் தாழ்த்தப்பட்டவர்கள் ஆலய நுழைவு போராட்டம் நடத்தி 81 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள இதே நேரத்தில், யது கிருஷ்ணன் கருவறைக்குள் நுழைந்துள்ளது நிஜமாகவே சமூக புரட்சிதான். |
| "International Conference on Dialogue of Civilizations – IV"<br>இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை(ASI), மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் மற்றும் "National Geographic Society" இணைந்து 'நாகரீகங்கள் தொடர்பான சர்வதேச மாநாட்டின் வரிசையில் 4வது கலந்துரையாடலை' (International Conference on Dialogue of Civilizations – IV) டெல்லி, காந்திநகர் மற்றும் தோலாவிரா(Dholavira)வில் அக்டோபர் 8 முதல் 15 வரை நடத்த உள்ளது<br>- இந்த கலந்துரையாடலில் பின்வரும் பழைய நாகரிகங்கள் எவ்வாறு தற்போதைய சூழலுக்கு ஒத்து போகின்றன என்பதை பற்றி விவாதிக்க உள்ளனர்<br>1. எகிப்து நாகரிகம்<br>2. மொசபடோமியா<br>3. தெற்கு ஆசியா<br>4. சீன நாகரிகம்<br>5. மீசோஅமெரிக்கா<br>- இந்த மாநாடுகள் 2013ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது<br>1. முதல் மாநாடு- Guatemala(2013)<br>2. இரண்டாம் மாநாடு- துருக்கி(2014)<br>3. மூன்றாம் மாநாடு- சீனா(2015)<br>4. நான்காம் மாநாடு- இந்தியா(2017)<br>5. ஐந்தாவது மற்றும் கடைசி மாநாடு- எகிப்து |
| FIFA கால்பந்தாட்ட போட்டிகளில் கோல் அடித்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையை "Jeakson Singh" பெற்றுள்ளார்<br>- இன்று நடைபெற்ற கொலம்பியாவிற்கு எதிரான U-17 உலக கோப்பை போட்டிகளில் இந்த வரலாற்றை படைத்துள்ளார் |
| இந்திய விமானப் படையில் மிகவும் ஆற்றல் மிக்கவையாகக் கருதப்படும் "மிக்-21 பைசன்"(MiG-21 Bison squadron) ரக போர் விமானங்களை, இந்தியாவின் முதல் பெண் போர் விமானிகளான பாவனா காந்த், அவானி சதுர்வேதி மற்றும் மோகனா சிங் ஆகியோர் அடுத்த முதம் இயக்கி வரலாறு படைக்க உள்ளனர்<br>Source: The Hindu |
| தேசிய மனித உரிமை ஆணையத்தின்(NHRC) நியமனங்கள் குறித்த திருத்தங்களை மத்திய உள்துறை அமைச்சகம் பாராளுமன்ற ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது<br>- தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராக தற்போது ஒரு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை தேர்ந்தெடுப்பர், இந்த திருத்தங்கள் நடைமுறைக்கு வந்த பின்னர் உச்ச நீதிமன்ற நீதிபதியும் NHRC தலைவர் பதவிக்கு தகுதியானவராக கருதப்படுவார் |
| ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ்தான் ராணுவ வீரர்களால் நடத்தப்படும் எல்லைத் தாண்டிய துப்பாக்கி சுட்டினால் பாதிப்படையும் அப்பகுதி மக்கள் பற்றி ஆராயவும், எல்லைப் பகுதியில்(LOC) உள்ள பிரச்சனைகள் பற்றி ஆராயவும் மத்திய அரசு, உள்துறை சிறப்பு செயலர் "Rina Mitra" தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது |
| Oct 11 ==> சர்வதேச பெண் குழந்தைகள் தினம்<br>==> இதனால் பெண்களை கவுரவிக்கும் பொருட்டு #கனடா நாட்டு தூதரகம் சார்பில் ஒரு பெண்ணை தேர்வு செய்து அவருக்கு "ஒருநாள் கவுரவ தூதர் பதவி" வழங்க முடிவு செய்துள்ளது<br>==> இதற்காக தமிழக நர்ஸ் ஜெயந்தி தேர்வு<br>==> நாளை (10/10/2017) ஒருநாள் மட்டும் கவுரவ தூதராக பணியாற்றுவார் |
| இந்தியாவின் சர்வதேச அறிவியல் மாநாடு :<br>==> சென்னையில் அக் 13 லிருந்து 4 நாட்கள் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது<br>==> 2015 முதல் ஆண்டுதோறும் இம்மாநாடு நடத்தப்படுகிறது<br>==> சர்வதேச அளவில் இந்திய அறிவியல் (ம) தொழில்நுட்பம் 12வது இடத்தில் இருந்து 9வது இடத்துக்கு |

முன்னேறியுள்ளது
==> மத்திய அறிவியல் (ம) தொழில்நுட்ப துறை மந்திரி ஹர்சவர்தன்

#சேவியர்_புயல் : தாக்கிய நாடு ஜெர்மனி
#நேட்_புயல் : மத்திய அமெரிக்க நாடுகளான கோஸ்டாரிகா, நிகரகுவா, ஹோண்டுராஸ் ஆகியவற்றை தாக்கியுள்ளது
Note : ஜெர்மனி வரும்

லண்டனில் உள்ள ரீச் ஆல் வுமன் என்கிற தொண்டு நிறுவனம் #அன்னா_பொலிட்கோவ்ஸ்கா என்னும் விருதை பாகிஸ்தானை சேர்ந்த #குலாலாயா_இஷமாயில் மற்றும் #கவுரி_லங்கேஷ்வர்ஆகியோருக்கு பகிர்ந்தளிப்பதாக அறிவித்துள்ளது.
இவ்விருத்தை பெரும் முதல் இந்திய பெண் கவுரி லங்கேஷ்வர் ஆவார்

உலக டெஸ்ட் போட்டி நடத்துவது குறித்து விரைவில் ஐசிசி முடிவு எடுக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நியூசிலாந்தில் இந்த வாரம் நடக்கவுள்ள ஐசிசி கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்படும் என தெரிகிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரதமர் நரேந்திர மோடி குஜராத்தில் ராஜ் கோட்டையிலுள்ள ஹிராசர் அருகே சோட்டிலா என்ற இடத்தில் green field விமான நிலையத்திற்கு அடிக்கள் நாட்டியுள்ளார்.
இந்த கிரீன்ஃபீல்ட் விமான நிலையம் 2021 ஆம் ஆண்டிலிருந்து விமான சேவை தொடங்கும் என அறிவித்தனர்..

முதல் திருநங்கை போலீஸ் அதிகாரி யாசினி... சென்னை காவல் துறை உதவி ஆய்வாளராக பொறுப்பேற்பு #Yasini #Transgender

மத்திய AYUSH அமைச்சகத்தால் நடத்தப்படும் 3வது சர்வதேச யோகா மாநாடு(International Yoga Conference), டெல்லியில் துணை குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடுவால் நாளை(Oct -10) தொடங்கி வைக்கப்பட உள்ளது
- Theme- "Yoga for Wellness"
Source: MIB

பெங்களூர்: இந்தியாவில் முதல் முறையாக ஆதார் கார்ட் மூலம் உள்நுழையும் வசதியை ஏற்படுத்தியுள்ளது பெங்களூர் ஏர்போர்ட். இதன்படி ஆதார் கார்டை ஸ்கேன் செய்து அதன்முலம் போர்டிங் பணிகளை எளிதாக முடித்துக் கொள்ளலாம் என பெங்களூர் சர்வதேச விமான நிலையத் துறை தெரிவித்துள்ளது. இதன் மூலம் வெளிநாடு செல்லும் விமானங்களிலும் போர்டிங் செய்ய முடியும் என்பது கூடுதல் சிறப்பு.
பெங்களூரில் இருக்கும் கெம்பகௌடா சர்வதேச விமான நிலையத்தில் இன்னும் சில நாட்களில் ஆதார் கார்ட் மூலம் போர்ட்டிங் பணிகளை முடிக்கும் வசதி ஏற்படுத்தப்பட இருக்கிறது. இந்தியாவிலேயே இங்கு மட்டும் தான் முதல் முறையாக இந்த வசதி ஏற்படுத்தப் படவுள்ளது.
இதன்படி ஆதார் கார்ட் உள்ளவர்கள் தங்களது கண்களை போர்டிங்கின் போது ஸ்கேன் செய்தோ இல்லை விரல் ரேகைகளை பதித்தோ எளிதாக உள்ளே நுழையலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

காச நோய் இல்லா சென்னை - புதிய திட்டத்தை முதலமைச்சர் இன்று துவங்கி வைத்தார்!

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது சொந்த மாநிலமான குஜராத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று பராச்சில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்று மக்களிடையே உரையாற்றினார். அப்போது விவசாயத்துக்கான மானிய யூரியாவுடன் வேப்ப எண்ணெய் கலக்க மத்திய அரசு முடிவெடுத்து உள்ளது என அவர் கூறியுள்ளார்...

மூத்த குடிமக்களுக்கான தேசிய விருதான "Vayoshreshtha Sammans" விருதினை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த இன்று(Oct-9) டெல்லியில் வழங்க உள்ளார்
Source: Dinmani

மலையாள மொழியில் எழுதப்படும் சிறந்த படைப்புகளுக்கான "வயலார் ராமவர்மா சாகித்யா விருது"க்கு (Vayalar Ramavarma Sahithya Award) பிரபல எழுத்தாளர் டி.டி.ராதாகிருண்னின் (T.D.Radhakrishnan) "சுகந்தி என்ன ஆண்டாள் தேவநாயகி" என்ற நாவல் தேர்வு செய்யப்பட்டுள்ளது
Source: Dinamani

டெல்லியில் பட்டாசு விற்பனைக்கு நவ.1 வரை தடை
தலைநகர் டெல்லியில் நவம்பர் 1ஆம் தேதி வரை பட்டாசு விற்பனைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பாரா விளையாட்டு பற்றி விழிப்புணர்வை உருவாக்குவதற்காகவும் மற்றும் அவர்களின் வெற்றி, அவர்களின் கதைகளை விளக்குவதற்கு பாரா விளையாட்டுக்களுக்காக ஒரு தளத்தை உருவாக்கியுள்ளனர்.
"thenationspride.com",
நாட்டில் பாரா-விளையாட்டுக்கு வீரர்களுக்காக உருவாக்கப்பட்ட முதல் போர்டல் இதுவே ஆகும்.

| |
|---|
| thenationspride.com - இதனை உருவாக்கியவர் 17 வயது மும்பையைச்சார்ந்த மாணவர் மற்றும் விளையாட்டு ஆர்வலர் - Saachi Munot. |
| பிரான்ஸ் நாட்டில் புகழ்பெற்ற #கலை_இரவுத்_திருவிழாபாரிசில் தொடங்கியுள்ளது. பாரிஸ் நகரின் பழம்பெருமையைக் கொண்டாடும்வகையில், 2002-ஆம் ஆண்டு முதல், இந்த திருவிழா கொண்டாடப் படுகிறது.<br>துள்ளல் இசை, கொப்பளிக்கும் உற்சாகம் என அக்டோபர் மாதத்தில் இந்த திருவிழா ஒரு வாரம் நடைபெறும். இதன் தொடக்க நிகழ்ச்சியாக பொது இடத்தில் திரண்ட இளைஞர்களும், இளம்பெண்களும் துடிப்போடு நடனமாடினர். |
| உலக அஞ்சல தினத்தை(Oct-9) முன்னிட்டு ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான "சர்வதேச தடங்காணல் அமைப்பு"(International Tracked Packet) மற்றும் e-IPO என்னும் இந்திய அஞ்சலகத்தின் இணைய வழி அமைப்பை மத்திய அமைச்சர் "மனோஜ் சின்ஹா" தொடங்கி வைத்துள்ளார்<br>Source: MIB |
| கேரளா மாநிலம் அமிர்தபுரியில் #ஜீவாமிர்தம் என்னும் குடிநீர் வழங்கும் திட்டத்தை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார் |
| அப்சல் அமானுல்லா தலைமையிலான குழு முஷலிம்களின் ஹஜ் யத்திரைகான வரைவு கொள்கைய (2018-2022) மத்திய சிறுபான்மை நலத்துறை அமைச்சர் முக்தர் அப்பாஸ் நக்வியிடம் சமர்ப்பித்தார் |
| கணவர் நலமுடன் இருக்க வேண்டி வட இந்தியாவில் கர்வா சவுத் என்னும் விரதத்தை திருமணமான பெண்கள் கடைபிடித்து வருகின்றனர் |
| 2018 ல் ரஷ்யாவில் உலக கோப்பை கால்பந்து போட்டி நடைபெற உள்ளது |
| தங்க கடன் பாத்திரங்களை மத்திய அரசு மீண்டும் வெளியிட்டுள்ளது<br>இதில் ஒரு நபர் 1 கிராம் முதல் 500 கிராம் வரை முதலீடு செய்யலாம். |
| 2014,2015,2016 என தொடர்ந்து 3 ஆண்டுகளாக தமிழகம் உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலா பயணிகள் வருகையில் முதலிடத்தில் உள்ளது |
| "ஹட்ரோகார்பன் அபாயம்" என்னும் புத்தகத்தை எழுதியவர் கா.அய்யநாதன் |
| அக்டோபர் 10: உலக மனநல தினம்.<br>கருப்பொருள்: பணி இடத்தில் மனநலம். |
| உலக அஞ்சலக தினத்தை(Oct-9) முன்னிட்டு இந்திய அஞ்சலகத்துறை அக்டோபர் 9 முதல் 15 வரை(Oct 9-15) "தேசிய அஞ்சலக வாரமாக"(National Postal Week) கடைப்பிடிக்கிறது<br>Source: MIB |
| VDMA இந்தியாவின் நிர்வாக இயக்குனரான ராஜேஷ் நாத் அவருக்கு - கிராஸ் ஆ்ப் தி ஆர்டர் ஆ்ப் மெரிட் (Cross of the Order of Merit' ) விருது வழங்கப்பட்டதுள்ளது. இந்த விருதானது ஜெர்மனியில் சேவைகளுக்காக தனிநபர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த சிவில் கௌரவ விருது ஆகும்.<br>இதற்கான மற்றொரு பெயர் - (Bundesverdienstkreuz) அல்லது ஃபெடரல் கிராஸ் ஆப் மேரிட்(Federal Cross of Merit)<br>இந்த விருது 1951 முதல் பொருளாதார, சமூக, அரசியல் அல்லது அறிவார்ந்த பகுதியிலுள்ள பல்வேறு சாதனைகள் புரிபவர்களுக்கு அளிக்கப்படுகின்றது, இது ஜேர்மனியர்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது... |
| ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைப்பெற்ற World Open Under-16 ஸ்னூக்கர் போட்டியில் சாம்பியன்ஷிப் பட்டத்தை இந்தியாவின் அனுபமா ராமச்சந்திரன் கைப்பற்றியுள்ளார். |
| அர்ஜென்டினாவின் ரோசாரோவில் நடைப்பெற்ற உலக இளைஞர் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம், வெள்ளி, வெண்கலம் உள்ளிட்ட 3 பதக்கங்களை இந்தியா வென்றதுள்ள்து , |
| 2017ம் ஆண்டிற்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த "Richard H. Thaler"க்கு அறிவிக்கப்பட்டுள்ளது<br>- பொருளாதாரத்தில் உளவியல் ரீதியாக முடிவு எடுப்பது தொடர்பான ஆய்வின் முன்னோடியாக திகழ்ந்தவர் ரிச்சர் ஹெச்.தாலர். பொருளாதார முடிவுகளை எடுக்கும் போது மக்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பது பற்றியும் ஆய்வு செய்திருக்கிறார். |
| 2018ம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறும் உலக கோப்பை கால்பந்து போட்டிகளுக்கு தகுதிப் பெறும் முதல் ஆப்ரிக்க நாடு என்ற பெருமையை "நைஜீரியா" பெற்றுள்ளது<br>Source: The Hindu |
| எலும்பு முறிவு காய்ச்சல் என்பதன் ஆங்கில மொழி சுருக்கமே #டெங்கு. |

| |
|---|
| இது ஒரு வகை வைரஸ்யால் பரவும் நோய்.<br>#ஏடிஷ்_எகிப்தி என்ற கொசுகளால் இந்த நோய் பரப்பப்படுகிறது.<br>*டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த 23 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| வருடந்தோறும் "அக்டோபர்" மாதத்தினை மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக(Breast Cancer Awareness Month) உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது<br>- இந்தியாவில் 100000 பெண்களுக்கு 32 பெண்கள் மார்பக புற்றுநோயால் அவதியுறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது |
| "India's First Marine Police Training and Research Institute"<br>- இந்தியாவின் முதல் கடற்சார் காவல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், குஜராத் மாநிலம் 'தேவ்பூமி தர்காவில்'(Devbhoomi Dwarka) அமைய உள்ளது<br>Source: Inshorts App |
| October 9:உலக அஞ்சல் தினம் |
| கைம்பெண்களை திருமணம் செய்தால் ₹200000 பரிசு என்னும் புதிய திட்டத்தை #மத்தியபிரதேச அரசு விரைவில் அமல்படுத்த உள்ளது |
| சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்ற "China Open" டென்னிஸ் போட்டிகளின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் நாட்டின் "Rafael Nadal" பட்டம் வென்றுள்ளார்<br>- இந்த பட்டம் அவர் வாழ்நாளில் பெறும் 75வது பட்டமாகும் |
| தமிழகத்தில் முதன் முறையாக "ராமநாதபுரம்" மாவட்டத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் சார்பு ஆய்வாளர் தலைமையில் "சிறப்புக் குழந்தைகள் நலப்பிரிவு" தொடங்கப்பட்டுள்ளது.<br>Source: ஆனந்த விகடன் |
| ஆகஸ்ட் 2018க்கு மேல் வேளாண்த்துறையில் பட்டயச் சான்றிதழ்(Diploma) பெற்றவர்கள் மட்டுமே பூச்சிக்கொல்லி(Pesticides) மருந்துகள் விற்க உரிமம் வழங்கப்படும் என "ராஜஸ்தான்" மாநில அரசு தெரிவித்துள்ளது<br>Source: Hindustan Times |
| பல்வேறு அமைச்சகம் மற்றும் மாநிலங்களில் இருந்து உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்றை NITI Aayog அமைத்துள்ளது<br>- தேசிய திறமை வாய்ந்த போக்குவரத்து அமைப்பு(Intelligent Transporatation System) கொள்கையை தேசிய அளவில் நடைமுறைபடுத்துவது தொடர்பாக இந்த குழு ஆராயும்<br>- இந்த ITS கொள்கை நகரப்புறங்களில் போக்குவரத்து நெரிச்சலை(Traffic) குறைப்பதை பற்றியும், சாலை பாதுகாப்பு(Road Safety) பற்றியும், நகர்ப்புறங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான(Parking) வழிமுறைகளை இந்த கொள்கை விளக்கும்<br>Source: The Hindu |
| ஒப்பந்த ஊழியர்கள் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழித்தல்) சட்டம் 1970ல் மத்திய அரசு சில திருத்தங்களை கொண்டு வந்துள்ளது<br>- புதிய திருத்தங்கள்படி ஒப்பந்தகாரர்களுக்கு(Contractors) 3 ஆண்டுகளுக்கு உரிமம்(License) வழங்கப்படும்<br>- இதற்கு முன்னர் ஒவ்வொரு புதிய நிறுவனங்களின் வேலைகள் வரும்போது உரிமம் பெறும்படி இருந்தது<br>- இந்த புதிய விதிகள் படி ஒப்பந்தகாரர்கள் தனது வேலைக்கான குறிப்பிட்ட இடத்தை மத்திய அரசிடம் தெரிவிக்க வேண்டும்<br>- புதிய பணிகள் வரும்போது ஒப்பந்தகாரர்கள் அரசிடம் தெரிவிக்க வேண்டும், தெரிவிக்க தவறுபவர்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என புதிய விதிகளில் கூறப்பட்டுள்ளது |
| தீவிரப்படுத்தப்பட்ட மிஷன் இந்திராதனுஷ் திட்டத்தை(Intensified Mission Indradhanush) பிரதமர் மோடி தனது சொந்த ஊரான குஜராத் மாநிலம் வாட்நகரில்(Vadnagar) தொடங்கி வைத்துள்ளார்<br>- டிசம்பர் 2018க்குள் குறிப்பிட்ட மாவட்டங்களில் 90 சதவீதம் மருந்துகள் மூலம் நோய் தடுப்பை(Immunization) உறுதி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்<br>- இந்திராதனுஷ் திட்டத்தின்(Mission Indradhanush) கீழ் நோய் தடுப்பை 90 சதவீதம் வழங்க டிசம்பர் 2020 இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது, தற்போது தீவிரப்படுத்தப்பட்ட மிஷன் இந்திராதனுஷ் திட்டத்தின் மூலம் இந்த இலக்கு முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது |
| ஜப்பான் கிராண்ட் பிரிக்ஸ்(Japanese GP) பார்முலா 1 கார்பந்தய போட்டிகளில் "Lewis Hamilton"(Mercedes) பட்டம் வென்றுள்ளார் |

டிவிட்டரில் அதிகமான மக்கள் பின்தொடரும்(Followers) தலைவர்களில் "டொனால்ட் டிரம்ப்" முதலிடத்தில் உள்ளார், இப்பட்டியலில் இந்திய பிரதமர் மோடி மூன்றாம் இடத்தில் உள்ளார்
- பெண் தலைவர்கள் பட்டியலில் வெளியுறவுத் துறை அமைச்சர் "சுஷ்மா சுவராஜ்" முதலிடத்தில் உள்ளார்
Source: Affairs Cloud

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் விஜய பாஸ்கர் "கொசு இல்லா இல்லம்" என்ற திட்டத்தை சென்னையில் தொடங்கி வைத்துள்ளார்

ஜம்மு காஷ்மீரில் வன்முறையைக் கட்டுப்படுத்தவதற்கு பெல்லட குண்டுகளுக்கு( Pellet shotguns) பதிலாக 21000 சுற்றுகள் கொண்ட "பிளாஸ்டிக் குண்டுகளை" மத்திய ரிசர்வ் போலீஸ் படை(CRPF) அனுப்பியுள்ளது
- இந்த காயம் ஏற்படுத்தாத குண்டுகளை "பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு"(DRDO) தயாரித்துள்ளது
Source: The Hindu

"கோவா" மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் குடியரசுத் தலைவர் "ராம்நாத் கோவிந்த்" மற்றும் "பிரதமர் மோடி" ஆகியோரின் படங்களை வைக்குமாறு அம்மாநில கல்வித்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது
Source: Dinamani

ஜம்மு காஷ்மீர், உத்ரகாண்ட், இமாச்சல பிரதேசம், வட கிழக்கு மாநிலங்கள் ஆகிய மலைப்பகுதி மாநிலங்களுக்கு பட்ஜெட் மூலம் "சிறப்பு நிதியுதவி அளிக்கும் திட்டத்திற்கு" மத்திய அரசு ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து மலைப்பகுதி மாநில தொழிலகங்களுக்கு சிறப்பு நிதியுதவி வழங்கப்படும் என மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் "சுரேஷ் பிரபு" தெரிவித்துள்ளார்
"மலைப்பகுதி மாநிலங்களுக்கு சிறப்பு நிதியுதவி அளிக்க காரணம்"
- GST வரி விதிப்பு அமலாக்கத்தால் முந்தைய வரி விலக்குகள் ரத்தாகி விட்டதை கருத்தில் கொண்டு இந்தநடவடிக்கையை மத்திய அரசு எடுக்க உள்ளது
Source: Dinamani

அக்டோபர் 11ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை(International Girl Child Day) முன்னிட்டு 'மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்' அக்டோபர் 9 முதல் 14 வரை(Oct 9-14) "Beti Bachao Beti Padhao" வாரமாக கொண்டாட உள்ளது
- நாடு முழுவதும் பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் இந்த வாரம் கடைபிடிக்கப்படுகிறது
- Theme- "The Daughter of New India"
- "Beti Bachao Beti Padhao" திட்டம் 2015ம் ஆண்டு ஜனவரி 22 அன்று ஹரியானா மாநிலத்தில் தொடங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது
Source: PIB

OCTOBER 8, 2017- 85th Indian Air Force Day(85வது இந்திய விமானப்படை தினம்)

OCTOBER 11:சர்வதேச பெண் குழந்தைகள் தினம்.(International Day of the Girl Child)
THEME 2017 : "EmPOWER girls: Before, during and after conflict"

கேரளாவில் சுற்றுலா வளர்ச்சியை விரிவுபடுத்த, இந்த ஆண்டு முதல் மூன்று வருட நீளமான சுற்றுச்சூழல் ஆய்வு (CTS - Continuous Tourist Survey),
சுற்றுலா துறையினர் தொடங்கப்பட்டுள்ளது.
இதற்காக 2017-2020 மாதிரி கணக்கெடுப்பு எடுக்க உள்ளனர்...

உலகின் முதல் ஸ்மார்ட் போலீஸ் நிலையம் துபாயில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது
==> S.P.S -(Smart Police Station) என சுருக்கமாக கூறப்படுகிறது
==> போலீசாரே இல்லாமல் முற்றிலும் இணைய வழியில் இயங்க கூடியது

மலையாள மொழியில் சிறந்த இலக்கியப் பணிக்கான விருது வெளியிடப்பட்டுள்ளது இந்த விருதுக்கு 2017 ஆம் ஆண்டு நாவலாசிரியர்
டி.டி. ராதாகிருஷ்ணனின் படைப்பான
'சுகந்தி என்னா ஆண்டல் தேவானாயக்கி'(Sugandhi Enna Andal Devanayaki) தேர்வு செய்யப்பட்டுள்ளது
வயலார் நினைவாக வயலார் ராமவர்மா நினைவு அறக்கட்டளை 1977 ஆம் ஆண்டு முதல் மலையாள மொழியில் சிறந்த இலக்கியப் பணிக்கான விருது வழங்கப்பட்டு வருகிறது.

நாட்டில் முதல் மாநிலமாக ராஜஸ்தான்
உயர் கல்வியில் திறமை மேம்பாட்டுத் திட்டத்தை இணைக்க (incorporate skill development)உள்ளது.

| |
|---|
| உலக மன நல தினம்: 10 அக்டோபர்<br>உலக மனநல தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 10 ம் தேதி உலகம் முழுவதும் மனநல சுகாதார பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் மன ஆரோக்கியத்திற்கு ஆதரவு திரட்டும் முயற்சிகளின் நோக்கத்துடன் கடைபிடிக்கப்படுகிறது.<br>Theme - 'Mental health in the workplace' |
| காவலர்கள் இல்லாமல் இணையத்தின் மூலம் இயங்கும் உலகின் முதல் ஸ்மார்ட் போலீஸ் ஸ்டேசன் துபாயில் செயல்பாட்டிற்கு வந்துள்ளது |
| 2017-ல் உலக பொருளாதார வளர்ச்சி 3.6சதவீதம்: ஐ.எம்.எப்., தகவல்<br>2017-ம் ஆண்டில் உலக பொருளாதார வளர்ச்சி 3.6 சதவீதமாக இருக்கும் என பன்னாட்டு நிதியம் தெரிவித்துள்ளது. இது குறித்து அவை வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறி இருப்பதாவது:<br>அமெரிக்காவில் 2017-ம்ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 2.2 ஆகவும், 2018-ம் ஆண்டில் அவை 2.3 சதவீதமாகவும் இருக்கும்.<br>சீனாவின் பொருளாதார வளர்ச்சி 2017-ம் ஆண்டில் 6.8 சதவீதமாக இருக்கும் என தெரிவித்துள்ளது. |
| மியான்மரில் ஆண்டுதோரும் நடைபெறும் சவ் க்யின் ஒளி விழா நடைபெற்றது<br>மியான்மரில் ஆண்டுதோரும் நடைபெறும் சவ் க்யின் ஒளி விழா நடைபெற்று வருகிறது. தடிங்கைட் திருவிழா, லைட்டிங் திருவிழா எனவும் அழைக்கப்படும் இந்த திருவிழா மியான்மரில் இரண்டாவது மிக பிரபலமான திருவிழா ஆகும். புத்தர் முழு நிலவு நாளில் சொர்க்கத்தில் இருந்து இறங்குவதாகவும் அவரை வரவேற்கும் விதத்தில் இந்த திருவிழா கொண்டாடப்படுவதாகவும் கூறப்படுகிறது. திருவிழா நாட்களில், புத்தர்கள் வழக்கமாக மடாலயங்களுக்கு சென்று துறவிகளுக்கு மரியாதை செலுத்துவர். இந்த விழாவின் போது படகு போட்டி, கலாச்சார நடனங்கள் உள்ளிட்டவை நடைபெற்றது. விழாவின் இறுதிநாளில் மியான்மரின் யாங்கூன் என்ற இடத்தில் இருந்து 183 கிமீ தூரத்தில் மிதக்கும் சிறிய மெழுகுவர்த்தி மூலம் காகித விளக்கு செய்து பறக்கவிடப்பட்டது. இந்த வருடாந்த ஒளி விழாவின்போது அதிர்ஷ்டங்கள் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. |
| ஆதார் அட்டையை பயன்படுத்தி முற்றிலும் இயங்கும் விமான நிலையமாக பெங்களூரில் உள்ள கெம்ப கௌடா விமான நிலையம் என்ற பெருமையை பெற்றுள்ளது |
| உலகக்கோப்பைக் கால்பந்துக்குத் தகுதி பெற்ற மிகச்சிறிய நாடானது ஐஸ்லாந்து<br>2018 ரஷ்ய உலகக்கோப்பை கால்பந்துக்கு தகுதி பெற்ற ஐஸ்லாந்து எனும் சிறிய நாடு. தகுதிச்சுற்றுப் போட்டியில் கொசாவோ அணியை 2-0 என்று வீழ்த்தியது ஐஸ்லாந்து.<br>ஐஸ்லாந்து மக்கள் தொகை சுமார் 3,50,000 என்பது குறிப்பிடத்தக்கது .<br>இதற்கு முன்னதாக உலகக்கோப்பைக் கால்பந்துக்குத் தகுதி பெற்ற சிறிய நாடு டிரினிடாட் டொபாகோவாகும் இந்த நாட்டின் மக்கள் தொகை சுமார் 1.3 மில்லியனாகும். 2006-ம் ஆண்டு டிரினிடாட் அணி தகுதி பெற்றது, இப்போது ஐஸ்லாந்து தகுதி பெறும் வரை உலகின் மிகவும் சிறிய நாடு ஒன்று உலகக்கோப்பைக்குத் தகுதி பெறும் பட்டியலில் டிரினிடாட் மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது.<br>ஐஸ்லாந்து அணியின் ஜில்ஃபி சிகர்ட்சன் மற்றும் ஜொஹான் குட்மண்ட்சன் ஆகியோர் இரண்டு கோல்களை கோசாவா அணிக்கு எதிராக அடித்து 2018 உலகக்கோப்பைக்கு அணியை தகுதி பெறச் செய்தனர். |
| பேஸ்புக் நிறுவனத்தின் இந்திய தலைமை செயல் அதிகாரி உமங் பேடி பதவி விலகல்<br>மும்பை: பேஸ்புக் நிறுவனத்தின் இந்தியாவுக்கான தலைமை செயல் அதிகாரியாக ஜூன் 2016 இல் பொறுப்பேற்றுக் கொண்ட உமங் பேடி தமது பதவியை தற்போது ராஜினாமா செய்துள்ளார். |
| உத்தரகண்ட் மாநில அரசு மற்றும் ஸ்வான் கலாச்சார மைய அறக்கட்டளை என்ற நிதி நிறுவனம் இணைந்து கேதார்நாத் டேமில் (Kedarnath Dham.) 'சோலார் பிரீஃப்கேஸ்' (Solar Briefcase) என்ற திட்டம் துவங்கி உள்ளனர்.<br>மலையடிவாரத்தில் உள்ள தொலைதூர பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஒரு முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.. |
| 2018ல் உலக கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெறும் நாடு - ரஷ்யா<br>==> இதில் 27 ஆண்டுகளுக்கு பிறகு எகிப்து அணி தகுதி பெற்று விளையாட உள்ளது |
| அடுத்த கல்வியாண்டு (2018-19) முதல் சிபிஎஸ்இ பள்ளிகளில் மும்மொழி கொள்கையில் பிரெஞ்ச், ஜெர்மன், மாண்டரின் ஆகிய மொழிகள் வராது என மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கூறியுள்ளது |
| 3 வது சர்வதேச யோகா மாநாடு டெல்லியில் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு 10/10/2017 ல் தொடங்கிவைத்தார். |

| |
|---|
| இந்த ஆண்டு மாநாட்டின் கருப்பொருள் - <br>Yoga for Wellness.’ |
| பிரதமர் ஆன பின்பு முதன்முறையாக தனது சொந்த ஊரான குஜராத் மாநிலம் மேசனா மாவட்டம் வாத்நகருக்கு 7/10/2917 அன்று மோடி சென்றார் <br>==> அங்கு நோய்த்தடுப்பு (ம) பாதுகாப்பை தீவிரப்படுத்தும் "இந்திரதனுஷ்" உள்ளிட்ட சில வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைத்தார் |
| இந்திய விமானப்படையின் 85வது ஆண்டு விழா 8/10/2017 அன்று உ.பி மாநிலம் காசியாபாத்தில் உள்ள விமானப்படை தளத்தில் நடந்தது <br>==> விமானப்படை தளபதி பிரேந்தர் சிங் தனோவா <br>==> கவுரவ கேப்டன் சச்சின் டெண்டுல்கர் |
| இந்திய பணக்காரர்கள் பட்டியல் : போர்ப்ஸ் வெளியீடு <br>==> முதலிடம் - Reliance தலைவர் முகேஷ் அம்பாணி (3800 கோடி டாலர்) <br>==> 2ம் இடம் - விப்ரோ தலைவர் அசிம் பிரேம்ஜி (1900 கோடி டாலர்) <br>==> 3ம் இடம்- இந்துஜா குடும்பத்தினர் ( 1840 கோடி டாலர்) |
| துபாயில் செயல்பாட்டுக்கு வந்துள்ள உலகின் முதல் ஸ்மார்ட் போலீஸ் நிலையம் <br>துபாய்: உலகின் முதல் ஸ்மார்ட் போலீஸ் நிலையம் துபாயில் செயல்பாட்டுக்கு வந்து உள்ளது. போலீசாரே இல்லாமல் முற்றிலும் இணைய வழியில் இயங்கக்கூடிய இந்த காவல் நிலையத்துக்கு ‘எஸ்.பி.எஸ்.’ (ஸ்மார்ட் போலீஸ் ஸ்டேஷன்) என பெயர் சூட்டப்பட்டுள்ளது. |
| உலக அஞ்சலக தினத்தை(Oct-9) முன்னிட்டு இந்திய அஞ்சலகத்துறை அக்டோபர் 9 முதல் 15 வரை(Oct 9-15) "தேசிய அஞ்சலக வாரமாக"(National Postal Week) கடைப்பிடிக்கிறது <br>Source: MIB |
| டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த #Dengu_Fever_Tamil (டெங்கு காய்ச்சல் தமிழ்) என்னும் மொபைல் ஆப்யை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. |
| இலக்கிய நோபல் பரிசு : <br>==> இங்கிலாந்து எழுத்தாளர் கசுவோ இஷிகுரோ தேர்வு <br>==> இவர் ஜப்பான் நாகசாகியில் பிறந்தவர் <br>==> "The Remains Of The Day - நாளின் எஞ்சிய பொழுதுகள் " என்ற நாவல் மூலம் பிரபலமானவர். இந்த நாவல் ஆண்டனி ஹாப்கின்ஸ் நடிப்பில் சினிமாவாக வந்தது <br>==> இவரது முதல் நாவல் 1982 ல் "A Follow View of Hills - மலைகளின் ஒரு வெளிர்காட்சி" <br>==> 1986 ல் "An Artist of the Floating World - மிதக்கும் உலகின் ஒரு கலைஞன் " |
| உத்ரகாண்ட் மாநிலத்தில் ஹரித்துவாரில் சமூக மத அமைப்பான "உமையா சனஸ்தான்" சார்பில் "மா உமையா தம்" என்ற ஆசிரமத்தை PM மோடி காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார் |
| "Pradhan Mantri Gramin Digital Saksharta Abhiyan (PMGDISHA)" <br>கிராமப்புறங்களில் உள்ள 6 கோடி மக்களுக்கு டிஜிட்டல் அறிவைத் தரும் "பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்சார்தா அபியான்"(PMGDISHA) திட்டத்தை பிரதமர் மோடி குஜராத் மாநிலம் "காந்தி நகரில்" அக்டோபர் 7 அன்று தொடங்கி வைத்துள்ளார் <br>"திட்டத்தின் குறிக்கோள்கள்" <br>- PMGDISHA திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை பிப்ரவரி 2017ல் ஒப்புதல் வழங்கியது <br>- இத்திட்டத்தின் கீழ் மார்ச் 31,2019க்குள் நாட்டில் உள்ள 40% கிராமப்புற வீடுகளில் உள்ள ஒரு நபருக்காவது டிஜிட்டல் அறிவை புகட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும் <br>- இதன் கீழ் 250000 கிராம பஞ்சாயத்துக்கள் இந்த திட்டத்தின் கீழ் பதிவு செய்து சராசரியாக 200-300 நபர்கள் ஒரு பஞ்சாயத்திலிருந்து பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது <br>- 14 முதல் 60 வயது வரை உள்ளவர்கள் இந்த திட்டத்தின் கீழ் பயனடைய தகுதியடையவர்கள் <br>- இத்திட்டத்தினை மத்திய மின்னியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தும் <br>- இத்திட்டத்தின் கீழ் 2016-2017 நிதியார்டில் 25 லட்சம் பேரும், 2017-2018 நிதியாண்டில் 275 லட்சம் பேரும், 2018-2019 நிதியாண்டில் 300 லட்சம் பேரும் பயனடைய இலக்கு நிர்ணயித்துள்ளது <br>- இத்திட்டம் கிராமப்புறங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது |

Source: PIB

---

இந்திய விமானப் படையில் மிகவும் ஆற்றல் மிக்கவையாகக் கருதப்படும் "மிக்-21 பைசன்"(MiG-21 Bison squadron) ரக போர் விமானங்களை, இந்தியாவின் முதல் பெண் போர் விமானிகளான பாவனா காந்த், அவானி சதுர்வேதி மற்றும் மோகனா சிங் ஆகியோர் அடுத்த முதம் இயக்கி வரலாறு படைக்க உள்ளனர்

Source: The Hindu

---

தமிழக அரசின் 'தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம்' மற்றும் 'மங்கள்யான் தொழில்நுட்பத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம்' ஆகியவை இணைந்து படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு இலவச மேம்பாட்டு பயிற்சியை வழங்க உள்ளது

Source: Dinamani

---

வங்கதேச தலைநகர் "டாக்கா"வில் நவம்பர் 1 முதல் 8ம் தேதி வரை காமன்வெல்த் நாடளுமன்ற மாநாடு(Commonwealth Parliamen-tary Association Summit) நடைபெற உள்ளது

- மாநாட்டின் கரு- "Continuing to enhance the high standards of performance of Parliamentarians" (நாடளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகளின் தரத்தை தொடர்ந்து உயர்த்துதல்)
- இந்த மாநாட்டில் இந்திய நாடளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவை மற்றும் சட்டப்பேரவை தலைவர்களும் பங்கேற்க உள்ளனர், இதில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் "பி.தனபால்" உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளார்

Source: Dinamani

---

இந்திய விமானப்படை கமாண்டர்கள் மூன்று நாள் மாநாடு டெல்லியில் நேற்று(10-10-2017) தொடங்கியது

- இம்மாநாட்டின் போது மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா திட்டத்தில் பங்களிக்கும் நோக்கில் விமானப்படை செல்லிடப்பேசி சேவையில் பயன்படுத்தக்கூடிய "MEDWATCH" மற்றும் "AFCHAT" என்ற இரு மொபைல் செயலிகளை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அறிமுகப்படுத்தியுள்ளார்

Source: Dinamani

---

<u>பொருளாதார ஆலோசனைக் குழு{Economic Advisory Council (EAC)}</u>

- EAC ஒரு அரசியலமைப்பு சாராத(non-constitutional) நிரந்தரமில்லாத(non-permanent) மற்றும் சுதந்திரமான(independent body) அமைப்பு
- நாட்டின் பொருளாதார விவகாரங்களில் பிரதமருக்கு இக்குழு ஆலோசனை வழங்கும்
- முதல் கூட்டம்- 11-10-2017

தலைவர்: Dr. Bibek Debroy, Member, NITI Aayog

செயல் உறுப்பினர்: Ratan P. Watal, Principal Adviser, NITI Aayog

பகுதி நேர உறுப்பினர்கள்:

(1) Dr. Surjit Bhalla
(2) Dr. Rathin Roy and
(3) Dr. Ashima Goyal

---

"Kranti Nation: India and the Fourth Industrial Revolution" என்ற புத்தகத்தை எழுதியவர் "Pranjal Sharma"

---

2019 FIFA பெண்கள் உலக கோப்பை கால்பந்து போட்டிகள் "பிரான்ஸ்" நாட்டில் நடைபெற உள்ளது

Source: The Hindu

---

இந்திய தொழிலகங்கள் கூட்டமைப்பு(CII) சார்பில் நடத்தப்படும் 2வது தேசிய IOT மாநாடு டெல்லியில் நடைபெற்று முடிந்துள்ளது

- IoT- Internet of Things

Source: PIB

---

அயோத்தியில் உள்ள சராயு நதிக்கரையில்(Saryu River) ராம பிரானுக்கு 100மீ உயரம் கொண்ட சிலையை அமைக்க உத்திர பிரதேசத்தை ஆளும் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பாஜக அரசு திட்டமிட்டுள்ளது

Spurce: The Hindu

---

5வது இந்தியா நீர் வாரத்தை(India Water Week) குடியரசுத் தலைவர் 'ராம்நாத் கோவிந்த்' டெல்லியில் நேற்று(10-10-2017) தொடங்கி வைத்துள்ளார்

- அக்டோபர் 10 முதல் 14ம் தேதி வரை இந்தியா நீர் வாரம் நாடு முழுவதும் கடைபிடிக்கப்படும்
- Theme- "Water and Energy for Inclusive Growth"

Source: PIB

---

"Lal Bahadur Shastri National Award for Excellence in Public Administration, Academics and Management"

- பொது நிர்வாகம் மற்றும் மேலாண்மையில் சிறந்து விளங்குவோருக்கு வழங்கப்படும் லால் பகதூர் சாஸ்திரி தேசிய

| |
|---|
| விருது "Bindeshwar Pathak"ற்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது<br>Source: PIB |
| இந்திய தொழில் மற்றும் வணிக நிறுவனங்களின் கூட்டமைப்பு(FICCI) சார்பில் நடத்தப்படும் "இந்திய சுகாகார பராமரிப்பு மேம்பாடு மாநாடு 2017" (Advantage Health Care India 2017) "பெங்களூரில்" நாளை(12-10-2017) தொடங்குகிறது<br>- 73 நாடுகளிலிருந்து இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்<br>Source: PIB |
| முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அமைச்சரவையில் முக்கிய பதவி வகித்த "Nisha Desai Biswal" அமெரிக்கா-இந்தியா வியாபாரக் குழுவின்(USIBC) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்<br>- USIBC- US India Business Council<br>Source: AIR |
| பருவநிலை மாறுபாட்டிற்கு எற்றார் போல் தகவமைத்துக் கொள்ளும் கொள்கைக்கு(Climate Change Adaptation Policy) "மஹாராஷ்ட்ரா" மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது<br>Source: AIR |
| டாக்டர் "C.பழனிவேல்" எழுதிய "Minimally Invasive GI Cancer Surgery" என்ற புத்தகத்தையும், டாக்டர் "P.பிரவின் ராஜ்" எழுதிய "Bariatric Surgical Practice Guide" என்ற புத்தகத்தையும் துணை குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு வெளியிட்டுள்ளார்<br>Source: AIR |
| டெல்லியை தொடர்ந்து மும்பையிலும் பட்டாசு விற்பனைக்கு தடை... |
| வடகொரியா கப்பல்கள் உலக நாடுகளின் எந்த துறைமுகத்துக்கும் செல்ல அனுமதி இல்லை: ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் நியூயார்க்: வடகொரியாவின் 4 கப்பல்கள் உலக நாடுகளின் எந்த துறைமுகத்துக்கும் செல்லக் கூடாது என்று நேற்று(10-10-17) புதிதாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தடை விதித்துள்ளது. |
| அக்டோபர் 11<br>உலக உடல் பருமன் தினம்<br>தீம் 2017: "இப்போது உடல் பருமன் சிகிச்சை மற்றும் பின்னர் விளைவுகளை தவிர்த்தல்" |
| மொனாக்கோவிற்கான அடுத்த இந்திய தூதராக<br>V M Kwatra (Vinay Mohan Kwatra) நியமிக்கப்பட்டுள்ளார்.<br>V M Kwatra தற்போது பிரான்ஸ் நாட்டின் இந்திய தூதராக உள்ளார். |
| அரசாங்க வேலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் மாற்றுதிறானிகளுக்கு இட ஒதுக்கீடு அளிக்க பீகார் அரசு ஒப்புதல் அளித்துள்ளது... |
| டிஜிட்டல் டான் சன்கல்ப் திட்டத்திற்கான (Digital Dhan Sankalp project) ஆந்திர பிரதேச அரசுடன் விசா(visa) இணைந்துள்ளது.இது இந்தியாவின் முதல் 'cash less' நகரமாக விசாகப்பட்டினத்தை உருவாக்கும் முயற்சியாகும்.<br>விசாக் டிஜிட்டல் டான் சன்கல்ப் (Vizag Digital Dhan Sankalp (VDDS)) திட்டத்தின் கீழ் மாநிலத்தின் அரசுக்குச் சொந்தமான சேவை டிஜிட்டல் முறையில் மின் மாற்றுதல்<br>(e-transformation) மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. |
| ஹிமாச்சல பிரதேச அரசு மூத்த குடிமக்களுக்கான சுகாதார காப்பீட்டு திட்டத்தை(Senior Citizen Health Insurance Scheme (SCHIS) செயல்படுத்த இருக்கின்றது. இது கூடுதலாக மருத்துவ நலன்புரிவதற்கும் மற்றும் பராமரிப்பு சேவைகளை எளிதில் அணுக முடியும்.<br>இந்தத் திட்டம், தற்போதுள்ள அனைத்து Rashtriya Swasthya Bima Yojna (RSBY) ஸ்மார்ட் கார்ட் வைத்திருப்பவர்களுக்கும் மற்றும் மூத்த குடிமக்களுக்கும் 30,000 ரூபாய் வரை வழங்கப்படும் என அறிவித்துள்ளனர். |
| மஹாராஷ்டிரா மாநில அரசு<br>அக்டோபர்.10.2017ம் தேதி சுற்றுச்சூழலில் நட்பாக கிராமங்கள் மற்றும் நகரங்களை வளர்ப்பதில் கவனம் செலுத்தும் வகையில்,<br>காலநிலை மாற்றம் தழுவல் கொள்கைக்கு (climate change adaptation policy) ஒப்புதல் அளித்துள்ளது. |
| பாகிஸ்தான் கால்பந்து கூட்டமைப்பில் தேவையற்ற மூன்றாம் தரப்பு குறுக்கீடு இருக்கும் காரணத்தால் கூட்டமைப்பை இடைநீக்கம் செய்வதாக உலகக் கால்பந்து கூட்டமைப்பு (ஃபிஃபா) அறிவித்துள்ளது.<br>இதுதொடர்பாக ஃபிஃபா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றில், கடந்த 10 ஆம் தேதி ஃபிஃபா ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றதாகவும், அதில் எடுக்கப்பட்ட முடிவை அடிப்படையாக கொண்டு பாகிஸ்தான் கால்பந்து கூட்டமைப்பை உடனடியாக இடைநீக்கம் செய்வதாகவும் கூறப்பட்டுள்ளது. |

மஹாராஷ்ட்ரா மாநிலம் மும்பை புறநகரான எல்பின்ஸ்டன் சாலை ரயில் நிலையம் (Elphinstone Road station) அருகே நடை மேம்பாலத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 23 பேர் உயிரிழந்ததை தொடர்ந்து, அப்பகுதியில் 18 மாதமாக கட்டி முடிக்காத புதிய ரயில் நடை மேம்பாலத்தை பற்றி விசாரிக்க முன்னாள் ஊழல் கண்காணிப்பு ஆணையர்(CVC) "Pratyush Sinha" தலைமையில் விசாரணை குழு ஒன்றை மத்திய இரயில்வே துறை அமைத்துள்ளது
- இக்குழு 3 மாதத்திற்குள் தனது அறிக்கையை மத்திய அரசுக்கு சமர்பிக்கும்
Source: ANI

அழுத்தப்பட்ட இயற்கை வாயு எனப்படும் CNG வாயுவை பீரிபெய்ட் முறையில் பெறுவதற்காக "IGL Smart Card" திட்டத்தை மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் டெல்லியில் தொடங்கி வைத்துள்ளார்
- இந்த ஸ்மார்ட் கார்ட் மூலம் IGL வாயு மையங்களில் பணம் செலுத்தாமலே இயற்கை வாயுவினை பெறலாம்
- இந்த ஸ்மார்ட் கார்ட் சில்லறை வணிகர்கள்(Retail) மற்றும் மொத்த வணிகர்களுக்கும்(Fleet Customers) பொருந்தும்
- IGL- Indraprashtha Gas Limited
- IGL நிறுவனம் 1998ம் ஆண்டு நிறுவப்பட்டது, 1999ம் ஆண்டு GAIL நிறுவனத்தால் கையகபடுத்தப்பட்டது

இந்திய திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவன சேர்மனாக நடிகர் அனுபம் கேர் நியமனம் செய்யப்பட்டார்.

சர்வதேச கடற்சார் வழிகாட்டுதல் மற்றும் கலங்கரை விளக்குகள் கூட்டமைப்பு ஆணையத்தை(IALA) அரசு சாரா தொண்டு நிறுவன(NGO) தகுதியிலிருந்து, அரசுகளுக்கிடையேயான தொண்டு நிறுவனராக(IGO) மாற்ற மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது
- International Association of Marine Aids to Navigation and Lighthouse Authorities
Source: PIB

மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர பத்னாவிஸ், 'மகாலாபாரத்'(MahaLabharthi) என்ற வலைதளப் போர்டல் அறிமுகப்படுத்தியுள்ளார், இது அரசின் அனைத்து திட்டங்களை பற்றிய தகவலைப் பெற உதவும் எனவும், இந்த இணைய வலைத் தளத்தை மற்ற வலைத்தளங்களுடன் இணைத்து மக்களுக்கு நலன்புரி திட்டங்களுக்கு விண்ணப்பிக்க எளிதாக இருக்கும் எனவும் அறிவித்துள்ளனர்.

ஆஷிஷ் நெக்ரா சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறார்..

இந்திய ரிசர்வ் வங்கி (ரிசர்வ் வங்கி) 9 மாநிலங்களில் 80 தொகுதிகள் ஒரு நிதியியல் எழுத்தறிவு இயக்கம் (financial literacy drive) ஒன்றை துவக்க முடிவு செய்துள்ளது. இது
pilot திட்டம் என்னும் பெயரில்
மின்-பரிவர்த்தனைகள், முறையான கடன் மற்றும் காப்பீட்டு கொள்முதல் ஆகியவற்றில் மக்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக தொடங்க உள்ளது.
மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், பீகார், ஒடிசா, கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா, ஹரியானா, உத்திரப்பிரதேசம் உள்ளிட்ட 9 மாநிலங்களில் பைலட் திட்டம் (pilot project)அமல்படுத்தப்படும் என அறிவித்துள்ளனர்.

நன்றி - Prathiksha
தெற்கு டெல்லி மாநாகராட்சி விகாஸ்பூரில் முதல்முறையாக சர்வதேச பெண் குழந்தை தினத்தன்று பிங்க் கழிப்பறை துவக்கியுள்ளது. இந்த நவீன கழிப்பறை தாய்மார்கள் பாலூட்டும் தனி அறைகளையும் கொண்டதாகவும் உள்ளது. உயர் அதிகாரிகள் இந்த நவீன கழிப்பறைகள் பெண்களின் பாதுகாப்பிற்காகவும் மற்றும் பொது இடங்களில் சுகாதாரமான கழிப்பறை ஏற்படுத்தி தருவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என கூறியுள்ளனர்.

பல்கேரிய சர்வதேச எதிர்கால தொடர் (International Future Series tournament) போட்டியில் ஆண்கள் ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.
முகமது அலி கர்ட் (Muhammed Ali Kurt) துருக்கியைச்சேர்ந்தவரை தோற்கடித்தார்.
Gurusaidutt காமன்வெல்த் விளையாட்டில் வெண்கலப் பதக்கத்தை வென்றவர்.

ஜெர்மனியில் சர்வதேச புகழ்பெற்ற பிராங்க்பர்ட் புத்தகக் கண்காட்சி தொடக்கம்
ஜெர்மனி: ஜெர்மனியில் சர்வதேச புகழ்பெற்ற 69வது பிராங்க்பர்ட் புத்தகக் கண்காட்சி தொடங்கியது. இதையொட்டி கண்காட்சி நடக்கும் ரோமெர் டவுன் ஹால் மின்னலங்காரத்தில் ஜொலிக்கிறது. இந்த பிராங்க்பர்ட் புத்தகக் கண்காட்சியை ஜேர்மன் அதிபர் அங்கேலா மேர்க்கெல் மற்றும் பிரஞ்சு அதிபர் இமானுவேல் மேக்ரோன் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.

இமாச்சல பிரதேச சட்டசபைக்கு நவம்பர் 9-ம் தேதி தேர்தல்: டிச.18 வாக்கு எண்ணிக்கை..

இந்தியா மற்றும் ஜப்பான் இடையே உலகளாவிய திரவ இயற்கை எரிவாயு

| |
|---|
| (LNG-Liquefied Natural Gas) சந்தை நிறுவ ஒத்துழைப்பில் கையெழுத்து அளித்ததுள்ளனர். |
| தமிழகத்தில் முதன்முறையாக நடமாடும் அஞ்சலகம்: சென்னையில் அறிமுகம் செய்யப்பட்டள்ளது.. |
| தடய அறிவியல் பல்கலைக்கழகம் (Forensic Science University ):<br>குஜராத்தில் உலகிலேயே முதல் முறையாக தடய அறிவியல் பல்கலைக்கழகம் அமைக்கப்பட உள்ளது.<br>நன்றி - Vijayaraj Selvaraj... |
| 2017 ஆம் ஆண்டுக்கான உலக சோலார் கார் பந்தையம்: நெதர்லாந்தை சேர்ந்த அணி வெற்றி<br>டார்வின்: சூரிய ஒளியில் இயங்கும் கார்களுக்கான உலக சோலார் சேலஞ்ச் கார் பந்தயம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது. |
| இந்தியா மற்றும் மொராக்கோ இடையே oct 11 நீர் வளங்கள் ஒத்துழைப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழத்தானது.<br>• ஹைட்ராலிக் உள்கட்டமைப்பு, குறிப்பாக பெரிய அணைகள் மற்றும் நீர் பரிமாற்ற திட்டங்களின் கருத்துணர்தல் மற்றும் அவைகளின் பராமரிப்பு ஆகும். |
| வடகொரியா கப்பல்கள் உலக நாடுகளின் எந்த துறைமுகத்துக்கும் செல்ல அனுமதி இல்லை: ஐ.நா பாதுகாப்பு கவுன்சில்<br>நியூயார்க்: வடகொரியாவின் 4 கப்பல்கள் உலக நாடுகளின் எந்த துறைமுகத்துக்கும் செல்லக் கூடாது என்று நேற்று(10-10-17) புதிதாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தடை விதித்துள்ளது.<br>அந்த நாட்டின் கப்பல்கள் பெட்ரெல் 8, ஹாவோ பான் 6, டோங் சான் 2, ஜி சுன் ஆகிய 4 வர்த்தக கப்பல்கள். |
| 2023 - ல் வெள்ளிக் கோளில் ஆய்வு செய்யத் திட்டம் :<br>2023 ம் ஆண்டில் வெள்ளிக் கோளில் ஆய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் திரவ உந்துகை வளாக(மகேந்திரகிரி) இயக்குனர் எஸ். பாண்டியன் கூறியுள்ளார். |
| 18 வயதுக்கும் குறைவான மனைவியுடன் கணவர் தாம்பத்ய உறவு வைத்துக் கொள்வது பாலியல் பலாத்காரம் மற்றும் தண்டனைக்குரிய கிரிமினல் குற்றம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது<br>- இந்திய தண்டனையியல் சட்டத்தில் 375வது பிரிவில்(IPC 375) இருக்கும் விதிவிலக்கில் 15 வயதுக்கும் குறைவில்லாத மனைவியுடன் அவரது கணவர் தாம்பத்யம் வைப்பது பாலியல் பலாத்காரம் அல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது<br>- இந்த விதிவிலக்கானது வாழ்வதற்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள், சிறார்களை சரிக்கு நிகராக நடத்த வேண்டும் என்ற விதி, அரசியலமைப்பு சட்டத்தின் 14,15 மற்றும் 21 ஆகிய பிரிவுகளுக்கு எதிரானது என தெரிவித்து 15 முதல் 18 வயது வரையிலான மனைவியுடன் கணவர் தாம்பத்ய உறவு கொள்வது பாலியல் பலாத்காரம் மற்றும் தண்டனைக்குரிய குற்றம் என தீர்ப்பு வழங்கியுள்ளது<br>Source: The Hindu |
| திறன் இந்தியா திட்டத்தை மேம்படுத்தும் வகையில் உலக வங்கியின் 6655 கோடி ரூபாய் உதவியில் "SANKALP" மற்றும் "STRIVE" என்ற இரண்டு புதிய திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் வழங்கியுள்ளது<br>- SANKALP- Skills Acquisition and Knowledge Awareness for Livelihood Promotion<br>- STRIVE- Skill Strengthening for Industrial Value Enhancement |
| நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஊக்கிவிக்க, ஒரு லட்சம் இந்திய இளைஞர்களை தொழில்நுட்ப பயிற்சி பெற "ஜப்பான்" நாட்டிற்கு அனுப்புவதற்கான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் வழங்கியுள்ளது<br>- திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் அனுப்பப்படும் இந்திய இளைஞர்கள் 3 முதல் 5 ஆண்டுகள் வரை ஜப்பானில் பயிற்சி பெறுவர்<br>Source: PIB |
| இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் நிகழாண்டில் 7 சதவீதமாக குறையும் என்று உலக வங்கி கணித்துள்ளது<br>- முன்னதாக இந்திய பொருளாதார வளர்ச்சி விகிதம் நிகழாண்டில் 6.7 சதவீதமாக குறையும் என்று சர்வதேச செலவாணி நிதியம்(IMF) கணித்திருந்தது குறிப்பிடத்தக்கது<br>Source: Dinamani |
| "SIT on blackmoney under the RTI Act: CIC"<br>கருப்பு பணம் தொடர்பாக விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றத்தால் "எம்.பி.ஷா"(MB Shah) தலைமையில் நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழு(SIT), தகவல் அறியும் உரிமை சட்ட(RTI) வரம்புக்குட்பட்டது என்று மத்திய தகவல் ஆணையம்(CIC) தெரிவித்துள்ளது<br>- வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இந்தியர்களின் கருப்புப் பணம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 2014ம் ஆண்டு "எம்.பி.ஷா" தலைமையில்சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது |

| |
|---|
| Source: Dinamani |
| "First meeting of Economic Advisory Council"<br>நாட்டின் பொருளாதார விவகாரங்களில் பிரதமருக்கு ஆலோசனை வழங்கும் குழுவின் முதல் கூட்டம் நேற்று(11-10-2017) புது டெல்லியில் நடைபெற்றது<br>"முதல் கூட்டத்தின் பரிந்துரைகள்"<br>- தொழில் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிரதமருக்கு ஆலோசனைக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது<br>- அதே நேரத்தில் நிதிப் பற்றாக்குறையை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் இருந்து பின் வாங்க கூடாது என்றும் பரிந்துரைத்துள்ளது<br>Source: PIB |
| "48th Conference of Governors"<br>புதிய இந்தியாவை(New India 2022) உருவாக்குவது தொடர்பாக நாட்டில் உள்ள அனைத்து ஆளுநர்களும் பங்கேற்கும் 48வது ஆளுநர்கள் மாநாடு புது டெல்லியில் இன்று(12-10-2017) குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் தொடங்குகிறது<br>Source: AIR |
| "Vachan Prerna Divas' (Inspire to Read Day)"<br>டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாமின் பிறந்த தினமான "அக்டோபர் 15" அன்று மாணவர்களிடையே புத்தகம் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கம் வகையில் அந்நாளை "படிக்க ஊக்குவிக்கும் நாள்"ஆக மத்திய அரசு அனுசரிக்க உள்ளது |
| "Commemorative postage stamp on Nanaji Deshmukh"<br>சமூக சீர்த்திருத்தவாதி நானாஜி தேஷ்முக்கின்(Nanaji Deshmukh) 100வது பிறந்த நாளையொட்டி(11-10-2017) நினைவு அஞ்சல் தலையை பிரதமர் மோடி வெளியிட்டுள்ளார்<br>Source: PIB |
| இந்தியாவின் சர்வதேச அறிவியல் மாநாடு :<br>==> சென்னையில் அக் 13 லிருந்து 4 நாட்கள் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது<br>==> 2015 முதல் ஆண்டுதோறும் இம்மாநாடு நடத்தப்படுகிறது<br>==> சர்வதேச அளவில் இந்திய அறிவியல் (ம) தொழில்நுட்பம் 12வது இடத்தில் இருந்து 9வது இடத்துக்கு முன்னேறியுள்ளது<br>==> மத்திய அறிவியல் (ம) தொழில்நுட்ப துறை மந்திரி ஹர்சவர்தன் |
| "India's first Sewage Treatment Plant under Hybrid Annuity Mode"<br>இந்தியாவின் முதல் கலப்பு மானிய ஆண்டுச் சந்தா மூலம் அமையும் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகள் "ஹரித்துவார் மற்றும் வாரணாசியில்" அமைய உள்ளது<br>Source: PIB |
| "Gujarat Garments & Apparel Policy 2017"<br>"குஜராத்" மாநில அரசு புதிய ஜவுளி மற்றும் ஆடை கொள்கையை வெளியிட்டுள்ளது<br>Source: The Hindu |
| "11th WTO Ministerial Conference"<br>உலக வர்த்தக நிறுவனத்தின் 11வது அமைச்சர்களுக்கான மாநாடு "அர்ஜென்டினா" நாட்டின் "Buenos Aires" நகரில் நடைபெற உள்ளது<br>Source: The Hindu |
| "IIT-Roorkee" சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சிக்கன் குனியாவிற்கு எதிரான "Piperazine" என்ற புதிய மருந்தினை கண்டறிந்துள்ளனர்<br>Source: The Hindu |
| கிராம பஞ்சாயத்துகளில் உள்ள கிராமங்களின் வளர்ச்சி பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள "Gram Samvaad" என்ற புதிய மொபைல் செயலியை பிரதமர் மோடி வெளியிட்டுள்ளார்<br>- "தகவல்கள் மூலம் ஆதாரமளித்தல்" (Empowerment through Information) என்ற கருவினை கொண்டு இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது<br>Source: PIB |
| விண்வெளியில் வலம் வந்து கொண்டு இருக்கும் "TC4" என்ற விண்கல்(Asteroid) பூமியை இன்று(12-10-2017) கடந்து செல்ல இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்<br>- பூமியிலிருந்து சுமார் 42000 கிமீ தொலைவு வரை வந்து செல்லவிருக்கும் இந்த விண்கல்லால் பூமிக்கு எந்த பாதிப்பும் |

| |
|---|
| இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது<br>- இந்த விண்கல் 15 முதல் 20மீ வரை அகலம் கொண்டது<br>- TC4 விண்கல் 2012ம் ஆண்டு அக்டோபர் 12ம் தேதி "அண்டார்டிகா" கண்டத்திற்கு மிக அருகில் கடந்து சென்றது குறிப்பிடத்தக்கது<br>Source: Dinamani |
| உலக முட்டை தினத்தை (13/10) முன்னிட்டு மகாராஷ்டிர மாநிலத்தின் தானே மற்றும் பல்கார் மாவட்டங்களில் 2.5 லட்சம் குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்பட்டது. |
| உலக பார்வையற்றோர் தினத்தை முன்னிட்டு பேரணி : மருத்துவர்கள் கண்ணை கட்டிக்கொண்டு நடைப்பயணம்<br>சென்னை: உலக பார்வையற்றோர் தினத்தை முன்னிட்டு சென்னை சேப்பாக்கத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனை டாக்டர்கள் மற்றும் செவிலியர்களுடன் பொதுமக்களும் பங்கேற்று கண்ணை கட்டிக்கொண்டு நடைப்பயணமாக, மருத்துவமனையை சுற்றி வந்தனர். உலக பார்வையற்றோர் தினத்தை முன்னிட்டு பிளைன்ட் வாக் நடைப்பயணம் அடையாறில் 12/10/2017 ல் நடந்தது. இதில் ஏராளமான மாணவ மாணவிகள் கண்களை கட்டிக்கொண்டு பாததைகள் ஏந்தி விழிப்புணர்வில் ஈடுப்பட்டனர். |
| அங்கீகாரம் இல்லாத மனைகளை வரன்முறை படுத்தும் திட்டம் 2018 மே 3ஆம் தேதி வரை நீட்டித்து தமிழக அரசு அறிவிப்பு |
| மத்தியபிரதேச அரசு பெட்ரோலுக்கு 5% மும்,டீசலுக்கு 3% மும் value added tax (வாட்) வரியை குறைந்துள்ளது. |
| இந்திய கடற்படை கப்பல்கள் சதுப்புரா மற்றும் கட்மட் ஆகிய கப்பல்கள் ஜப்பானிய கடற்படையுடன் சேர்ந்து #Passage_Exercise (PASSEX) இல் oct 12 முதல் 15 வரை கலந்துகொண்டு உள்ளது.<br>இப்பயிற்ச்சி ஜப்பானின் Sasebo நகரில் நடைபெறுகிறது. |
| குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள்<br>இந்தாண்டுக்கான #லால்பகதூர்_சாஸ்திரி விருதை #பிந்தேஸ்வர்_பாதக் அவர்களுக்கு வழங்கினார் |
| சென்னையில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும், மக்களுக்கு பயனுள்ள வகையிலும் இலவச சைக்கிள் திட்டம் மெட்ரோ ரயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br>முதல் கட்டமாக பரீட்சார்த்த முறையில் தொடங்கப்பட்டுள்ள இந்த சைக்கிள் சேவையில், ஒவ்வொரு மாதமும் முதல் 100 மணி நேரம் இலவசமாக பயணம் செய்யலாம். |
| முதன் முறையாக இந்திய உதிரி பாகங்களை கொண்டு ரயில் பெட்டிகள் தயாரிப்பு<br>சென்னை: மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் நாட்டிலேயே முதன் முறையாக சென்னை ஐ.சி.எ.்ப் ரயில் பெட்டி தொழிற்சாலையில் இந்திய உதிரி பாகங்களை கொண்டு ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1995-ம் ஆண்டு முதல் ஜெர்மன் நாட்டுடனான ஒப்பந்த அடிப்படையில் சென்னை, புனே, பஞ்சாப் உள்ளிட்ட இடங்களில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br>இந்நிலையில் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.9 கோடி செலவில் ஐ.சி.எ.்ப் ரயில் பெட்டி தொழிற்சாலையில் இந்திய உதிரிபாகங்களை கொண்டு இரண்டு குளிர்சாதன வசதி ரயில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை ஐ.சி.எ.்ப் பொது மேலாளர் இன்று பார்வையிட்டார். இதுகுறித்து பேசிய அவர், தயாரிப்பு செலவு 30 சதவிகிதம் குறைந்துள்ளதாகவும், இனி இந்திய உதிரிபாகங்களை கொண்டே ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இந்த ரயில் எப்போது பயன்பாட்டிற்கு வரும் என்பது குறித்த தகவல்கள் அளிக்கவில்லை. |
| மத்திய அரசின் திட்டம்.. தபால் நிலயம் மூலம் கிராமங்களுக்கான காப்பீடு திட்டம்!<br>#SampoornaBimaGramYojana<br>மத்திய அரசு கிராமங்களுக்கான காப்பீடு திட்டம் ஒன்றை 'சம்பூரணப் பீமா கிராம யோஜனா' என்ற பெயரில் வெளியிட்டுள்ளது. இந்தக் காப்பீடு திட்டம் இந்திய தபால் அலுவலகத்தின் காப்பீடு திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றது. மேலும் இந்தப் பாலிசி ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்து ஒரு கிராமத்திற்கு வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது. |
| International Food Policy Research Institute (IFPRI) என்ற அமைப்பு வெளியிட்டுள்ள#உலகளாவிய_பட்டினி_குறியிட்டில்(global hunger index) இந்தியா 100 வது இடத்தை பிடித்துள்ளது. |
| வாஷிங்டன்: அமெரிக்காவிலும் கனடாவிலும் வசிக்கும் தமிழர்கள் கொண்டாடும் விழாவான பெட்னா மாநாடு 2018, டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள டல்லாஸ் மாநகரத்தில் நடைபெற உள்ளது. |
| இந்திய விமானப்படையின் 85 வது ஆண்டு தினத்தை முன்னிட்டு #MedWatch என்னும் மொபைல் ஆப்பை இந்திய விமான படை அறிமுகப்படுத்தியுள்ளது |

| |
|---|
| India International Science Festival (IISF) 2017:<br>3 வது சர்வதேச இந்திய அறிவியல் திருவிழா சென்னையில் தொடங்கியுள்ளது. (அக்டோபர் 13 முதல் அக்டோபர் 16)<br>3rd India International Science Festival(IISF) at Chennai during 13-16 October,2017 |
| 2019 ஆம் ஆண்டு UAE ல் நடக்க இருக்கும் ஆசிய கோப்பைக்கு(U-17)கால்பந்து போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது. மகாவ் அணியினை 4-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றதன் மூலம் இந்த தகுதி பெற்றுள்ளது. |
| பிபா உலக கோப்பை கால்பந்து தகுதி போட்டி நடத்த கொலம்பியாவின் லிமாவில் நடைபெற்றுள்ளது |
| சீனாவுக்கான இந்திய நாட்டின் தூதராக #கௌதம் பம்பவேலை மத்திய அரசு நியமித்துள்ளது |
| உலகின் பாதுகாப்பான நகரங்கள் பட்டியல் (The safe cities index)ல் ஜப்பானின் #டோக்கியோ நகரம் 89.80 புள்ளிகளை பெற்று முதலிடத்தை பிடித்துள்ளது.<br>இந்த பட்டியலில் இந்தியாவின் தலைநகர் டெல்லி 43 இடத்தை பெற்றுள்ளது. |
| பிரதமர் மோடி தலைமையில் குழு :<br>மகாத்மா காந்தியின் 150 வது பிறந்த தினத்தை (அக்டோபர் 02, 2019) ஆண்டு முழுவதும் கொண்டாடுவதற்கு ஒத்துழைப்பதற்காக பிரதமர் மோடி தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. |
| அக்டோபர் 13:பேரழிவு குறைப்புக்கான சர்வதேச தினம் |
| யுனெஸ்கோவில் இருந்து விலகப்போவதாக டிரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்த விலகல் டிசம்பர் 2018 இறுதியில் நடைமுறைக்கு வரும் என்றும், அதுவரை யுனெஸ்கோவில் அமெரிக்கா முழு உறுப்பினராக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு மறுபரிசீலனை செய்யப்படலாம் என்றும் கூறப்படுகிறது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, யுனெஸ்கோ பாலஸ்தீனத்தை உறுப்பினராக சேர்த்துக்கொண்டதை அடுத்து அமெரிக்கா, யுனெஸ்கோவுக்கு வழங்கிவந்த நிதியைக் குறைத்தது. எனினும் அமெரிக்கா செலுத்தவேண்டிய பங்களிப்பு நிலுவை கூடிக்கொண்டே வந்தது. யுனெஸ்கோவில் இருந்து விலகுவதற்கு இதையும் ஒரு காரணமாக அமெரிக்கா கூறியுள்ளது.<br>யுனெஸ்கோவில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவித்ததையடுத்து இஸ்ரேலும் விலகப் போவதாக அறிவித்தது. அமெரிக்காவின் இந்த முடிவை துணிச்சலான, அறம் சார்ந்த முடிவு என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார். அமெரிக்கா விலகும்போது அந்த சமயத்தில் இஸ்ரேலும் விலகுவதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி வெளியுறவுத் துறைக்கு அறிவுறுத்தியிருப்பதாக பெஞ்சமின் நேதன்யாகு டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவின் இந்த முடிவு குறித்து யுனெஸ்கோ கவலை தெரிவித்துள்ளது. பன்முகத் தன்மை மற்றும் ஐ.நா. குடும்பத்திற்கு இழப்பு என்றும் யுனெஸ்கோ கூறியுள்ளது. |
| உலகின் முதல் எதிர்மறை உமிழ்வு ஆலை ஐஸ்லாந்தில் தொடங்கி உள்ளனர்...<br>First negative emissions plant starts operations in Iceland. |
| ஐஸ்கிரீம் தயாரிப்பில் சீனா முதலிடத்தில் உள்ளது |
| உலகின் முதல் மிதக்கும் காற்றாலை பண்ணை ஸ்காட்லாந்தில் தொடங்கப்பட்டுள்ளது |
| விதைகள் உற்பத்தியில் தமிழகம் நாட்டிலையே முதலிடம் வகிக்கிறது |
| டெல்லியில் ஹிமாயூன் கல்லறையில் இருந்து "Paryatan parv" என்னும் சுற்றுலா திருவிழா அக்டோபர் 5 ல் தொடங்கி அக்டோபர் 25 வரை நடைபெறுகிறது |
| எத்தியோபியா அதிபர் #முலாட்டு_டெசோம்<br>இங்கு இந்திய குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் முதல் அரசுமுறை பயணம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது |
| ஸ்ரீ ராமானுஜரின் 1000மாவது ஆண்டு விழாவை முன்னிட்டு #ஸ்ரீ_ராமானுஜர்_அவதார்_திருவிழாவைசிறப்புடன் நடத்த மத்திய அரசு #ராஜ்நாத்சிங்தலைமையில் 7 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது |
| அக்டோபர் 12: உலக பேப்பர் பாய்ஸ் தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது |
| தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் www.tnrera.in என்ற இணையதளம் தமிழக முதல்வர் பழனிச்சாமி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. |
| தமிழ் இணையகல்வி கழகத்தால் அரசுதுறைகளை ஆவணப்படுத்தியத்தின் தொகுப்பு இணையதளமான www.tamilvu.org மற்றும் #தமிழிணையம்_மென்பொருள்_தொகுப்பு_2 ஆகியவை தமிழக முதல்வர் பழனிச்சாமி தொடங்கி வைத்தார் |

| |
|---|
| தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் தமிழ் &ஆங்கிலத்தில் மாதம் இருமுறை வெளிவர உள்ள #இ_மடல் இதழை முதல்வர் எடப்பாடி தொடங்கி வைத்தார் |
| சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் செயல் இயக்குனராக பி.எஸ்.ஷேகாவத் நியமிக்கப்பட்டுள்ளார் |
| டெங்கு காய்ச்சல் பாதிப்பு குறித்து ஆய்வு செய்ய #ஆசுதோஷ்_பிஷவாஸ் தலைமையில் மத்திய குழு தமிழகத்தில் ஆய்வு மேற்கொண்டு உள்ளது. |
| ஆரிஜின் என்ற நூலை எழுதியவர் #டான் பிரவுன் |
| யுனெஸ்கோ அமைப்பின் புதிய தலைவராக பிரான்ஸ் நாட்டின் முன்னாள் கலாச்சாரத் துறை அமைச்சர் அட்ரா அஜெளலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். |
| சவூதி அரேபியா விளையாட்டு சம்மேளனத்தின் முதல் பெண் தலைவராக அந்நாட்டின் இளவரசி ரிமா பிந் பண்டார் பின் சுல்தான்(Princess Rima bint Bandar bin Sultan) தேர்வு செய்யபட்டுள்ளார்.<br>ஆண்கள் மற்றும் பெண்களுக்கான விளையாட்டு நடவடிக்கைகளை வழிநடத்தும் முதல் பெண் என்ற பெருமையை இளவரசி ரிமா பிந் பண்டார் பின் சுல்தான் பெருகிறார். |
| ஆயுஷின் முதல் சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி துபாயில் நவம்பர் 09/10/11 -2017 ல் நடைபெற உள்ளது என அந்நாட்டிற்கான இந்திய தூதர் நவ்தீப் சுரி அறிவித்துள்ளார். |
| திருநெல்வேலி மாவட்டத்தில் நரிக்குறவர்கள் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் "Project Spark-Inspire & Ignite"என்னும் திட்டத்தினை மாவட்ட ஆட்சியர் சந்திப் நந்தூரி அவர்கள் தொடங்கி வைத்தார். |
| சர்வதேச அலைச்சறுக்குப் பந்தயத்தின் மூன்றாவது சுற்றில் ஹவாய் தீவைச் சேர்ந்த அமெரிக்க வீரர் ஜான் ப்ளோரென்ஸ் வெற்றி பெற்றார்.<br>பிரான்சில் நடந்த போட்டியில், அலைகளில் சாகசம் செய்து வீரர்கள் அசத்தினர். உயரமாக எழும்பிய அலைகளில், ஜான் ப்ளோரென்ஸ் லாவகமாக செயல்பட்டு 19.16 புள்ளிகள் பெற்றார். இதன்மூலம் ஆஸ்திரேலியாவின் ஈதன் எவிங்கின் சவாலை அவர் முறிடியத்தார். மேலும், 2017-ம் ஆண்டிற்கான உலக சர்வதேச அலைச்சறுக்கு பட்டத்தை அவர் வெல்வது உறுதியாகியுள்ளதாக கூறப்படுகிறது |
| நீராவி எஞ்சின் மூலம் இயங்கும் பாரம்பரியமிக்க உதகை மலை ரயில் சேவையானது, ஆங்கிலேயர்கள் காலத்தில் 1908-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.<br>வனப்பகுதி வழியாகவும் 10-க்கும் மேற்பட்ட குகைகள் வழியாகவும், 250 பாலங்கள் வழியாகவும் செல்லும் இந்த மலை ரயிலில் பயணம் செய்ய, சுற்றுலா பயணிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் 109-வது மலை ரயில் தினம் இன்று (15/10/2017) கொண்டாடபட்டது. |
| வரலாற்று ஆசிரியரான (அறிஞர்) சதீஷ் சந்த்ரா 95 வது காலமானார்.. |
| அனைத்து சாதியினரும் அர்ச்சகர்..! முதலில் கேரளா.. இப்போது கர்நாடகா அறிவித்துள்ளது. |
| ரோஜர் ஃபெடரர் - ரபா நாடலை 6-4 / 6-3 என்ற செட் கணக்கில் தோற்கடித்து ஷாங்காய் ரோலக்ஸ் (Shanghai Rolex Masters) மாஸ்டர்ஸ் சாம்பியன் பட்டம் வென்றார் ரோஜர் ஃபெடரர். இவர் இந்த கோப்பையை 2 வது முறையாக பெருகிறார்... |
| உலக அரசு மாநாடு :<br>பிப்ரவரி 2018ல் துபாயில் நடைபெறவுள்ள உலக அரசு மாநாட்டின் சிறப்பு விருந்தினர் நாடாக இந்தியா கலந்து கொள்கிறது. |
| OCTOBER 15<br>Global Handwashing Day<br>2017 THEME : “Our Hands , Our Future !” |
| 15 அக்டோபர்: கிராமப்புற பெண்கள் சர்வதேச தினம்.<br>இது முதன்முதலாக 15 அக்டோபர் 2008 முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது.<br>Theme - Challenges and opportunities in climate-resilient agriculture for gender equality and the empowerment of rural women and girls. |
| இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாடு விருது :<br>கடந்த ஆண்டுக்கான (2015-2016)இந்திராகாந்தி தேசிய ஒருமைப்பாடு விருதுக்கு தமிழகத்தை சேர்ந்த பிரபல கர்நாடக பாடகர் டி.எம் கிருஷ்ணா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.<br>இவர் ஆசியாவின் நோபல் பரிசு என அழைக்கப்படும் ராமன் மகசேசே விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. |
| திருவனந்தபுரம்: கேரளாவில் வேலை செய்யும், வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளை, 'பால சபா'க்களில் சேர்க்க, மாநில அரசு முடிவு செய்துள்ளது. |

| |
|---|
| கேரளாவில், முதல்வர் பினராயி விஜயன் தலைமையில், இடது ஜனநாயக முன்னணி ஆட்சி நடக்கிறது. மாநில அரசு சார்பில், 'குடும்பஸ்ரீ' என்ற பெயரில், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் நடத்தப்படுகின்றன.கேரளாவில், வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர், சாலை மற்றும் கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் குழந்தைகள் நலனுக்காக, 'குடும்பஸ்ரீ' அமைப்பு சார்பில், 'பால சபா'க்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.<br>வெளி மாநிலங்களைச் சேர்ந்த, தொழிலாளர்களுடைய குழந்தைகளின் கல்வி மற்றும் மற்ற திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கில், 'பால சபா' உருவாக்கப்பட்டு உள்ளது. |
| தமிழக வங்கியாளர்கள் கூட்டமைப்பு சார்பில் முத்ரா கடன் திட்ட ஊக்குவிப்பு முகாம் மற்றும் கடன் வழங்கும் விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று 14/10/2017 ல் நடந்தது. தமிழக அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமை தாங்கினார். மத்திய ராணுவ மந்திரி நிர்மலா சீதாராமன் குத்துவிளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார்.<br>முத்ரா திட்டம் தொடங்கப்பட்டு, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் கடன் பெற்றவர்களில் 75 சதவீதம் பேர் பெண்கள். |
| உலகின் மிகப்பெரிய B2B ன் 44 வது கைவினைப்பொருட்கள் மற்றும் பரிசு(gift) கண்காட்சி Smriti Irani நொய்டாவில் தொடங்கிவைத்தார்<br>4 நாள் நீண்ட கண்காட்சி ஆகும். உலகச் சந்தையில் இந்திய கைவினைத் தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்காக மற்றும் கூட்டு நிறுவனங்களை உருவாக்குவதற்கான முன்முயற்சியாகும்... |
| இந்திய கடற்படைக்கு சொந்தமான மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் INSKiltan oct-16/2017 ம் தேதி விசாகப்பட்டினத்தில் இணைக்கப்பட்டது. |
| அபுதாபியில் துவங்கிய உலக திறன்கள் சாம்பியன்ஷிப் விழாவில் இந்திய தொழில் திறமைகள் அணி கலந்துகொண்டது. |
| ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால் கத்தார் நாடோடி பழங்குடியினருக்கு குடும்ப அட்டகளை அளித்துள்ளார். |
| உள்நாட்டுப் போர் நடைபெற்று வரும் தெற்கு சூடானில், மக்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஐ.நா. அமைதிப்படையில் இந்திய வீரர்களும் பணியாற்றுகின்றனர். அவர்கள் நாட்டில் அமைதியை நிலைநாட்ட மிகவும் பாடுபட்டுவருகின்றனர். அவர்களை பாராட்டும் வகையில் ஐ.நா. விருதுகள் வழங்கியுள்ளது.<br>யு.என்.எம்.ஐ.எஸ்.எஸ். படையின் தளபதி பிராங் முஷ்யோ காமன்சி தெற்கு சூடானின் ஜோங்கிலே பகுதியில் சிறப்பாக பாதுகாப்பு கொடுத்த இந்திய படையைச் சேர்ந்த 50 வீரர்களுக்கு விருதுகள் வழங்கினார். அவர்கள் அப்பகுதியில் உள்ள 2,500 மக்களை பாதுகாக்க முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர். வீரத்துடனும், தைரியத்துடனும் பணியாற்றிய இந்திய படைக்கு தனது நன்றிகளை தெரிவித்தார் .<br>தெற்கு சூடானிற்கான இந்திய தூதர் ஸ்ரீகுமார் மேனன் விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர் 'இந்திய வீரர்களுக்கு நன்றியை தெரிவித்தார். மேலும் இந்திய படைகள் ஐ.நா.வுடன் இணைந்து உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறது' என அவர் கூறினார். |
| சத்தீஸ்கர் மாநில Raigarh மாவட்ட அரசு மருத்துவமனையில் பிறக்கும் பெண் குழந்தைகளை வரவேற்கும் விதமாக "Save and educate girl child"என்னும் வாழ்த்து அட்டை வழங்கப்படுகிறது. |
| மலையாள இலக்கியத்தின் பங்களிப்பை அங்கீகரித்து 2016 ஆம்<br>ஆண்டிற்கான #மத்ருபூமி_இலக்கிய விருதுக்கு #எம்கே_சானு தேர்வு செய்யப்பட்டார். |
| வாஷிங்டன் D.C. யில் நடைபெற்ற G-20 நிதி மந்திரிகள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் G-20 (Finance Ministers and Central Bank Governors(FMCBG)) கூட்டத்தில் அருண் ஜெட்லி பங்கேற்றார். |
| சர்வதேச புபேட் திருவிழா “International Puppet festival” வரும் அக்டோபர் 26ம் தேதி கல்கத்தாவில் நடைபெறவுள்ளது. |
| உத்தரப்பிரதேசம் மாநிலம் வாரணாசி அருகில் உள்ள முகல்சராய் ரெயில் நிலையத்தின் பெயர் பண்டிட் தீனதயாள் உபாத்யாய் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது |
| நாட்டிலேயே முதல்முறையாக பள்ளி மாணவர்களுக்கான விபத்துக் காப்பீடு தமிழகத்தில் விரைவில் கொண்டுவரப்படும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.<br>தமிழகத்தில் 3,000 பள்ளிகளில் தலா 2 லட்ச ரூபாய் செலவில் ஸ்மார்ட் கிளாஸ் ரூம் எனப்படும் மாதிரி வகுப்பறைகளை டிசம்பர் 2017 இறுதிக்குள் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.<br>-முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தைப்போல பள்ளிக் கல்வித்துறையிலும் மாணவர்களுக்கு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த திட்டம் முதலமைச்சரின் பரிசீலனையில் இருக்கிறது. நாட்டிலேயே முதல்முறையாக எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்கு விபத்துக் காப்பீடு திட்டம் விரைவில் கொண்டுவரப்பட இருக்கிறது’ என்று தெரிவித்தார். |

இங்கிலாந்து, ஜெர்மனி உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளில் வருகிற 2020-ம் ஆண்டில் இருந்து பெட்ரோல், மற்றும் டீசல் கார்கள் தயாரிக்கவும், பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
-இங்கிலாந்து தலைநகர் லண்டனில் வருகிற 2020-ம் ஆண்டில் இருந்து கியாஸ் மூலம் இயங்கும் கார்களை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
-அதற்காக ஒத்துழைப்பு அளிக்கும் வகையில்
லண்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் வருகிற 2020-ம் ஆண்டு முதல் பெட்ரோல் மற்றும் டீசல் கார்களை பயன்படுத்த தடை விதித்துள்ளது.
இதற்கிடையே பிரான்ஸ் தலைநகர் பாரீசில் காற்று மாசுபடுவதை தடுக்க 2030-ம் ஆண்டு முதல் கியாஸ் மூலம் இயங்கும் கார்களை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்பை பாரீஸ் மேயர் ஆன்னி ஸ்ரீஹிடால்கோ நேற்று வெளியிட்டார். அதற்கு வசதியாக வருகிற 2024-ம் ஆண்டு முதல் அனைத்து டீசல் கார்களுக்கும் தடை விதிக்கப்படும் என்றார்.

மருத்துவ ரீதியில் கருக்கலைப்பு செய்யும் சட்டத்தில் திருத்தம் செய்ய முடியாது என உச்ச நீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.
மருத்துவரீதியான கருக்கலைப்பு சட்டம் 1971-ன் படி, தாயின் வயிற்றில் 20 வாரம் வரை வளர்ந்த கருவை மட்டுமே கலைக்க அனுமதி உண்டு. பாலியல் வன்கொடுமைக்கு ஆளான மும்பை இளம் பெண்ணின் வயிற்றில் வளரும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட 24 வார கருவைக் கலைக்க, உச்ச நீதிமன்றம் சமீபத்தில் அனுமதி அளித்துள்ளது. இந்நிலையில் கருக்கலைப்பு சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்று கர்நாடகாவைச் சேர்ந்த அனுஷா ரவீந்திரா என்பவர் என்று பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.
இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், மருத்துவ ரீதியில் கருக்கலைப்பு செய்யும் சட்டத்தில் திருத்தம் செய்ய முடியாது என திட்டவட்டமாகக் கூறியுள்ளது. எனினும் தவிர்க்க முடியாத சில பிரச்னைகளில் மட்டும் 20 வாரத்திற்கு மேற்பட்ட கருக்களை கலைப்பதற்கு விதிமுறைகளை மத்திய அரசு வகுக்க வேண்டும் என நீதிபதிகள் கேட்டுக்கொண்டனர்.

#Access India Programme (AIP) – இந்தியாவை அணுகுவோம் திட்டம்:
பிரிட்டனின் சிறு மற்றும் குறு முதலீட்டாளர்களை இந்தியாவில் முதலீடு செய்வதை ஊக்குவிக்க, இந்தியா சார்பில் பிரிட்டனில் Access India Programme (AIP) – இந்தியாவை அணுகுவோம் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ITI அமைக்க அஸ்ஸாம் மாநிலத்தின் திப்ருகாரில் அமைக்க, அம்மாநில முதல்வர் அடிக்கல் நாட்டியுள்ளார்.

இந்தியா-இலங்கை 5 வது கூட்டு ராணுவ பயிற்சி மித்ரசக்தி (MitraShakti2017) பூனேவில் நடத்தப்பட்டது.

OCTOBER 14
உலகத் தர நிலைய தினம்(World Standards Day)
THEME 2017 : “Standards Make Cities. Smarter”

கிராமப்புறங்களில் பணிபுரிய மறுத்த 4,548 டாக்டர்களின் பதிவு ரத்து செய்துள்ளது மகாராஷ்ட்ரா அரசு.

10-வது ஆசிய கோப்பை ஆண்கள் ஆக்கி போட்டி வங்காளதேச தலைநகர் டாக்காவில் 12/10/2017 ல் தொடங்கியது

தமிழ்நாட்டில் உலகின் மிகப்பெரிய எரிமலை ஆராய்ச்சி மையம் IIT மெட்ராசில் தொடங்கப்பட்டுள்ளது..

கோட்டா சிவராம் கரந்த் தீம் பார்க் (Kota Shivaram Karanth Theme Park) விருதினை நடிகர் பிரகாஷ்ராஜ் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் லக்னோவில் 'சங்கல்ப் சேவா' சேவை மூலம் 50 புதிய பேருந்துகளை துவக்கிவைத்தார், இந்த பேருந்துகள் 6,000 கிராமங்களை இணைக்கும் என குறிபிடப்பட்டுள்ளது.தனது மக்களுக்கு சிறந்த பேருந்து சேவைகளை வழங்குவதற்கு மாநில அரசு அனைத்து வகையான முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் தியாகிகளின் தியாகங்களைக் கௌரவிப்பதற்காக மாநில அரசு 'கௌரவ் மார்க் பாத்'(Gaurav Marg Path ) அமைக்கும் என்றும் அறிவித்தார்.

தெலுங்கானா அரசு புதிய இரண்டு கொள்கைகளை வெளியிட்டுள்ளது.
1.மின் கழிவு மேலாண்மை கொள்கை.
2.இணைய பொருள்கள் மீதான கொள்கை.

| |
|---|
| (internet of things).<br>(இணைய தொழில்நுட்பத்துடன் கூடிய அனைத்திற்கும் உகந்த சுற்றுச்சூழலை உருவாக்க இந்த கொள்கை.) |
| புதுடில்லி : வளர்ந்து வரும் உலக நாடுகளில் உள்ள பட்டினி விகிதத்தின் அடிப்படையில் புதிய அட்டவணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. 119 நாடுகள் இடம்பெற்றுள்ள இந்த பட்டியலில் இந்தியா 100 வது இடத்தில் உள்ளது.<br>இந்த பட்டியலில் இந்தியாவை தொடர்ந்து வடகொரியா, வங்கதேசம், ஈராக் உள்ளிட்ட நாடுகள் இடம்பெற்றுள்ளன. கடந்த ஆண்டு இந்த பட்டியலில் இந்தியா 97 வது இடத்தில் இருந்தது.<br>சர்வதேச உணவு கொள்கை ஆய்வு கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்தியாவில் பசி, பட்டினி பிரச்னையால் அதிக அளவிலான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். பட்டினியில் அதிகம் வாடுவோர் உள்ள ஆசிய நாடுகளின் பட்டியலில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது. இந்த பட்டியலில் முதல் இடத்தில் ஆப்கானிஸ்தானும், 2வது இடத்தில் பாகிஸ்தானும் உள்ளன. |
| சூப்பர்சோனிக் ஜெட்டின் முதல் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது<br>நியூயார்க்கில் இருந்து லண்டனுக்கு மூன்று மணிநேரங்களில் பறக்கக்கூடிய சிறப்பு இந்த ஜெட்டுக்கு உள்ளது. இந்த ஜெட்டின் உட்பக்க சுவர்கள் ஜன்னல்களைக் கொண்டிருப்பதற்குப் பதிலாக மெல்லிய திரை கொண்டு மூடப்பட்டிருக்கும். |
| இலக்கியத்திற்கான நூற்றாண்டு தேசிய விருது எழுத்தாளர் நமிதா கோகலே(Namita Gokhale) அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.<br>-இந்த விருது அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள சாஹித்தா சபாவால் வழங்கப்பட்டு வருகின்றது , இது இந்தியாவில் மிகவும் மதிப்புமிக்க இலக்கிய விருதில் ஒன்றாகக் கருதப்படுகிறது.<br>#இவருடைய நூல்கள்...<br>1.“Paro: Dreams of Passion,” 1984. ல் வெளியிடப்பட்டது.<br>2.“A Himalayan Love Story,” “The Book of Shadows” and “Things to Leave Behind”... |
| வறட்சியில் இருந்து ஒரு நிரந்தர தீர்வை வழங்க பிரதான் மந்திரி கிருஷி சின்சாய் யோஜனா Pradhan Mantri Krishi Sinchai Yojana (PMKSY) தொடங்கப்பட்டுள்ளது. முழு நீர்ப்பாசன வழங்கல் சங்கிலி, நீர் ஆதாரங்கள், விநியோக வலைப்பின்னல் மற்றும் பண்ணை அளவிலான பயன்பாட்டு தீர்வுகளை அடைய ஐந்து ஆண்டுகளுக்கு ரூபாய் 50,000 கோடி முதலீடு ஒவ்வொரு பண்ணைக்கும் நீர் வழங்குவதற்கான இலக்கு ஆகும். |
| OCTOBER 16:<br>உலக உணவு தினம்<br>THEME 2017 : “Change the future of migration. Invest in food security and rural development.” |
| சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் "Roger Federer" இரண்டாவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்<br>- இறுதிச் சுற்றில் ரபேல் நடாலை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது |
| வேளாண்த் துறையில் பெண் விவசாயிகளின் பங்கை கொண்டாடும் வகையில் மத்திய அரசு "அக்டோபர் 15ம்" நாளை முதல் தேசிய பெண் விவசாயிகள் தினமாக (Rashtriya Mahila Kisan Diwas) கொண்டாடி உள்ளது |
| வடகிழக்கு மாநிலங்களுக்கான 2 நாள் "மாற்றும் வடகிழக்கு இந்தியா 2017" (Transforming North East India) மாநாடு டெல்லியில் நடைபெற்று முடிந்தது<br>Source: PIB |
| "Run for Clean Air Campaign"<br>================<br>நாடு முழுவதும் தூய காற்றின் அவசியம் பற்றி குழந்தைகள் மூலம் விழிப்புணர்வு செய்யும் "Run for Clean Air" இயக்கத்தை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தொடங்கியுள்ளது<br>Source: PIB |
| தமிழக அரசின் நிதி மேலாண்மை பணிகளை எளிமைப்படுத்தவும், 9 லட்சம் அரசு ஊழியர்கள், 7.39 லட்சம் ஓய்வூதியர்களுக்கான நிதி சேவைகளை டிஜிட்டல் மையமாக்கவும் "ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்" (Integrated Financial and Human Resource Management System) செயல்படுத்தப்பட உள்ளது<br>- இது 2018 ஜனவரி முதல் நடைமுறைக்கு வர உள்ளது<br>Source: Dinamani |
| ரோஜர் ஃபெடரர் - ரபா நாடலை 6-4 / 6-3 என்ற செட் கணக்கில் தோற்கடித்து ஷாங்காய் ரோலக்ஸ் (Shanghai Rolex Masters) மாஸ்டர்ஸ் சாம்பியன் பட்டம் வென்றார் ரோஜர் ஃபெடரர். இவர் இந்த கோப்பையை 2 வது முறையாக பெருகிறார்... |
| டோக்லாம் விவகாரத்தை தொடர்ந்து இந்திய-திபெத் எல்லைப் பாதுகாப்பு படையில்(ITBP) முதல் முறையாக கவச |

| |
|---|
| வாகனங்கள்(Mechanised wing) சேர்க்கப்பட்டுள்ளன<br>Source: Dinamani |
| டியான்ஜின் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி சீனாவில் நடந்தது.<br>-முன்னாள் 'நம்பர் ஒன்' வீராங்கனை மரிய ஷரபோவா (ரஷியா) 7-6, 7-6 (10-8) என்ற நேர் செட்டில் அரினா சபலென்காவை (பெலாரஸ்) வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இரண்டு செட்டிலும் தொடக்கத்தில் 1-4 என்ற புள்ளி கணக்கில் பின்தங்கினாலும் அதன் பிறகு சரிவை சமாளித்து மீண்ட ஷரபோவா இந்த வெற்றிக்காக 2 மணி 5 நிமிடங்கள் போராட வேண்டி இருந்தது.<br>-ஊக்கமருந்து பயன்படுத்தியதால் 15 மாதங்கள் தடையை அனுபவித்து கடந்த ஏப்ரல் மாதம் மறுபடியும் களம் திரும்பிய ஷரபோவா அதன் பிறகு ருசித்த முதல் பட்டம் இதுவாகும். மொத்தத்தில் அவருக்கு இது 36-வது சர்வதேச பட்டமாகும். 30 வயதான ஷரபோவா அடுத்து சொந்த மண்ணில் நடக்கும் கிரம்ளின் கோப்பை டென்னிசில் பங்கேற்க உள்ளார். |
| ஆவடியில் உள்ள "போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்திற்கு" (CVRDE) வருகை தந்த பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அர்ஜீன் மார்க்-1 ஏவுகணையின் சிறப்புகள் பற்றி அடங்கிய "Arjun MBT – an Indian Success Story" என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்<br>- மேலும் இந்திய பாதுகாப்பு படையில் ஆவடி போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் பங்கை விவரிக்கும் "Achievements Of CVRDE" என்ற புத்தகத்தையும் வெளியிட்டுள்ளார்<br>- மேலும் நாட்டில் உள்ள இளம் தலைமுறையினர் DRDO சந்திக்கும் சவால்களை சமாளிக்கும் வகையில் புதிய தகவல்கள் மற்றும் பரிந்துரைகள் வழங்க "DRDO ரோபோ & ஆளில்லா அமைப்பு விளக்கம்" (DRDO Robotics & Unmanned Systems Exposition) என்ற புதிய வலைத்தளத்தையும் வெளியிட்டுள்ளார்<br>- CVRDE- Combat Vehicles Research & Development Establishment<br>Source: PIB |
| பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த "Audrey Azoulay" UNESCO அமைப்பின் அடுத்த தலைமை இயக்குநராக(Director-General) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் |
| சட்டமன்ற தீர்மானங்களை ஆன்லைனில் கொண்டு வரும் நாட்டின் முதல் மாநிலமாக "இராஜஸ்தான்" உள்ளது<br>- கவன ஈர்ப்பு தீர்மானம்(Call attention Motion) மற்றும் ஒத்திவைப்பு தீர்மானம்(Adjournment Motion) போன்ற சட்டமன்ற தீர்மானங்களை ஆன்லைனில் நடைமுறைப்படுத்த அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது |
| Sebastian Kurz: Austrian conservative set to become world's youngest leader<br>- BBC News. |
| "M.Ramachandran" எழுதிய "The Mavericks of Mussoorie" என்ற புத்தகத்தை துணை குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு வெளியிட்டுள்ளார்<br>Source: PIB |
| SBI வங்கி தனது சிறு குறு தொழிலாளர்(MSME) வாடிக்கையாளர்களுக்கு கடனுதவி வழங்க "SME Assist" என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது<br>Source: The hindu |
| தமிழக விஞ்ஞானி விருது :<br>பாரதிதாசன் தொழில்நுட்ப பொறியியல் கல்லூரி மருந்தாக்கவியல் துறை பேராசிரியர் ருக்மணிக்கு மருத்துவத்துறை ஆராய்ச்சிக்காக 2014 ம் ஆண்டுக்கான தமிழக விஞ்ஞானி விருது வழங்கப்பட்டது.<br>இவர் தமிழகத்தில் மருந்தியல் துறையில் முதலில் முனைவர் பட்டம் பெற்ற பெண் என்ற பெருமைக்குரியவர். |
| கலா பிரதர்சினி கண்டசாலா புரஸ்கர் விருது :<br>> பின்னணி பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம்<br>>நடன கலைஞர் பத்மா சுப்பிரமணியம்<br>>தொழிலதிபர் நல்லி குப்புசாமி |
| 2017 ஆம் ஆண்டில் கனடாவில் சிறந்த கல்வி சாதனை புரிந்ததற்காக தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்ற பொறியியல் பட்டதாரி 'லஷ்மி வராஹ ஐயர்' க்கு அந்நாட்டு ஆளுநரின் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.<br>>இந்த விருதை பெறும் முதல் இந்தியர் என்பது குறிப்பிடத்தக்கது |
| 2018 - 2019 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7.5 சதவீதமாக உயரும் என்று நிதி ஆயோக் துணை தலைவர் ராஜீவ் குமார் கூறியுள்ளார். |
| இந்தியப் பொருளாதாரம் வலுவான பாதையில் பயணித்து வருவதாக சர்வதேச செலாவணி நிதியத்தின் (ஐ. எம். எஃப்) தலைவர் கிறிஸ்டின் லகார்ட் தெரிவித்துள்ளார். |

> ஐ. எம். எஃப் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில்
2017 ஆம் ஆண்டில் - 6.7%
2018 ஆம் ஆண்டில் - 7.4 %
>கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்ட அறிக்கையில்
2017 ஆம் ஆண்டில் - 7.1%
2018 ஆம் ஆண்டில் - 7.7 %

"The Coalition Years 1996-2012" (கூட்டணி ஆட்சி ஆண்டுகள் 1996-2012) என்ற புத்தகத்தை முன்னாள் குடியரசுத் தலைவர் "பிரணாப் முகர்ஜி" எழுதியுள்ளார்

ஜப்பான் நாட்டின் பசிபிக் கடற்பகுதியில் ஒகினாவா என்ற பகுதியில் சென்று கொண்டிருந்த எமரால்டு ஸ்டார் என்ற 33 ஆயிரம் டன் எடை கொண்ட சரக்கு கப்பல் ஒன்று கடந்த வெள்ளி கிழமை(13/10/2017)மூழ்கி விபத்திற்குள்ளானது. இந்த கப்பலில் இருந்த 16 இந்தியர்கள் மீட்கப்பட்டு உள்ளனர்.
இதனை தொடர்ந்து இந்திய மீட்பு குழு அவர்களை மீட்கும் பணியில் ஜப்பானுக்கு சென்றுள்ளது. அவர்களுடன் பிலிப்பைன்ஸ் மற்றும் சீனாவும் இணைந்து தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளன.
இந்நிலையில், இந்திய கப்பற்படையை சேர்ந்த பி-8ஐ என்ற ரோந்து விமானம் ஒன்று சரக்கு கப்பலில் காணாமல் போன இந்தியர்களை மீட்பதற்காக மணிலா நகருக்கு நேற்றிரவு (15/10/2017)11.45 மணியளவில் புறப்பட்டு சென்றுள்ளது.

அமராவதி: ஆந்திராவில் ரேஷன் கடைகள் வில்லேஜ் மால் என்ற பெயரில் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது என அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார். ரிலையன்ஸ் ரீட்டெயில் மற்றும் ஃப்யூச்சர் குரூப் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து ஆந்திர மாநில ரேஷன் கடைகளை வில்லேஜ் மால்களாக மாற்ற அம்மாநில அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. மால்களாக மாற்றம் செய்யப்படும் இந்த ரேஷன் கடைகளில் அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களுடன் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள், விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவையும் விற்பனை செய்யப்படவுள்ளன.
மேலும் முதல் கட்டமாக 6500 வில்லேஜ் மால்கள் அமைக்கப்படும் எனவும் இத்திட்டத்தின் மூலம் பொருட்களை விற்கும் வியாபாரிகளுக்கு முதலீட்டில் 25 சதவீதத்தை மாநில அரசும், அடுத்ததாக 25 சதவீதம் மத்திய அரசின் முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் கடனாக வழங்கப்பட உள்ளது எனவும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.
மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள், நேரடியாக விவசாயிகளிடமிருந்து விவசாய பொருட்கள் மற்றும் ஆந்திர மாநிலத்தின் கிரிஜன் கூட்டுறவு திட்டத்தின் கீழ் பழங்குடி மக்கள் தயாரிக்கும் பொருட்களையும் கொள்முதல் செய்யப்பட உள்ளன என்றும் அவர் கூறினார்.

கேரளா-வில் அதிரடி...
தலித் வார்த்தையும் ஹரிஜன் என்ற வார்த்தையும் அரசு சார்பில் அதிகாரப்பூர்வமாக பயன்படுத்த கேரள அரசு தடை செய்துள்ளது.

உலகிலேயே பெண்கள் மிகுந்த பாதுகாப்புடன் வாழ்வதற்கான மாநகரங்களின் பட்டியலில் லண்டன் முதலிடம் பிடித்துள்ளது.
பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், தீங்கு விளைவிக்கும் கலாச்சார நடைமுறைகள் இல்லாத நகரங்கள் குறித்து ராய்ட்டர்ஸ் நிறுவனம் அண்மையில் கருத்து கணிப்பு நடத்தியது. பெண்கள் சுயமாக வாழ்வதற்கேற்ற வகையில் சிறந்த சுகாதாரம், கல்வி, சம உரிமை ஆகியவை அவர்களுக்கு எளிதாக கிடைக்கிறதா என்ற ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. அதில் பெண்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கேற்ற நகரங்களில் லண்டன் முதலிடம் பிடித்துள்ளது.
அதற்கு அடுத்தடுத்த இடங்களில் ஜப்பானின் டோக்கியோ, பிரான்ஸின் பாரிஸ் நகரங்கள் இடம் பெற்றுள்ளன. மிக மோசமான நகரங்கள் பட்டியலில் எகிப்தின் கெய்ரோ, பாகிஸ்தானின் கராச்சி மற்றும் காங்கோ குடியரசின் கின்ஸ்ஹஸா இடம்பிடித்துள்ளன.

ரோந்து பணிக்காக 'பறக்கும் பைக்' வாங்கிய துபாய் போலீசார்! ரோந்து மற்றும் அவசர உதவிகளுக்காக ஹோவர் பைக்கை துபாய் போலீசார் வாங்கி இருக்கின்றனர்.
இந்த ஹோவர் பைக்கை ரஷ்யாவை சேர்ந்த ஹோவர்சர்ஃப் நிறுவனம் தயாரித்து வழங்கி இருக்கிறது. பார்ப்பதற்கு தேள் போன்று இருப்பதாலோ என்னவோ, இதனை ஸ்கார்ப்பியான் என்று குறிப்பிடுகின்றனர்.
மொத்தத்தில் உலகிலேயே முதல் ஸ்மார்ட் நகரமாக துபாயை மாற்றுவதற்கான முழு வீச்சிலான முயற்சிகளையும், பணிகளையும் துபாய் நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர்..! முதலில் கேரளா.. இப்போது கர்நாடகா அறிவித்துள்ளது.

| |
|---|
| 33வது உலக உணவு தினம் :<br>>ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16ஆம் தேதி உலக உணவு தினம் கொண்டாப்படுகிறது.<br>>இந்த ஆண்டு மக்களின் உடல் நலம், சிறந்த உணவு முறையைச் சார்ந்திருப்பது என்பது உலக உணவு நாளின் தலைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br>>உணவு தினத்தை முன்னிட்டு, ஐ.நா உணவு மற்றும் வேளாண் அமைப்பின் பொதுச் செயலாளர் `ஜோஸ் இராசியானோ தாசில்வா` நிகழ்த்திய உரையில், பட்டினியால் போராடி அல்லலுறும் மக்களை காக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். |
| பீஜிங்: சீனாவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான டியாங்காங்-1 விண்வெளி ஆய்வு நிலையம் அடுத்த சில மாதங்களில் நொறுங்கி பூமியின் மீது விழ வாய்ப்புள்ளதாக வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். டியாங்காங்-1 என்ற விண்வெளி ஆய்வு நிலையத்தை சீனா 2011-ம் ஆண்டு அக்டோபர் முதல் விண்வெளியில் பராமரித்து வந்தது. |
| ஆஸ்திரியா நாட்டில் நடந்த பொதுத்தேர்தலில் 31 வயதான செபாஸ்டியன் குர்ஸ் வெற்றி பெற்று, உலகின் இளம் பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.<br>ஆஸ்திரியா நாட்டின் பொதுத்தேர்தலில் செபாஸ்டியன் குர்ஸின் தலைமையிலான கன்சர்வேடிவ் மக்கள் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.<br>கன்சர்வேடிவ் கட்சியின் இளைஞர் அணித் தலைவராக தனது அரசியல் வாழ்க்கையை தொடர்ந்த குர்ஸ், கடந்த மே மாதம் கட்சியின் தலைவர் பொறுப்புக்கு வந்தார். அதற்கு முன் தமது 27வது வயதில், நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சராகவும் குர்ஸ் பதவி வகித்துள்ளார். ‘உண்டெர்உஸ்சி’ என மக்களால் செல்லமாக அழைக்கப்படும் குர்ஸ், கனடாவின் ஜஸ்டின் ட்ரூடோ, பிரான்ஸின் மேக்ரோன் ஆகியோருக்கு இணையான இளம் தலைவராக ஒப்பிடப்படுகிறார். |
| #பட்டாசு_நிகழ்வுகள்:<br>*இந்தியாவின் பட்டாசு தலைநகரம் #சிவகாசி<br>*சர்வதேச அளவில் பட்டாசு உற்பத்தியில் #இந்தியா_இரண்டாவது இடம்,முதல் இடம் சீனா.<br>*சிவகாசியில் பட்டச்சுக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைந்துள்ளது.<br>*பட்டாசு வெடிப்பதை முற்றிலும் தடை செய்த்துள்ள நாடு #அயர்லாந்து_ஹங்கேரி<br>*நாம் இப்பொது பயன்படுத்தும் நவீன பட்டாசுகளின் தந்தை #லீ_டியான்<br>*முதன் முதலில் பட்டாசு #சீனாவில் கி.பி.200 ல் கண்டுபிடிக்கப்பட்டது.<br>*அதிகமாக பட்டாசுகளை உபயோகித்து வரும் நிறுவனம் #வால்ட்_டிஸ்னி<br>*சீனாவில் இருந்து ஐரோப்பாவுக்கு பட்டாசுகளையும்,வெடிமருந்துகளையும் எடுத்து சென்றவர் #மார்கோபோலோ<br>*நவம்பர் 1ம் தேதிவரை #டெல்லியில் பட்டாசு வெடிக்க உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.<br>*பட்டாசு மீது அதீத ஆர்வம் கொண்ட இங்கிலாந்து ராணி முதலாம்<br>எலிசபெத் #பட்டாசு_மாஸ்டர்_ஆப்_இங்கிலாந்து என்னும் பட்டத்தை ஆண்டுதோறும் வழங்கி வந்தார்.<br>*பட்டாசு ஏற்றுமதி செய்வதில் #சீனா முதலிடம் வகிக்கிறது<br>*பட்டாசு இறக்குமதி செய்வதில் #அமெரிக்க முதலிடம் வகிக்கிறது |
| தமிழக அனுபவம் குறித்து முன்னாள் ஆளுநர் வித்யாசாகர் ராவ் எழுதியுள்ள புத்தகம்<br>"அந்த நிகழ்வுகள் நடந்த நாட்கள்" என்ற பெயரில் வித்யாசாகர் புத்தகம் வெளியீடு. |
| "19th World Festival of Youth and Students"<br>=================<br>19வது உலக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் திருவிழா ரஷ்யா நாட்டின் "Sochi" நகரில் தொடங்கியுள்ளது<br>Source: PIB |
| "First Ever International Tri Service Exercise - INDRA 2017"<br>===============<br>இந்தியா ரஷ்யா முப்படைகளும் இணைந்து நடத்தும் முதல் சர்வதேச போர்பயிற்சி "INDRA 2017" அக்டோபர் 19 முதல் 29ம் தேதி வரை ரஷ்யாவில் நடைபெற உள்ளது<br>- இராணுவம், கப்பற்படை மற்றும் விமானப்படை என முப்படை வீரர்களும் இந்திய ரஷ்யா போர்பயிற்சிகளில் கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும்<br>Source: PIB |
| தமிழக ஆளுநர் மாளிகையான ராஜ் பவனில் 400 கிலோவாட் பீக்(KWp) திறன் கொண்ட சோலார் மின் உற்பத்தி நிலையத்தை துணை குடியரசுத் துணை தலைவர் வெங்கய்யா நாயுடு தொடங்கி வைத்துள்ளார்<br>Source: PIB |

| |
|---|
| சென்னையில் நடைபெறும் 'இந்தியா சர்வதேச அறிவியல் திருவிழாவின்' (IISF 2017) ஒரு பகுதியாக உயிர் தொழில்நுட்பங்களுக்கான புதிய கண்டுபிடிப்பு மைய(Biotech Innovation Center) தொடக்க விழாவின் போது "Genesis of Biotech Park" என்ற புத்தகத்தை மத்திய அமைச்சர் ஹர்ஷவர்தன் வெளியிட்டுள்ளார்<br>Source: PIB |
| ஆண்கள் சர்வதேச கால்பந்து போட்டிகளுக்கான முதல் பெண் நடுவர் என்ற பெருமையை சுவிட்சர்லாந்தை நாட்டைச் சேர்ந்த "Esther Staubli" பெற்றுள்ளார்<br>- இந்தியாவில் நடைபெற்று கொண்டிருக்கும் FIFA U17 உலக கோப்பை கால்பந்து போட்டிகளில் இவர் நடுவராக பங்கேற்றுள்ளார்<br>Source: The Hindu |
| "Project CHAMAN"<br>=================<br>தோட்டக்கலை தொழில் துறையை(horticulture sector) மேம்படுத்துவது தொடர்பான உத்திகள் மற்றும் தோட்டக்கலை ஊழியர்களின் வருமானத்தை உயர்துவது தொடர்பாக 2014ம் ஆண்டு தொடங்கப்பட்ட "Project CHAMAN" திட்டம் 2018ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடியும் என மத்திய வேளாண்த்துறை அமைச்சர் ராஜா மோகன் சிங் தெரிவித்துள்ளார்<br>- தொடங்கப்பட்ட ஆண்டு- 2014<br>- நடைமுறைபடுத்தும் நிறுவனம்- மஹலநோபிஸ் தேசிய பயிர் முன்னறிவிப்பு மையம்(MNCFC)<br>- பயன்படுத்தும் தொழில்நுட்பம்- தொலை உணர்வு தொழில்நுட்பம்(Remote Sensing Technology)<br>- திட்டம் முடிவு- மார்ச் 2018<br>- CHAMAN- 'Coordinated Horticulture Assessment & Management'<br>Source: PIB |
| முன்னாள் ராணுவ வீரர்களுக்கான சுகாதார பங்களிப்பு திட்டம்(ECHS) "Project SPARSH" என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது<br>- இத்திட்டதின் கீழ் முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் தற்போது உள்ள படை வீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கு சேவை செய்ய தன்னார்வளார்களை(Volunteers) தேர்ந்தெடுக்கவே இத்திட்டம் தொடங்கப்பட உள்ளது<br>- நோக்கம்: ECHS பல்துறை மருத்துவமனையில் உள்ள படை வீரர்களுக்கு அறவணைப்பை நீட்டிக்கவே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்<br>- ECHS- Ex-Servicemen Contributory Health Scheme<br>Source: PIB |
| எகிப்தில் நடைபெறும் படைப்பிரிவு பயிற்சி மாணவர்கள் மற்றும் ஜீனியர் ஓபன் டேபிள் டென்னிஸ் போட்டிகளில்(Junior and Cadet Open Table Tennis Championship) இந்தியாவின் "Selena Selvakumar" 3 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்<br>- Selena selvakumar சென்னையைச் சேர்ந்த வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது<br>Source: AIR |
| Ophelia புயல்(Hurricane Ophelia) "அயர்லாந்து மற்றும் மேற்கு UK" பகுதிகளை தாக்க உள்ளது |
| 162 ஆண்டுகள் பழமையான நீராவி ரயில் என்ஜின்: சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் வடிவமைப்பு<br>புதுடெல்லி: உலகின் பழமையான நீராவி ரயில் என்ஜினான ஃபேரி குயின் மீண்டும் பயணத்துக்கு தயாராகியுள்ளது. 162 ஆண்டுகள் பழமையான இந்த ஃபேரி குயின் என்ஜின் மாதத்திற்கு ஒரு முறை டெல்லியில் இருந்து ரேவரி வழியாக ஆல்வார் வரை இயக்கப்படுகிறது. இந்த இயக்கமானது வரும் 2018 ஏப்ரல் மாதம் வரை தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரயிலில் 60 பயணிகள் பயணிக்கலாம். இதற்கான டிக்கெட் ஐஆர்சிடிசி மூலம் புக் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது |
| #Asia Cup hockey #Rani Rampal #மகளிர் ஆசியகோப்பை ஹாக்கி : #இந்திய அணிக்கு ராணி ராம்பால் கேப்டன்<br>புதுடெல்லி: மகளிர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டித் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ராணி ராம்பால் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். ஜப்பானின் காகாமிகஹரா நகரில் வரும் 28ம் தேதி தொடங்கி நவம்பர் 5ம் தேதி வரை நடைபெற உள்ள..... |
| Project 28 என்ற திட்டத்தின் கீழ்,முழுக்க முழுக்க உள்நாட்டிலியே வடிவமைக்கப்பட்ட நீர்மூழ்கி கப்பலை தாக்கும் திறன் கொண்ட போர் கப்பலான(Anti-Submarine Warship) "INS Kiltan" மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமனால் விசாகப்பட்டினத்தில் இருந்து இந்திய கப்பற்படையில் இணைக்கப்பட்டுள்ளது<br>- உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய போர் கப்பல் இதுவாகும் |

| |
|---|
| - மற்ற போர் கப்பல்களை காட்டிலும் குறைந்த எடைக் கொண்டது<br>Source: PIB |
| நாட்டிலியே முதல் முறையாக ரேபிஸ் நோய் தடுப்பு மருந்துகளை சுயமாகத் தயாரிக்க "கேரள அரசு" திட்டமிட்டுள்ளது<br>- இதற்காக ரூ.150 கோடி செலவில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன<br>Source: Dinamani |
| சர்வதேச கால்பந்து(FIFA) தரவரிசையில் இந்திய அணி இரு இடங்கள் முன்னேறி 105வது இடத்தில் உள்ளது<br>- கடந்த வாரம் நடைபெற்ற ஆசிய கோப்பை தகுதிச் சுற்றில் சிறப்பாக ஆடியதன் மூலம் இந்திய அணி தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளது<br>Source: Dinamani |
| சீனாவின் டியான்ஜின் நகரில் நடைபெற்ற "டியான்ஜின் ஒபன் டென்னிஸ்" (Tianjin Open Tennis) போட்டிகளின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ரஷியாவின் "மரியா ஷரபோவா" சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்<br>Source: Dinamani |
| இந்திய பொருளாதாரம் வலுவான பாதையில் பயணித்து வருவதாக IMF தலைவர் 'கிறிஸ்டியன் லகார்ட்' தெரிவித்ததை தொடர்ந்து பங்குச் சந்தைகளில் சென்செக்ஸ்(SENSEX), நிஃப்டி(NIFTY) நேற்று (16-10-2017) புதிய உச்சத்தை தொட்டு சாதனை படைத்துள்ளது<br>- மும்பை பங்குச் சந்தையில்(BSE) நடைபெற்ற வர்த்தகத்தில் SENSEX 200 புள்ளிகள் ஏற்றம் கண்டு முன்னெப்போதும் கண்டிராத வகையில் 32,633 புள்ளிகளைத் தொட்டது<br>- தேசிய பங்குச் சந்தையில் நேற்று நடைபெற்ற வர்த்தகத்தில் NIFTY 63 புள்ளிகள் உயர்ந்து புதிய வரலாற்று உச்சமாக 10,230 புள்ளிகளை எட்டியுள்ளது<br>Source: Dinamani |
| தமிழகத்தின் பொறுப்பு ஆளுநராக இருந்த "வித்யாசகர் ராவ்" தான் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களை "Those Eventful Days" என்ற தலைப்பில் எழுதியுள்ள நூலை துணை குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு நேற்று வெளியிட்டுள்ளார்<br>Source: Dinamani |
| ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கைக்குப் (Demonetisation) பிறகு வங்கிகளில் செலுத்தப்பட்ட பழைய ரூ.500, ரூ.1000 நோட்டுகளை சரி செய்து சரிபார்க்கும் பணியில் 66 அதிநவின இயந்திரங்கள்(CVPS) பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று RBI தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் (RTI) தெரிவித்துள்ளது<br>- CVPS- Currency Verification and Processing<br>Source: Dinamani |
| "Bureau of Indian standards (BIS) Act 2016"<br>==================<br>திருத்தப்பட்டு பல அம்சங்கள் சேர்க்கப்பட்ட, மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய தர ஆணையச் சட்டம் 2016 (BIS ACT 2016) அக்டோபர் 12ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.<br>- 1986ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட BIS சட்டம் மாற்றப்பட்டு அதற்கு பதிலாக புதிய இந்திய தர அமைப்புச் சட்டம் கடந்த 2016ம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.<br>- இந்த சட்டத்தில் உள்ள விதிமுறைகள் அனைத்தையும் இறுதி செய்து, அக்டோபர் 12 அன்று நடைமுறைக்கு வந்துள்ளதாக மத்திய நுகர்வோர் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.<br>- இந்த புதிய இந்திய தரச்சட்டம் நாட்டில் இன்னும் எளிதாக தொழில் செய்யவும், Make in India திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது<br>- இந்த புதிய சட்டத்தின்படி, எந்தவிதமான பொருட்கள், சேவைகளை நுகர்வோருக்கு அளித்தாலும், அதில் கண்டிப்பாக இந்திய தரச் சான்றிதழ் அவசியம் இடம் பெற வேண்டும்.<br>Source: Business Standard |
| "APPICON 2017- National Conference of Association of Physiologists and Pharmacologists of India"<br>========================<br>இந்திய உளவியல் நிபுணர்கள் மற்றும் மருந்தியல் நிபுணர்கள் கூட்டமைப்பின் 63வது தேசிய மாநாடு "APPICON 2017" பாண்டிச்சேரி JIPMER மருத்துவமனையில் நடந்து முடிந்துள்ளது<br>Source: The Hindu |
| 10 ம் வகுப்புவரை கட்டாயம் கன்னடம் கற்பிக்க/கற்க வேண்டும் கர்நாடக முதல்வர் சீதாராமையா உத்தரவு.. |
| தெற்கு சூடானில் பணியில் ஈடுபட்டுள்ள ஐநா அமைதிப் படையினருள்(UNIMISS), 50 இந்திய அமைதிப் படை வீரர்களுக்கு சிறந்த சேவைக்கான ஐநா விருது வழங்கப்பட்டுள்ளது |

| |
|---|
| Source: AIR |
| OCTOBER 17- International Day for the Eradication of Poverty (சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்)<br>- THEME 2017 : "Answering the Call of October 17 to end poverty: A path toward peaceful and inclusive societies" |
| திவால் சட்ட வாரியத்தின்(IBBI) வங்கி திவால் வழக்குகளுக்கான முதல் தகவல் பயன்பாட்டு நிறுவனமாக, தேசிய மின் ஆளுமை சேவைகள் லிமிடெட் நிறுவனம்(NeSL) வந்துள்ளது<br>- NeSL- National e-Governance Services Ltd<br>Source: The Hindu |
| "Kalam Sandesh Vahini: Vision 2020"<br>============================<br>டாக்டர் அப்துல் கலாமின் 86வது பிறந்த நாளையொட்டி அவரது வாழ்க்கை வரலாறு மற்றும் அவரின் கருத்துகள் அடங்கிய நடமாடும் "Kalam Sandesh Vahini: Vision 2020" கண்காட்சி வாகனம் டெல்லியை வந்து அடைந்துள்ளது<br>- இந்த வாகனம் ஜீலை 2017ல் பிரதமர் மோடியால் ராமேஸ்வரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது<br>- நாடு முழுவதும் தனது பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது டெல்லியை வந்து அடைந்துள்ளது |
| கூர்காலாந்து (Gorkhaland) தனி மாநில கோரிக்கை போராட்டங்களுக்கு பின் 3 மாதங்கள் கழித்து டார்ஜிலிங் எஸ்டேட்களில் பணிகள் தொடங்கியுள்ளன<br>- 3 மாத பணி பாதிப்பை தொடர்ந்து டார்ஜிலிங் எஸ்டேட்டுகளுக்கு ரூ 100 கோடி நிதியுதவி வழங்க மத்திய டீ வாரியம்(The Tea Board) முடிவு செய்துள்ளது<br>Source: The Hindu |
| ஐ.என்.எஸ் கில்தான் நீர்மூழ்கி போர்க்கப்பல் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது(விசாகப்பட்டினம்):<br>->போர் ஆயுதங்களை சுமந்து செல்லும் ஷிவாலிக் கிளாஸ், கோல்கட்டா கிளாஸ், ஐஎன்எஸ் கமோர்தா, ஐஎன்எஸ் கட்மாட் ஆகியவற்றை தொடர்ந்து ஐஎன்எஸ் கில்தான் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது.<br>->இது அதிக எடை கொண்ட ஆயுதங்கள், ஏஎஸ்டபிள்யூ ராக்கெட், 76 மி.மீட்டர் காலிபர் நடுத்தர திறன் கொண்ட துப்பாக்கிகள், சி.ஐ.டபிள்யூ.எஸ் திறன் கொண்ட தாக்குதல் கட்டுப்பாட்டு அமைப்புக்கள், ஏவுகணையை தடுக்கும் ராக்கெட்கள், அதிநவீன இஎஸ்எம் உள்ளிட்ட திறன்களை கொண்டது.<br>->சூப்பர் ஸ்டிரக்சரால் ஆன கார்பன் பைபர் கூட்டுப் பொருட்களைக் கொண்ட நாட்டின் முதல் போர்ப்பல் இது என்பது குறிப்பிடத்தக்கது.<br>->குறைந்த எடை கொண்டதும், குறைந்த பராமரிப்பு செலவு கொண்டதும் இந்த போர்க்கப்பலின் தனிச்சிறப்பாகும்.<br>-> இந்த கப்பல் முற்றிலும் இந்திய கடற்படை இயக்குனரகம் மற்றும் ஆராய்ச்சி இன்ஜினியர்களால் வடிவமைக்கப்பட்டதாகும்.<br>->விரைவில் இந்த போர்க்கப்பலில் எஸ்ஏஎம் சிஸ்டம் மற்றும் ஏஎஸ்டபிள்யூ ஹெகாப்டர்களை தாங்கிச் செல்லும் திறன்கள் சேர்க்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| கானூன் புயல் தாக்கிய நாடு வியட்நாம் |
| நடிகர் வருண் தவான்: ஹாங்காங்கில் உள்ள மேடம் துஷாட்ஸில் மெழுகு சிலை பெற உள்ளார்.<br>> லண்டன், சிங்கப்பூர், ஹாங்காங், பாங்காக் ஆகிய நகரங்களில் இந்த அருங்காட்சியகங்கள் உள்ளன.<br>>மேடம் துஷாட்ஸ் மெழுகு அருங்காட்சியகம் 1835 இல் மேரி துஷாத் என்ற ஒரு மெழுகு சிற்பியால் நிறுவப்பட்டது. |
| "Global Power City Index.2017"<br>=================<br>உலகில் சக்தி வாய்ந்த நகரங்கள் பட்டியலில் இந்தியாவின் மும்பை நகரம் 44வது இடம் பிடித்துள்ளது<br>- இப்பட்டியலில் "லண்டன்" நகரம் முதலிடத்தை பிடித்துள்ளது<br>- இப்பட்டியலை "The Mori Memorial Foundation’s Institute" நிறுவனம் வெளியிட்டுள்ளது |
| பி - 8 விமானம் :<br>துபாய் நாட்டின் ஸ்டெல்லார் ஓசன் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்துக்கு சொந்தமான ‘எமரால்டு ஸ்டார்’ என்ற சரக்கு கப்பல், கடந்த வெள்ளிக்கிழமை பிலிப்பைன்ஸ் நாட்டின் பசிபிக் கடல் பகுதியில் மூழ்கியது.<br>இதில் பயணித்த 10 இந்தியர்களை தேடும் பணிக்காக பி - 8 விமானம் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. |
| இங்கிலாந்து தலைநகர் லண்டனை சேர்ந்தவர் அக்ஷய் ரூபரேலியா. 19 வயதான இவர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். பள்ளியில் படித்து வருகிறார்.இவரது தாய் மற்றும் தந்தையும் காது கேளாதவர்கள். அவர்கள் தங்களது மகன் குறித்து பெருமைப்படுகின்றனர். |

| |
|---|
| பொருளாதாரம் மற்றும் கணக்கு பாடம் பயில ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் இவருக்கு இடம் வழங்க முடிவு செய்துள்ளது. ஆனால் அதில் சேர்ந்து படிப்பது குறித்து அவர் முடிவு செய்யவில்லை. தனது வியாபாரத்தை மேலும் வளர்க்க விரும்புகிறார்.<br>தற்போது இவர் இங்கிலாந்தில் உள்ள இளம் வயது கோடீசுவரர்களில் ஒருவர் ஆகியுள்ளார். இவர் பள்ளியில் படித்துக் கொண்டே 'ஆன்லைன்' மூலம் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்கிறார். அவர் ஒரு வருடத்தில் ரூ.1000 கோடிக்கு வியாபாரம் செய்துள்ளார். அதன் மூலம் ரூ.120 கோடி லாபம் ஈட்டியுள்ளார்.<br>தற்போது இவரது ரியல் எஸ்டேட் நிறுவனம் இங்கிலாந்தில் உள்ள பெரிய கம்பெனிகளில் 18-வது இடம் வகிக்கிறது. இவர் கடந்த 16 மாதங்களுக்கு முன்பு தான் தனது வியாபாரத்தை தொடங்கினார். அப்போது தனது உறவினர்களிடம் ரூ.7 லட்சம் கடனாக பெற்று ஆரம்பித்தார். இவரிடம் தற்போது 12 பேர் வேலை செய்கின்றனர். |
| நியூயார்க்: ஐ.நா. சபையின் மனித உரிமைகள் கவுன்சிலின் உறுப்பினராக பாகிஸ்தான் உள்ளிட்ட 15 நாடுகள் தேர்வாகியுள்ளது. நியூயார்க்கில் உள்ள ஐநா பொதுச்சபையில் இதற்கான தேர்தல் நடைபெற்றது. வருகிற ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையிலான உறுப்பினர் பதவிக்கான தேர்தல் ஆகும்.<br>திங்களன்று நடைபெற்ற இந்த தேர்தலில், மனித உரிமைகள் கவுன்சிலில் பாகிஸ்தானும் தேர்வாகியுள்ளது. மேலும், ஆப்கானிஸ்தான், அங்கோலா, ஆஸ்திரேலியா, சிலி, காங்கோ, மெக்சிகோ, நேபாளம், நைஜீரியா, பெரு, கத்தார், செனகல், ஸ்லோவேகியா, ஸ்பெயின் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளும் இந்த கவுன்சிலில் இடம்பெறுள்ளது. |
| சர்வதேச விமான மற்றும் பாதுகாப்புத் தளவாடக் கண்காட்சி நடைபெறும் இடம் தென்கொரிய தலைநகர் சியோல். |
| அழகிய நீர்ப்பரப்புகள் சூழ்ந்த சுற்றுலா மையமாக மத்திய பிரதேசம் விரைவில் உருவெடுக்கும் என்று மாநில முதல்வர் சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார். |
| பெங்களூரு: நாட்டிலேயே முதன் முறையாக கர்நாடகாவில் வாகனங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய ஒரே மாதிரியான புதிய நம்பர் பிளேட்டுகள் அறிமுகமாக உள்ளது.<br>கர்நாடகாவில் இரு சக்கர வாகனத் திருட்டு மற்றும் திருடப்பட்ட வாகனங்களை சட்ட விரோத காரியங்களுக்கு பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருகிறது. கர்நாடகாவில் ஆட்சி செய்து வரும் காங்கிரஸ் ஆட்சியில் போக்குவரத்து துறை அமைச்சராக ரேவண்ணா சமீபத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து வாகன நம்பர் பிளேட்டுகளில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு, புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.<br>நம்பர் பிளேட்டுகளில் உள்ள எண்கள் வழக்கத்தினை விட பெரிய அளவில் இருக்கும்.இரவில் பயணம் செய்வோருக்கு உதவும் வகையில் பிளேட்டுகளில் பயன்படுத்தப்படும் வண்ணங்களில் ரேடியம் பூசப்பட்டிருக்கும்.தனியார் வாகனங்கள், வாடகை வாகனங்கள் மற்றும் பேருந்துகளுக்கு என தனித்தனி எழுத்துருக்கள் பயன்படுத்தப்படும்.<br>பிளேட்டுகளில் பயன்படுத்தப்படும் எழுத்துக்கள் 45 டிகிரி சாய்வான கோணத்திலும் பார்க்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டிருக்கும்.<br>மேம்பட்ட பாதுகாப்புத்தன்மைக்கு என குரோமியம் ஹாலோகிராம் இதில் இணைத்து பயன்படுத்தப்பட்டிருக்கும்<br>பெங்களூருவில் சமீபத்தில் பெண் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், குற்றவாளிகள் இருவர் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் சிசிடிவி காட்சிகளை போலீசார் கைப்பற்றியனார். ஆனால் அதிலிருந்து வாகனம் தொடர்பான தகவல்கள் எதனையும் அவர்களால் பெற முடியவில்லை. இத்தகைய சூழ்நிலைகளுக்கு கர்நாடக அரசின் இந்த புதிய நம்பர் பிளேட்டுகள் முறை முடிவு கட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| எகிப்து நாட்டில் நடைபெற்று வரும் ஜூனியர் மற்றும் கேடட் ஓபன் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் தொடரில் இந்திய வீராங்கனையான செலினா செல்வகுமார் 3 தங்கப் பதக்கங்கள் வென்றார்.<br>எகிப்தின் ஷர்ம் எல் ஷேக் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் 17 வயதான சென்னையைச் சேர்ந்த வீராங்கனையான செலினா செல்வகுமார் ஒற்றையர் பிரிவு இறுதி சுற்றில் 8-ம் நிலை வீராங்கனையான எகிப்தின் மரியம் அலோட்பையை எதிர்த்து விளையாடினார். இதில் செலினா 11-5, 12-10, 8-11, 6-11, 11-3, 6-11, 11-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.<br>இரட்டையர் பிரிவில் நைஜீரியாவின் ஒரிபமைஸூடன் இணைந்து விளையாடிய செலினா இறுதிப் போட்டியில் 11-8, 12-10, 9-11, 8-11, 11-9 என்ற செட் கணக்கில் எகிப்தின் பரிதா பதாவி, கீரிஸ் நாட்டின் மலமாத்தேனியா ஜோடியை வென்றார். கலப்பு அணிகள் பிரிவிலும் செலினா ஏற்கெனவே தங்கப் பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. |
| திருவனந்தபுரம்: 'ரேபிஸ்' எனப்படும் வெறிநாய்க் கடிக்கான தடுப்பூசியை சொந்தமாக தயாரிக்க, கேரள அரசு தீவிரமாக உள்ளது.<br>கேரளாவில், முதல்வர், பினராயி விஜயன் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி அரசு அமைந்துள்ளது. இங்கு, |

| |
|---|
| தெருநாய் பிரச்னை மிக அதிகமாக உள்ளது.<br>கேரளாவில், 2.5 லட்சம் தெருநாய்கள் உள்ளதாக, அரசு புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. 2015 - 16ல், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர், நாய்க்கடியால் பாதிக்கப்பட்டனர்.<br>ரேபிஸ் எனப்படும் வெறிநாய்க் கடிக்காக போடப்படும் தடுப்பூசி மருந்துகள் தற்போது, தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள தேசிய பால் பொருட்கள் மேம்பாட்டு வாரியத்தின் துணை நிறுவனமான, இந்திய தடுப்பூசி மருந்து நிறுவனத்திடம் வாங்கப்படுகிறது.<br>இந்த தடுப்பூசிகளை சொந்தமாக தயாரிப்பதில், கேரள அரசு தீவிரமாக உள்ளது |
| ஐதராபாத் : 'ஆப்பிள்' நிறுவனம், 'இ -வாலட்' எனப்படும், மின்னணு பணப்பை சேவையில் களமிறங்க திட்டமிட்டு உள்ளது. இது குறித்து, ஆப்பிள் நிறுவனத்தின், இணைய சாப்ட்வேர் மற்றும் சேவைகள் பிரிவின் மூத்த துணைத் தலைவர், எடி க்யூ கூறியதாவது:இந்தியாவில், மின்னணு பணப் பரிவர்த்தனை சேவையில் களமிறங்க, ஆப்பிள் திட்டமிட்டு உள்ளது. இச்சேவை, 'ஆப்பிள் பே' என்ற பிராண்டு பெயரில் வழங்கப்படும். இந்தியா போன்ற, மிகப்பெரிய வர்த்தக வாய்ப்பு உள்ள, மின்னணு பணப்பை சேவை சந்தையில் களமிறங்க, ஆப்பிள் ஆர்வமாக உள்ளது.<br>எனினும், இச்சேவைக்கான அடிப்படை கட்டமைப்பை உருவாக்குவதை தவிர்த்து, ஏற்கனவே, இத்துறையில் உள்ள நிறுவனத்துடன் இணைந்து செயல்பட, ஆப்பிள் விரும்புகிறது. குறிப்பாக, இத்துறையில் முன்னணியில் உள்ள, 'பேடிஎம்' போன்ற நிறுவனங்களுடன், ஆப்பிள் இணைந்து செயல்படும்.இவ்வாறு அவர் கூறினார் .<br>ஆப்பிள் நிறுவனம், பெங்களூரில், 'ஐபோன் எஸ்.இ.,' சாதனங்களை, ஏற்கனவே, தயாரிக்கத் துவங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. |
| ரயில் விபத்துகளை தடுக்கும் வகையில், பழைய ரயில் தண்டவாளங்களை மாற்றும் நடப்பு நிதியாண்டுக்கான இலக்கு, 2,000 கி.மீ.,யிலிருந்து, 3,600 கி.மீ.,யாக உயர்த்தப்பட்டுள்ளது.<br>ரயில் தண்டவாளங்களில், 85 சதவீதம் வரை, அரசு நிறுவனமான, 'செயில்' எனப்படும் இந்திய உருக்கு ஆணையம் நிறுவனமிருந்து வாங்கப்படுகிறது. |
| 'ரயிலுக்கு முன் நின்று, 'செல்பி' எடுப்பவர்கள், இனி, 2,000 ரூபாய் அபராதம் செலுத்துவதுடன், ஆறு மாத சிறைத் தண்டனையையும் அனுபவிக்க நேரிடும்' என, வடக்கு ரயில்வே எச்சரித்துள்ளது. |
| பனாமா கேட்' ஊழலை மால்டா நாட்டை சேர்ந்த பெண் நிருபர் தப்னே கருவானா கலிஜியா உலகுக்கு அம்பலப்படுத்தினார். இந்த நிலையில், நேற்று அவர் அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் படுகொலை செய்யப்பட்டார். மால்டாவில் உள்ள பிட்னிஜா கிராமத்தில் தனது காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் கார் மீது குண்டு வீசப்பட்டட்ல்து . இதில் அவர் சிதறி பரிதாபமாக இறந்தார். |
| உலக வறுமை ஒழிப்பு தினம் :<br>உலகில் ஒருவர் வறுமையால் பாதிக்கப்பட்டால், அவரது மனித உரிமை மீறப்படுகிறது என்கிறார் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஜோசப் ரெசின்கி. இவர் சிறு வயது முதலே வறுமைக்கு எதிராக போராடினார். இவரது முயற்சியால் உலக வறுமை ஒழிப்பு தினம் 1987 அக்., 17ல் உருவாக்கப்பட்டது. ஐ.நா., சபையால் இத்தினம் அங்கீகரிக்கப்பட்டது. 'வறுமைக்கு முடிவு கட்டுவோம் : அமைதியான வழியில் சமூகத்தை இணைப்பது இதற்கான வழி' என்பது இந்தாண்டு மையக்கருத்து இந்தியாவில் 22.4 கோடி பேர் சர்வதேச வறுமை ஒழிப்பு கோட்டுக்கு கீழே உள்ளனர் என உலக வங்கி தெரிவித்துள்ளது |
| ஐரோப்பிய நாடான பிரிட்டன் தலைநகர், லண்டனைச் சேர்ந்தவர்கள், கவுசிங் - ரேணுகா தம்பதியர்; இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர்கள் மகன், அக் ஷய் ரூபரேலியா, 16, பள்ளியில் படித்து வருகிறார்.அக் ஷய், ரியல் எஸ்டேட் தொடர்பான,<br>இணையதளம் ஒன்றை துவக்கினார். பள்ளி நேரம் தவிர்த்து, மற்ற நேரங்களில், சொத்துக்களை விற்றுக் கொடுத்து, கட்டணம் வாங்கினார். கடந்த,12 மாதங்களில், அக் ஷய், 100 கோடி ரூபாய் அளவுக்கு, ரியல் எஸ்டேட் வணிகம் செய்துள்ளார். இதனால், பிரிட்டனின், இளம் கோடீஸ்வரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். |
| இந்தி நடிகரான ஹேமா மாலினியின் சுயசரிதை<br>'Beyond the Dream Girl' இதை தீபிகா படுகோன் வெளியிட்டார்.<br>இது பத்திரிகை மற்றும் எழுத்தாளர் ராம்கமல் முகர்ஜி எழுதியது மற்றும் பிரதமர் நரேந்திர மோடி எழுதிய முன்னுரையும் கொண்டுள்ளது. |
| இந்தியாவின் முதல் ஒலிம்பிக் நீச்சல் வீரர் ஷாம்ஷர் கான் (Shamsher Khan) ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூர் மாவட்டத்தில் காலமானார். 1956 ஆம் ஆண்டு மெல்போர்ன் ஒலிம்பிக்கில் கலந்துகொண்டார்.<br>மெல்போர்ன் போட்டிகளில் 200 மீட்டர் பட்டாம்பூச்சி மற்றும் மார்பக செயல்களில் (butterfly and breaststroke) நான்காவது |

| |
|---|
| இடத்தைப் பிடித்தார். பட்டாம்பூச்சி நிச்சலில் தேசிய சாதனையை உருவாக்கியவர் கான், 1946 இல் இராணுவத்தில் சேர்ந்த பிறகு நீச்சல் கற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. |
| ஹரியானாவைச் சேர்ந்த கவிதா தேவி, தற்போது, WWE எனப்படும் உலக பொழுதுபோக்கு மல்யுத்த அமைப்பில் சேருவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளார். இந்தப் பெருமையை பெறும் முதல் இந்தியப் பெண் கவிதா.<br>முன்னாள் பளுதூக்கும் வீராங்கனையான ஹரியானாவைச் சேர்ந்த கவிதா தேவி, சில மாதங்களுக்கு முன் நடந்த மே யங் கிளாசிக் பெண்கள் போட்டியில், கவிதா தேவி பங்கேற்றார்.<br>மிகப் பிரபலமான மல்யுத்த வீரரான, பஞ்சாப்பை சேர்ந்த கிரேட் காளியிடம் பயிற்சி பெற்றவர் கவிதா. தற்போது WWE அமைப்புடன் ஒப்பந்தம் செய்துள்ளார். இந்த அமைப்புடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் முதல் இந்திய பெண் என்ற பெருமை கவிதாவுக்கு கிடைத்துள்ளது. |
| அக்டோபர் 31, 2017 அன்று, சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த நாள் நாடு முழுவதும்<br>RUN FOR UNITY என்று கொண்டாட உள்ளது. |
| இந்த ஆண்டிற்கான சர்வதேச குழந்தைகளுக்கான அமைதி விருதுக்கு தமிழகத்தைச் சேர்ந்த "சக்தி" என்ற நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த 12 வயது சிறுவன் விருது பெறுவோருக்கான பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ளார் |
| மஹிந்திரா & மஹிந்திரா மகளிர் விவசாயிகளுக்கான 'ப்ரெர்னா' (Prerna) திட்டத்தை ஆரம்பித்துள்ளது<br>மஹிந்திரா & மஹிந்திரா வேளாண் துறையில் வேலை செய்யும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான Prerna என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| மந்த் சோபான் (Mandd Sobhann) நிறுவனத்தால் வழங்கப்படும் காலக்கர் புரஸ்கார் 2017 (Kalakar Puraskar 2017) விருது புகழ்பெற்ற கொங்கனி நாட்டுப்புற கலைஞரான கோபால் கவுடா தேர்வு செய்யபட்டுள்ளார். |
| பிரபல கவிஞர், பாடலாசிரியர் மற்றும் பத்திரிகையாளர் பிரபா வர்மா இந்த ஆண்டு பத்ம பிரபா புரஸ்காரம் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். |
| புகழ்பெற்ற NRI தொழிலதிபரும் மற்றும் கேபரோ குரூப் (Caparo Group) தலைவருமான<br>ஸ்வராஜ் லார்ட் பால் (Swraj Lord Paul) அவர்களுக்கு இரண்டாம் பிரிட்டிஷ் வாழ்நாள் சாதனையாளர் விருது (2nd British Asian Achievers Awards)வழங்கப்பட்டுள்ளது... |
| நடிகர் வருண் தவான் Madame Tussauds ஹாங்காங்கில் உள்ள அரங்கில் மெழுகு சிலை பெறும் இளம் இந்திய நடிகர் ஆவார்... |
| கைத்தறித் தொழிற்துறை மேம்பாட்டிற்க்கு Myntra உடன் ஜவுளி அமைச்சகம் ஒப்பந்தமிட்டுள்ளது.<br>நெசவாளர்கள் நேரடியாக பணிபுரியவும் மற்றும் அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்தவும் இது ஒரு முன்முயற்சியாக இருக்கும்... |
| அயர்லாந்தை தாக்கிய புயல் ஒஃபிலியா... |
| பஞ்சாப் போலிஸ் பஞ்சாப்பில் அனைத்து மாவட்டங்களிலும் கால்களால் ரோந்து பணியை மேற்கொள்ளும் திட்டம் தொடங்கியுள்ளனர்...<br>இத் திட்டத்தின் நோக்கம் பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யும், மற்றும் மக்கள் நட்புறவு கொள்கையில் ஒரு பாலமாகவும் இருக்கும் என அதிகாரிகள் கூறினார். |
| அமெரிக்க எழுத்தாளர் ஜார்ஜ் சவுந்தர்ஸ் (George Saunders) 2017 க்கான மேன் புக்கர் பரிசு வென்றுள்ளார்...<br>நாவலின் பெயர் - லிங்கன் இன் தி பார்டோ (Lincoln in the Bardo)... |
| வீட்டுப் பணியாளர்களுக்கும் பிற தொழிளாலர்களைப் போலவே சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து வகையான உரிமைகளையும் அளிப்பதற்கான தேசிய வரைவு கொள்கையை மத்திய அரசு தயாரித்துள்ளது. |
| உலக தமிழ் கவிதை விழா : இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது. |
| மத்தியப் பிரதேச முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் செளகான் விவசாயிகளுக்கு 'பவந்தார் புக்தன் யோஜனா' ('Bhavantar Bhugtan Yojana') துவங்கி வைத்தார்<br>இதன் மூலம் விவசாயிகளுக்கு பூஜ்ஜிய வட்டி கடன் கொடுக்க முன்வந்த முதல் மாநிலமாக மத்திய பிரதேசம் விளங்குகிறது. |
| வனுவாட்டு (Vanuatu) நாடு குடியுரிமைக்கான பரிவர்த்தனையில் பிட்காயினை ஏற்ற உலகின் முதல் நாடு.<br>அவர்கள் பணத்தின் பெயர் – Vanuatu vatu |
| இந்தியாவின் முதல் சர்வதேச செர்ரி ப்ளாசம் விழா ஷில்லாங்கில் நடைபெற உள்ளது.. |

| |
|---|
| - தேதி - நவம்பர் 8 முதல் 11 வரை |
| நன்றி - current affairs for competitive exams...<br>மராட்டிய கிராம பஞ்சாயத்து தேர்தல் வரலாற்றில் முதன் முறையாக திருநங்கை ஒருவரும் வெற்றி பெற்றிருக்கிறார். அவரது பெயர் தியானதேவ் சங்கர் காம்பிளே.<br>சோலாப்பூர் மாவட்டம் மல்சிராஸ் தாலுகா தாரங்க்பால் கிராம பஞ்சாயத்து தலைவராக அவர் தேர்வாகி இருக்கிறார். |
| OCTOBER 17- National Ayurveda Day (தேசிய ஆயுர்வேத தினம்)<br>- Theme- 'Run for Ayurveda'<br>- தேசிய ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு இந்தியாவின் முதல் அனைத்திந்திய ஆயுர்வேத நிறுவனம்(AIIA) டெல்லியில் பிரதமர் மோடி தலைமையில் திறக்கப்பட உள்ளது |
| அரியவகை ஆமைகளை பாதுகாக்க பெரு நாடு முடிவு<br>லிமா : பெரு நாட்டில் அரியவகை ஆமைகளை பாதுக்காக்க அந்நாட்டு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஐந்தாயிரம் ஆமை குஞ்சுகள் அமேசான் காடுகளில் விடப்பட்டன. |
| உத்தரப் பிரதேச மாநில அரசின் 2018-ம் ஆண்டுக்கான காலண்டரில் தாஜ்மஹால் இடம்பிடித்துள்ளது. மாநில தகவல் துறை சார்பில் வெளியிடப்பட்ட இந்த காலண்டரில் ஜூலை மாதத்துக்கான பக்கத்தில் தாஜ்மஹால் இடம்பிடித்திருக்கிறது. தாஜ்மஹாலைத் தவிர கோரக்பூர் கோயிலும் இந்தக் காலண்டரில் இடம்பெற்றுள்ளது. கோரக்பூர் கோயில் மடத்தில் உ.பி., முதல்வர் யோகி ஆதித்யநாத், முக்கியப் பொறுப்பில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. |
| பாட் டாக்சி எனப்படும் புதிய போக்குவரத்து சாதன கட்டமைப்பு முறையை அறிமுகம் செய்ய பெங்களூர் பெருநகர மாமன்றம் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.<br>ரோப் கார் போல கம்பி வடத்தில் தொங்கிச் செல்லும் இந்த பாட் டாக்சி போக்குவரத்து சாதனம், பெங்களூரின் போக்குவரத்து நெரிசல் மிக்க பகுதிகளில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. |
| அன்போடு தூத்துக்குடி :<br>தூத்துக்குடி மாநகராட்சியில் 'அன்போடு தூத்துக்குடி' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக ''அட்சய பாத்திரம்'' திட்டத்தை மாநகராட்சி ஆணையாளர் ஆல்பி ஜான் வர்க்கீஸ் தொடங்கி வைத்தார்.<br>தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் ஆதரவற்ற, உழைக்க இயலாத ஏழ்மை நிலையிலுள்ள மக்களின் பசியைப் போக்கிடும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது |
| இங்கிலாந்தில் உள்ள மெல்பர்ன் கிரிக்கெட் கிளப்பின் (MCC) உலக கிரிக்கெட் குழுவில் சேர்க்கப்படும் முதல் பங்களாதேஷ் வீரர் என்ற பெருமையை "Shakib Al Hasan" பெற்றுள்ளார் |
| விமானப்படை ஒத்திகைக்காக மூடப்படுகிறது ஆக்ரா-லக்னோ எக்ஸ்பிரஸ்வே<br>ஆக்ரா : போர்க்காலங்களில் இந்திய விமானப் படை விமானங்களை சாலையில் தரையிறக்கும் ஒத்திகைக்காக ஆக்ரா-லக்னோ எக்ஸ்பிரஸ்வே 4 நாட்களுக்கு மூடப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது... |
| உத்தரபிரதேச மாநிலம் உன்னாவ் மாவட்டத்தில் உள்ள பங்கார்மாவ் என்ற இடத்தில் லக்னோ–ஆக்ரா எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையில் இந்திய விமானப்படைக்கு சொந்தமான மிராஜ்–2000, ஜாக்குவார், சுகோய்–30 எம்.கே.ஐ., ஜாக்குவார் மற்றும் ஏ.என்.–32 சரக்கு விமானம் உள்ளிட்ட 20 போர் விமானங்கள் தரை இறக்கப்படுகின்றன. பின்னர் சிறிது நேரத்தில் அந்த விமானங்கள் அங்கிருந்து கிளம்பிச் செல்லும். ஏ.என்.–32 சரக்கு விமானம் சாலையில் தரை இறங்குவது இதுவே முதல் முறை ஆகும்.<br>இதற்கான முன்னேற்பாடுகளை செய்வதற்காக அந்த சாலையில் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் குறிப்பிட்ட தூரம் போக்குவரத்து ரத்து செய்யப்படுகிறது.<br>மேற்கண்ட தகவலை ராணுவ மத்திய படைப் பிரிவின் செய்தித் தொடர்பாளர் கார்கி மாலிக் சின்கா தெரிவித்து உள்ளார். |
| மாசுபாடு காரணமாக அதிக உயிரிழப்புகள் ஏற்படும் நாடுகள்: 5வது இடத்தில் இந்தியா<br>உலகில் அதிக மாசுபாடு நாடுகள் மற்றும் குறைந்த மாசுபாடு உள்ள நாடுகள் பட்டியலை தி லான்செட் என்ற பொது மருத்துவ பத்திரிக்கை வெளியிட்டுள்ளது. இதன்படி, உலகளவில் உயிரிழப்பவர்களில் 6-ல் ஒருவர் மாசுபாடு காரணமாக இறப்பதாக கூறப்பட்டுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு ஆய்வின் அடிப்படையில் உலகளவில் 90 லட்சம் பேர் மாசுபாடு காரணமாக உயிரிழந்திருப்பதாகவும், இந்த உயிரிழப்புகள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளிலேயே நிகழ்ந்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இதயநோய், நுரையீரல் புற்றுநோய் மற்றும் பக்கவாதம் போன்றவற்றிற்கு மாசுபாடு தான் முக்கிய காரணமாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.<br>இந்த பட்டியலில் உலகளவில் மாசுபாடு காரணமாக அதிக உயிரிழப்புகள் ஏற்படும் நாடுகளில், வங்கதேசம் |

| |
|---|
| முதலிடத்திலும், சோமாலியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. இதில் இந்தியா 5வது இடத்திலும், பாகிஸ்தான் 10வது இடத்திலும் உள்ளன. உலகளவில் மாசுபாடு காரணமாக குறைந்த அளவு உயிரிழப்புகள் ஏற்படும் நாடுகளில் புருனே முதல் இடத்திலும், ஸ்வீடன் இரண்டாவது இடத்திலும் உள்ளன. |
| அக்டோபர் 20<br>உலக புள்ளிவிவர தினம்(World Statistics Day)<br>உலகளாவிய புள்ளிவிவரம் தினம் உலகம் முழுவதும் 20 அக்டோபர் 2010 முதல் முறையாக கொண்டாடப்பட்டது. |
| உலக தமிழ் கவிதை விழா : இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது |
| ஜப்பானின் ‘செலீன்’ விண்கலம் சந்திரனில் ஆய்வு நடத்தி வருகிறது. அது எடுத்து அனுப்பிய போட்டோக்கள் மூலம் சந்திரனில் மிகப்பெரிய குகை இருப்பதை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். |
| மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல், இந்தியாவின் இரண்டாவது மூத்த சட்ட அதிகாரி ரஞ்சித் குமார் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார். |
| நியூசிலாந்தின் புதிய பெண் பிரதமராக தொழிலாளர் கட்சியை சேர்ந்த ஜெசிந்தா ஆண்டர்ன் தேர்வு...<br>வெலிங்டன்: நியூசிலாந்தில் கடந்த மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தேசிய கட்சி 56 இடங்களிலும், தொழிலாளர் கட்சி 46 இடங்களிலும் வெற்றி பெற்றன... |
| வரும் 2019ம் ஆண்டுக்குள் அனைத்து கிராம பஞ்சாயத்துக்களிலும் வை-பை வசதி ஏற்படுத்த விரைவில் ரூ.3,700 கோடிக்கு டெண்டர் வெளியிடுவதற்கு மத்திய அரசின் தொலைத்தொடர்பு துறை முடிவு செய்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் கிராம பஞ்சாயத்துக்களில் ஒரு ஜிபி வேகத்தில் வைபை வசதியை இந்த ஆண்டு இறுதிக்குள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. டெண்டர் விவரங்கள் ஒரு வாரத்தில் முடிவு செய்யப்பட்டு உடனடியாக வெளியிட்டப்படும் என என தொலைத்தொடர்பு துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த வேகத்தின்படி, ஒரு திரைப்படத்தை இரண்டு நொடிக்குள் பதிவிறக்கம் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. |
| நிலவில் 50கி.மீ நீள குகை ஒன்று இருப்பதை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். நிலவிற்கு முதன் முதலாக அமெரிக்கா மனிதர்களை அனுப்பி சாதனை படைத்தது. தொடர்ந்து ரஷ்யா, இந்தியா, சீனா, நாடுகள் நிலவில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.<br>மேலும் ஜப்பான் நாடும் நிலவு குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இதில் நிலவில் 50 கி.மீ நீளத்திற்கு குகை ஒன்று இருப்பதை கண்டுபிடித்துள்ளது. ஜப்பானின் செலீன் விண்கலம் அனுப்பிய இதனை கண்டு பிடித்து உள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த குகை சுமார் 31 மைல் நீளமும், 100 மீட்டர் அகலமும் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. நிலவில் உள்ள மாரியஸ் என்ற எரிமலை வெடித்ததால் குகை போன்று தோன்றி உள்ளதாக கூறப்பட்டுள்ளது. |
| தேசிய அளவிலான, மாசுபட்ட நகரங்கள் பட்டியலில், ராஜஸ்தானின் பிவாடி முதலிடத்திலும், தமிழகத்தின், சென்னை, ஒன்பதாவது இடத்திலும் உள்ளன.<br>சமீபத்தில், நாடு முழுவதும் தீபாவளி கொண்டாடப்பட்டது. அப்போது, பட்டாசுகள் வெடித்ததால், ஏற்பட்ட காற்று மாசை கண்காணித்து, தேசிய அளவில், மாசுபட்ட நகரங்கள் பட்டியலை, மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டது. இந்த பட்டியலில், ராஜஸ்தான் மாநிலத்தின், பிவாடி முதலிடத்தை பெற்றுள்ளது. இரண்டாமிடத்தில், மேற்கு வங்கத்தின் கோல்கட்டா, மூன்றாமிடத்தில், உ.பி.,யின், ஆக்ரா உள்ளன.<br>உ.பி.,யின், காஜியாபாத், 4, டில்லி, 5, உ.பி.,யின், கான்பூர், 6, ஹரியானாவின், பரீதாபாத், 8, தமிழகத்தின், சென்னை, 9, உ.பி.,யின், லக்னோ, 10 ஆகிய இடங்களை பெற்றுள்ளன. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது |
| மத்திய அரசின் துணை தலைமை வழக்கறிஞர் ரஞ்சித்குமார், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காக தான் ராஜினாமா செய்வதாக அவர் தனது ராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். |
| தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் நவம்பர் 16-ம் தேதி நான்காம் உலகத் தமிழர் பொருளாதார மாநாடு தொடங்குகிறது. |
| மதுரை: மேலூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் மாதிரி செயற்கைக்கோள் ஒன்றை வடிவமைத்துள்ளனர். 10 மாணவிகள் மூலம் தயாரிக்கப்பட்ட இந்த மாதிரி செயற்கைக்கோள் திரவ எரிபொருள் கொண்டு பறக்கவிடப்பட்டது. |
| Current Affairs Today - October 20 2017<br>1.Dharmendra Pradhan launches Odisha's first PNG supply in Bhubaneswar<br>2.Nasscom to set up centres of excellence to better learn AI<br>3.NRCB signs agreement with Andhra Pradesh government<br>4.Activists in Mumbai launched Chipko movement to protect Aarey Colony trees<br>5.Punjab CM restores special family pension for widows of govt employees killed by terrorists<br>6.Kerala govt prohibits using 'Dalit', 'Harijan' in official communications<br>7.Government to organise Global Ayurveda meet in Kochi |

8.India among five countries responsible for 50% newborn deaths
9.Lebanon's parliament approves country's first budget since 2005
10.World's first floating wind farm in Scotland starts generating electricity
11.World's oldest warship "USS Constitution" sailing again
12.Section 247 of the Companies Act 2013,relating to Valuation by Registered Valuers comes into force
13.US starts antidumping probe against PTFE resin from India
14.Jacinda Ardern to become New Zealand Prime Minister
15.Ranjit Kumar resigns as Solicitor General of India
16.Adesina Receives 2017 World Food Prize Laureate Award
17.Playboy features first transgender model as its playmate
18.New species of large gecko discovered from Eastern Ghats
18.WhatsApp introduces live location sharing
19.World's Deepest Lake"Lake Baikal" is in Deep Trouble
20.South Africa displace India from top of ODI rankings
21.Park Ji-Sung to be first South Korean to carry Olympic Games flame
22.Mohit Dudeja,Kiran bag medals at Worldskills competition
23.French film legend Danielle Darrieux dies aged 100
24.World Statistics Day - October 20

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த 1995-ம் ஆண்டு நடைபெற்ற தொண்டு நிறுவன ஏலத்திற்காக 12-9 அங்குலமுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டிட வரைபடத்தை கருப்பு-வண்ணத்தில் வரைந்தார். இது அப்போது நடந்த ஏலத்தில் 100 டாலர்களுக்கு ஏலம் போயுள்ளது.
இந்நிலையில், அதே ஓவியம் கடந்த 19-ம் தேதி மறுபடியும் ஏலத்தில் விற்பனை செய்துள்ளனர். அப்போது அதை ஒரு நபர் 16 ஆயிரம் டாலர்களுக்கு ஏலத்தில் எடுத்துள்ளார். இது இந்திய மதிப்பில் சுமார் 10 லட்ச ரூபாயாகும். இதை லாஸ் ஏஞ்சல்ஸில் ஜூலியன் ஏலன்ஸ் என்ற நிறுவனம் ஏலத்தில் விற்பனை செய்துள்ளது. அந்த ஓவியத்தை வாங்கியவரின் பெயர் வெளியிடப்படவில்லை.
கடந்த ஜூலை மாதம், அமெரிக்காவின் மான்ஹட்டன் நகரில் உள்ள கட்டிடங்களை குறிக்கும் வகையில் அதிபர் டொனால்ட் டிரம்ப் வரைந்த ஓவியம் 18 லட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டது. இதற்கு முன்னர் ஏற்கனவே, டிரம்ப் பயன்படுத்திய பெரராரி ரக சொகுசு கார், கோல்ப் கிளப்பின் ஒரு தொகுப்பு மற்றும் டிரம்ப் கையெழுத்திட்ட விஸ்கி பாட்டில் ஆகியவை ஏலம் விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பணியின் போது உயிர் நீத்த காவலர்களுக்கு நாடு முழுதும் அக்.21 அன்று அஞ்சலி செலுத்தப்படுகிறது.
1959ம் ஆண்டு அக்டோபர் 21ம் தேதியன்று லடாக் பகுதியில் ஹாட் ஸ்பிரிங் என்ற இடத்தில் சீன ராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் மத்தியப் பாதுகாப்புப் படைக் காவலர்கள் 10 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் பல்வேறு சம்பவங்களில், பணியின்போது வீர மரணமடைந்த காவலர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 21ம் தேதி 'காவலர் வீரவணக்க நாள்' அனுசரிக்கப்படுகிறது.

கொல்கத்தா ஐஇஎம் இன்ஜினீயரிங் கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் நிலஞ்ஞன் டா, தேவபிரியா பால் மற்றும் ஐஐஇஎஸ்டி பேராசிரியர்கள் இணைந்து ரூ.10 செலவில் பத்தே நிமிடங்களில் மலேரியா காய்ச்சலை கண்டு பிடிக்கும் மொபைல் செயலியை கண்டுபிடித்துள்ளனர்.
அமெரிக்க இந்தியர் உதவி
அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இந்திய வம்சாவளி பேராசிரியர் மனு பிரகாஷ் கடந்த 2014-ம் ஆண்டில் 'போல்டுஸ்கோப்' என்ற குறைந்தவிலை நுண்ணோக்கியை உருவாக்கினார். இதன் விலை ஒரு டாலர். இந்திய ரூபாய் மதிப்பில் தோராயமாக ரூ.70. கொல்கத்தா மாணவர்களின் ஆராய்ச்சிக்காக அமெரிக்காவில் உள்ள மனு பிரகாஷின் ஆய்வகம், 2 போல்டுஸ்கோப் நுண்ணோக்கிகளை அனுப்பி வைத்தது.
இதுகுறித்து ஐஐஇஎஸ்டி பேராசிரியர் அரிந்தம் கூறியதாவது:
எங்களது கண்டுபிடிப்புக்கு 'சென்டார்' என்று பெயரிட்டுள்ளோம். ஒரு நுண்ணோக்கியை தயாரிக்க ரூ.80 செலவாகும். எனினும் மக்களுக்காக ரூ.10 விலையில் வழங்க முடிவு செய்துள்ளோம். அதன்படி ரூ.10 செலவில் பத்தே நிமிடங்களில் மலேரியா காய்ச்சலை கண்டு பிடித்துவிட முடியும். ரத்த பரிசோதனை முடிவு 90 சதவீதம் துல்லியமாக இருக்கும்.

ஐரோப்பாவில் 9.7 மில்லியன் ஆண்டுகள் பழமைவாய்ந்த இரண்டு பற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னதாக 3.2 ஆண்டுகள் பழமையான எலும்புக்கூடு எத்தியோப்பியாவில் கண்டெடுக்கப்பட்டது. எனவே மனித இனம் ஆப்பிரிக்காவில் தோன்றியதாக நம்பப்பட்டு வந்தது. இந்நிலையில், இத்தனை ஆண்டுகள் பழமையான பற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், மனித இனம் என்பது முதலில் ஐரோப்பாவில் தோன்றியதா என்ற சந்தேகம் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் இடையே எழுந்துள்ளது.

| |
|---|
| முன்னால் நைஜிரிய வேளாண் அமைச்சர் டாக்டர் அகினுமி அடிஸினா (Akinwumi Adesina) 2017 ம் ஆண்டுக்கான உலக உணவு விருது (WFP) அமெரிக்காவில் பெற்றுள்ளார்... |
| 2018 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கொச்சியில் சர்வதேச ஆயுர்வேத கருத்தரங்கு மாநாடு கேரளா அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்படும் என்று சுகாதார அமைச்சர் கே கே ஷைலஜா(KK Shailaja) அறிவித்துள்ளார்..<br>ஆயுர்வேத ஆராய்ச்சிக்கான சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதற்கான திட்டத்தை மாநில அரசு முன்னெடுத்து வருகிறது என்றும் அறிவித்தார்.. |
| ஒடிசாவின் முதல் (PNG-Piped Natural Gas) குழாய் இயற்கை எரிவாயு திட்டம் புவனேஸ்வரில் துவங்கப்பட்டது. பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடங்கிவைத்தார்<br>பிரதம மந்திரி உர்ஜா கங்கை திட்டத்தின் ஒரு பகுதியான குழாய் இயற்கை எரிவாயு திட்டம் ஆறு மாதங்களில் 2018 மார்ச் மாத இறுதிக்குள் தொடங்கப்படும்.<br>திட்டத்தின் இலக்கு 2020 ஆம் ஆண்டில் மாநிலத்தில் ஒரு கோடி PNG இணைப்புகளை வழங்குவதாகும். 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த நகரின் அனைத்து பகுதியிலும் அளிக்க முடிவு... |
| நன்றி - current affairs for competitive exam<br>மத்திய குழந்தைகள் மற்றும் பெண்கள் நலத்துறை அமைச்சகம், பாலின சமத்துவத்தை வலியுறுத்தி, சமூக வலைத்தளங்களில் women for women : #IamThatWoman என்ற பிரச்சாரத்தை துவக்கியுள்ளது. |
| வருமான வரித்துறை வரி செலுத்துவோருக்கு<br>'Online Chat' எனும் சேவையை தொடங்கியுள்ளது...<br>இதன் மூலம் நேரடி வரி விவகாரங்கள் தொடர்பான அடிப்படை கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதில் எளிதில் பெறலாம். |
| ஆந்திரா மாநில அரசு வாழை உற்பத்தியை அதிகரிப்பதற்காக தொழில்நுட்பரீதியாக தேசிய ஆராய்ச்சி மையத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. |
| இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா (IBSA) நாடுகள் இணைந்து நம்பிக்கை நிதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். வளரும் நாடுகளில் வறுமைக்கு எதிராக போராட இது உதவும்... |
| வட கொரியா: வட கொரியாவில் 1069 ரோபோட்கள் ஒன்றாக சேர்ந்து ஒரே மாதிரி நடனமாடி கின்னஸ் சாதனை படைத்துள்ளது. ஆட்டிபிசியல் இண்டலிஜெண்ட் என்ற தொழிநுட்பம் மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்த ரோபோட்கள் தொடர்ச்சியாக ஒலிபரப்பான பாடல்களுக்கு ஒரே மாதிரி நடனம் ஆடியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. |
| சுவிச்சர்லாந்திற்கான இந்திய தூதராக சிபி ஜார்ஜ் நியமனம் |
| இமயமலை ஆராய்ச்சியாளர் நைன் சிங் ராவத்தின் 187 வது பிறந்த தினத்தை கொண்டாடும் வகையில் அவர் மலைகளுக்கு நடுவில் நின்று ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பது போன்ற ஓவியத்தை கூகுள் நிறுவனம் தனது முகப்பு பக்கத்தில் வெளியிட்டு கௌரவித்துள்ளது.<br>->ஆங்கிலேயர்களுக்காக வட இந்தியாவை ஆய்வு செய்தவர்களில் இவரும் ஒருவர்.<br>->திபெத்தை முதன் முதலில் ஆய்வு செய்தவர் என்ற பெருமைக்குரியவர். |
| அரபிக் கடலோரம் கேம்பே வளைகுடா பகுதியில் படகு சேவையை பிரதமர் தொடங்கி வைக்கிறார்.<br>பாவ்நகர் மாவட்டம் கோஹா என்ற இடத்தில் இருந்து கேம்பே வளைகுடா பகுதியில் பரூச் பகுதியில் உள்ள தஹேஜ் என்ற இடத்துக்குச் செல்ல சாலையில் சுமார் 352 கி.மீ. தூரம் சுற்றிக் கொண்டு செல்ல வேண்டும். இதற்கு 6 மணி நேரத்துக்கு மேலாகும். இதை தவிர்க்க ரூ.615 கோடியில் 'ரோல் ஆன், ரோல் ஆப்' (ரோ ரோ) என்ற படகு சேவை திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. குஜராத் மாநில முதல்வராக இருந்தபோது கடந்த 2012-ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தத் திட்டத்துக்கு மோடி அடிக்கல் நாட்டினார். அப்போது அவர் பேசும்போது, "இந்தத் திட்டம் எனது கனவுத் திட்டம்" என்று குறிப்பிட்டிருந்தார். |
| நெதர்லாந்து: நெதர்லாந்தில் வருடாவருடம் அதிக அளவில் சாலைகளில் சிகரெட் துண்டுகளை குப்பைகளாக போடப்படுகின்றன. இதன் காரணமாக அங்கு பொது இடங்கள் சிகரெட் குப்பைகளால் நிரம்பி வழிகிறன்றன. வருடாவருடம் அங்கு இந்த சிகரெட் குப்பைகளை அகற்றுவது மிகவும் கடினமான பணியாக இருக்கிறது. இதையடுத்து அந்த சாலைகளில் அதிகமாக கிடக்கும் சிகரெட் குப்பைகளை அகற்ற காக்கைகளை பணிக்கு அமர்த்தி இருக்கிறது ஒரு குழு.<br>இந்த நிலையில் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண காக்கைகளை துணைக்கு அழைக்க முடிவு செய்தது 'க்ரோடெட் சிட்டி' |

என்ற அமைப்பு. ரூபன் வான் டெர் மற்றும் பாப் ஸ்ஃபிக்மென் என்ற இரண்டு பேரால் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு நெதர்லாந்தில் அமைதியாக ஒரு புரட்சியே செய்து கொண்டு இருக்கின்றது. அதாவது சாலையில் கிடக்கும் சிகரெட் குப்பைகளை அகற்ற இந்த அமைப்பு காக்கைகளை பயன்படுத்துகின்றது. உலகிலேயே காக்கைகள் மிகவும் புத்திசாலியான உயிரினங்கள் என்பதால் அவைகளை இந்த பணிக்கு அமர்த்தியுள்ளதாக இந்த அமைப்பு கூறுகிறது.

ஆசியக்கோப்பை ஹாக்கி போட்டி: மலேசிய அணியை வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் சாம்பியன்.

ஐரோப்பா கண்டத்தில் உள்ள செக் நாட்டில் பாராளுமன்ற தேர்தலில் கோடீசுவரர் ஆண்ட்ரெஜ் பேபிஸ் அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைக்க உள்ளார்.
ஐரோப்பா கண்டத்தில் உள்ள செக்குடியரசு நாட்டில் பாராளுமன்ற தேர்தல் நடந்தது. 200 இடங்களுக்கு நடந்த மோதலில் ஏஎன்ஓ (யெஸ்) கட்சியும், சிவிக் டெமாக்ரடிக் மற்றும் தி செக் பைரேட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் போட்டியிட்டன. தேர்தலில் ஏஎன்ஓ (யெஸ்) கட்சி ஆட்சி அமைக்க தேவையான 78 இடங்களை பெற்றுள்ளது. எனவே இக்கட்சி ஆட்சி அமைக்கிறது கோடீசுவரர் ஆண்ட்ரெஜ் பேபிஸ் பிரதமராகிறார்.

சிபிஐ சிறப்பு இயக்குநராக ராகேஷ் அஸ்தனா நியமனம்: முக்கிய துறை ஐபிஎஸ் அதிகாரிகள் அதிரடி மாற்றம்
மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சிபிஐ உள்ளிட்ட முக்கிய துறைகளின் தலைமை அதிகாரிகளை மாற்றம் செய்து மத்திய பணியாளர் நலத்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, குஜராத் மாநில காவல்துறை ஆணையர் ராகேஷ் அஸ்தானா, சிபிஐ சிறப்பு இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
சிஎஸ்ஐ இயக்குநர் அலோக் வர்மாவுக்கு பிறகு அஸ்தானா இரண்டாவது மூத்த அதிகாரியாக கருதப்படுகிறார். அஸ்தானா தற்போது நிறுவனங்களின் கூடுதல் இயக்குநராகவும் மற்றும் அக்ஸ்டாவெஸ்ட்லாண்ட் ஆய்வு உட்பட பல முக்கியமான விசாரணைகளை கையாண்டு வருகிறார்.

கர்நாடகத்தில், 100 சி.சி.க்கு குறைவான என்ஜின் கொண்ட இருசக்கர வாகனங்களில் பின் இருக்கையில் அமர்ந்து பயணிக்க தடை விரைவில் அமலுக்கு வர உள்ளது.

ஜப்பானை மிரட்டும் லேன் புயல்: கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு...

முன்னாள் உளவுத்துறை தலைவர் "தினேஷ்வர் சர்மா" ஜம்மு காஷ்மீர் தொடர்பான பிரச்சனைகளுக்கான இந்திய தூதராக உள்துறை அமைச்சகத்தால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்
- குடியரசுத் தலைவரால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த பதவி அரசியல் கட்சிகள், சர்வதேச மையங்களுடன் காஷ்மீர் பிரச்சனை தொடர்பாக ஆலோசனை நடத்தும்

"India's First Pradhan Mantri Kaushal Kendra
for Skilling in Smart Cities"
=================
பொலிவுறும் நகரங்களுக்கான இந்தியாவின் முதல் பிரதான் மந்திரி திறன் மேம்பாட்டு மையம் டெல்லியில் இன்று SKILL INDIA திட்டத்தின் கீழ் உள்துறை அமைச்சகத்தால் தொடங்கி வைக்கப்பட்டது
source: pib

"ISSF World Cup Finals"
=====================
சர்வதேச துப்பாககி சுடுதல் சம்மேளனத்தால் நடத்தப்படும் உலக கோப்பை இறுதி போட்டிகள் டெல்லியில் தொடங் ப்பட உள்ளன
- முதன் முறையாக கலப்பு இரட்டையர் போட்டிகள் இதில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன, இந்த கலப்பு இரட்டையர் போட்டிகள் 2020ம் ஆண்டு நடைபெறும் TOKYO ஒலிம்பிக்கில் இணைக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது

"Macao Open Golf 2017"
=====================
இந்தியாவின் "Gaganjeet pullar" 2வது முறையாக macao open கோல்ப் போட்டிகளில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்

"NASA's DAWN Mission"
=================
நாசாவின் டான் விண்கலம், செவ்வாய் மற்றும் வியாழன் கிரகத்திற்கு இடையேயுள்ள செரஸ்(Ceres) குள்ள கோளை(Dwarf planet) ஆராய்வதற்காக இரண்டாம் கட்ட பணியை தொடங்கியுள்ளது
- முதற்கட்ட ஆய்வுகள் மார்ச் 2015ல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது
- விண்வெளிக் கற்களிலேயே பெரிதான செரஸ்-ன் சுற்றளவு 950 கிலோமீட்டர்களாகும்.
- 1801ம் ஆண்டு ஜனவரி மாதம் கண்டறியப்பட்ட இந்தக் கிரகத்திற்கு ரோமானிய விவசாய தேவதையின் பெயர்

சூட்டப்பட்டது.
- விண்வெளிக் கற்களிலேயே முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது என்ற பெருமையையும் கொண்டது
Source: Economic Times

October 3rd week #CA
லேன்செட் நிறுவன ஆய்வறிக்கையின்படி மாசுபாட்டால் உயிரிழப்பவர்கள் நாடுகளின் வரிசையில் முதலிடம் பெற்றுள்ள நாடு எது?
India
2005-ஆம் ஆண்டுக்கு பின்னர் சமீபத்தில் பாராளுமன்றத்தில் பட்ஜெட்டை நிறைவேற்றியுள்ள நாடு எது?
லெபனான்
அக்டோபர் 2017-ல் சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை இராஜினாமா செய்தவர் யார்?
இரஞ்சித் குமார்
2017-ஆம் ஆண்டின் உலக உணவு பரிசு வென்றவர் யார்?
Akinwunmi Adesina
Kamle எனும் புதிய மாவட்டம் எந்த மாநிலத்தின் 23-ஆவது மாவட்டமாக பிரிக்கப்பட்டுள்ளது?
Arunachal Pradesh
நியூசிலாந்து நாட்டின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?
Jacinda Ardern
சுற்றுசூழல் அறிவியலுக்கான Blue Planet Prize யாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது?
Hans Joachim Schellnhuber
வரி கட்டுபவர்களின் சந்தேகத்தை போக்கவும், வரி செலுத்தும்போது ஏற்படும் கேள்விகளை தவிர்க்கவும் சமீபத்தில் வருமான வரித்துறையினரால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள வசதியின் பெயர்?
Online chat service
விவசாயிகளுக்கான Bhavantar Bhugtan Yojna திட்டத்தை சமீபத்தில் அறிமுகம் செய்துள்ள மாநிலம் எது?
Madhya Pradesh
2018-ஆவது நிதி ஆண்டில் இந்தியாவின் ஜி.டி.பி எத்தனை சதவீத வளர்ச்சி வீதம் காணும் என நிதி ஆயோக் கணித்துள்ளது?
7%
2017-ஆம் ஆண்டின் மேன் புக்கர் பரிசு வென்றவர் யார்?
George Saunders
அமெரிக்க எழுத்தாளர் George Saunders-ன் எந்த படைப்பிற்காக மேன் புக்கர் பரிசு வழங்கப்பட்டுள்ளது?
Lincoln in the Bardo
Padma Prabha Puraskaram விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?
Prabha Varma
சமீபத்தில் இந்தியாவின் முதல் அனைத்திந்திய ஆயுர்வேத நிறுவனத்தை பிரதமர் மோடி டெல்லியின் எப்பகுதியில் தொடங்கி வைத்தார்?
Sarita Vihar
ICMR அறிக்கையின்படி, இந்தியாவின் 39% புற்றுநோய் cases-உடன் முன்னனியில் உள்ள மாநிலம் எது?
Haryana
வரும் நவம்பர் 2017-ல் சர்வதேச செர்ரி பிளாசம் திருவிழா எந்நகரில் நடைபெறவுள்ளது?
Shillong
பின்வரும் எந்நாடு உலகின் முதன்முறையாக பிட்காய்ன்களை முதலீட்டில் பயன்படுத்துவற்கு இசைவு தெரிவித்துள்ளது?
Vanuatu
WWE-ல் பங்கேற்பதற்கு கையெழுத்திட்டுள்ள இந்தியாவின் முதல் குத்துச்சண்டை வீராங்கனை யார்?
Kavita Devi
டாக்டர்.அப்துல்கலாம் அவர்களின் பொன்மொழிகள் பற்றி எழுதப்பட்டுள்ள Dreamnation: Uniting a Country with Handwritten Dreams எனும் புத்தகத்தின் ஆசிரியர்கள் யார்?
Jubie John and Saji Mathew
இந்தியாவின் எம்மாநிலத்தின் சட்டமன்றத்தில் கவனஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்பு தீர்மானங்கள் போன்றவை ஆன்லைனில் நடத்தப்படவுள்ளன?
Rajasthan
பின்வரும் எம்மாநில அரசு முதன்முதலாக பட்டியலினத்தவர்களுக்கான ஆலோசனைக் கவுன்சில் ஒன்றை

அமைக்கவுள்ளது?
West Bengal
யுனெஸ்கோ அமைப்பின் பொது இயக்குனராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?
Audrey Azoulay
சமீபத்தில் பின்வரும் எந்த நிறுவனத்தில் உலகின் மிகப்பெரிய, எரிதல் பற்றிய ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது?
IIT, Madras
உத்திர பிரதேச மாநிலத்தின் பின்வரும் எந்த இரயில் நிலையத்தின் பெயர் பண்டித் தீன்தயாள் உபத்யேய் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுளளது?
Mughalsarai railway station
cAd3-EBOZ மற்றும் rVSV-ZEBOV ஆகிய சோதனை மருந்துகள் பின்வரும் எந்த நோய்க்கு எதிராக சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ளன?
Ebola
"கூட்டணி ஆண்டுகள் 1996-2012" என்பதன் மூன்றாம் பகுதி சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியர் யார்?
Pranab Mukherjee
முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவர்களின் பிரியாவிடையின் போது மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் அவர்களால் வழங்கப்பட்ட புத்தகத்தின் பெயர் என்ன?
Guru-Sangraha
சமீபத்தில் மெல்போர்ன் கிரிக்கெட் வாரியத்தின் உலக கிரிக்கெட் கமிட்டிக்கு தேரந்தெடுக்கப்பட்டுள்ள முதல் வங்காள தேச கிரிக்கெட் வீரர் யார்?
Shakib Al Hasan
சமீபத்தில் சூரியனை போன்ற நட்சத்திரம் ஒன்று 350 ஒளி ஆண்டுகள் தொலைவில் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர் அதன் பெயர் என்ன?
Kronos
இந்தியாவின் முதல் Hybrid Annuity Mode முறையிலான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் எந்த இடங்களில் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது?
Haridwar and Varanasi
சமீபத்தில் விதவைகள் மறுமணத்திற்கு ரூ.2 இலட்சம் வழங்குவதாக அறிவித்துள்ள இந்திய மாநிலம் எது?
Madhya Pradesh
துபாய் நாட்டின் முதல் ஆயுஸ் மாநாடு வரும் நவம்பர் 2017-ல் எங்கு நடைபெறவுள்ளது?
India
சமீபத்தில் யுனெஸ்கோ அமைப்பிலிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ள 2 நாடுகள் எவை?
USA, Israel
சமீபத்தில் இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையிலான 5-ஆவது மித்ரா சக்தி 2017 இராணுவ கூட்டுப்போர்பயிற்சி எப்பகுதியில் நடைபெற்றது?
Pune

'இந்திய பெருங்கவி' பட்டம்:
ஓமன் மஸ்கட்டில் நடைபெற்ற கலை விழாவில் கவிஞர் வைரமுத்துக்கு 'இந்திய பெருங்கவி' பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

உலக கோப்பை ஹாக்கி போட்டிக்கு முதல் முறையாக தகுதி பெற்று வரலாறு படைத்தது சீனா.
~> 1998 ஆம் ஆண்டுக்கு பிறகு தென்கொரியா முதல் முறையாக உலகக் கோப்பை ஹாக்கி போட்டி வாய்ப்பை இழந்துள்ளது.
~>14 வது உலக கோப்பை ஹாக்கி போட்டி ஒடிசா மாநிலம் புவனேஸ்வரத்தில் அடுத்த ஆண்டு (2018) நவம்பர் 28 முதல் டிசம்பர் 16 ஆம் தேதி வரையில் நடைபெறவுள்ளது.

திரையரங்குகளில் தேசிய கீதம்: மக்கள் எழுந்து நின்று தங்கள் தேசப்பற்றை நிரூபிக்க வேண்டும் என்று கட்டாயமில்லை - உச்ச நீதிமன்றம்
-உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம்.கன்வில்கர், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் கொண்ட பெஞ்ச் முன் விசாரணைக்கு வந்தது.
-மேலும், திரையரங்குகளில் தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும் என்று கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் ‘இசைக்கப்பட வேண்டும்’ என்ற வார்த்தையை ‘இசைக்கப்படலாம்’ என நீதிமன்றம் மாற்ற முடியும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

-திரையரங்கங்களில் தேசிய கீதம் இசைக்கப்படும் போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என்ற மத்திய அரசின் நவம்பர் 30, 2016 உத்தரவை உச்ச நீதிமன்ற நீதிபதி சந்திராசூட் விமர்சித்துள்ளார்.
-கடைசியில் திரையரங்குகளில் தேசிய கீதம் இசைப்பதை முறைப்படுத்துவதற்காக தேசியக் கொடி விதிகளில் திருத்தம் செய்வது குறித்து பரிசீலிக்குமாறு மத்திய அரசை உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

காஷ்மீர் விவகாரத்தில் தீர்வு காண மத்திய அரசு சார்பில் சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதாக ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- "காஷ்மீர் விவகாரம் தொடர்பாக ஆரம்பகட்ட பேச்சுவார்த்தையை நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மத்திய உளவுத்துறையின் முன்னாள் இயக்குநர் தினேஷ்வர் சர்மா இதற்கான சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
-1979-வது பேட்ச் ஐபிஎஸ் அதிகாரியான சர்மா, 2014- 16 வரை உளவுத்துறை இயக்குநராகப் பணியாற்றியவர். காஷ்மீர் தலைவர்கள் யாருடனெல்லாம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதை அவரே முடிவு செய்வார்" இவ்வாறு ராஜ்நாத் சிங் கூறினார்.

நெதர்லாந்தில் 3.டி பிரிண்டிங் தொழில்நுட்பம் மூலம் பாலம் உருவாக்கப்பட்டுள்ளது. அது ஸ்மார்ட் என்ற இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பல்வேறு கிராமங்கள் இன்னும் அடிப்படை வசதிகள் இன்றி இருக்கின்றன என உலக சுகாதார அமைப்பின் இணை இயக்குநராக நியமிக்கப்பட்ட சவுமியா கூறியுள்ளார்.
இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் இயக்குநராக உள்ளவர் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் மகள் சவுமியா. இவர் உலக சுகாதார அமைப்பின் இணை இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவருக்கு சென்னையில் பாராட்டு விழா நடந்தது.
இதில் கலந்து கொண்ட பின்னர் அவர் பேசும்பொழுது, நமது நாட்டில் பல்வேறு கிராமங்கள் இன்னும் அடிப்படை வசதிகள் இன்றி இருக்கின்றன. உலகளவில் இந்தியாவில் 3ல் ஒரு பங்கினர் காசநோய் பாதிப்பு அடைந்தவர்களாக உள்ளனர். தமிழர்களே அதிகளவில் தற்கொலை செய்து கொள்பவர்களாக இருக்கின்றனர் என்று பேசியுள்ளார்.

வாஷிங்டன்: உலக வங்கியின் ‘வளர்ச்சி திட்டங்களை கண்டறிதல்’ என்ற அமைப்பு சமீபத்தில் சர்வதேச நாடுகளில் ஆய்வு மேற்கொண்டபோது, அதில் 110 கோடி பேர் கண் பார்வை இன்றி அவதிப்படுவதும் அடையாளம் இன்றி தவிப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு காரணம் உலக மக்களில் பெரும்பாலானோருக்கு சுகாதாரம் மற்றும் கல்வி அறிவு இல்லாததே என கண்டறியப்பட்டுள்ளது. ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா கண்டங்களில் கண் பார்வையற்றவர்கள் அதிகம் உள்ளதாக கூறப்பட்டுள்ளது.
மேலும் பார்வையற்றவர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர் குழந்தைகள் ஆவர். இங்குள்ள பெரும்பாலான நாடுகளில் வறுமை, வன்முறை, ஆயுத கலாசாரம் மற்றும் வளர்ச்சியின்மை நிலவுவதால் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் போதுமான ஊட்டச்சத்து கிடைப்பதில்லை. அதனால் குழந்தைகளும், பெரியவர்களும் பார்வை இழப்பதாக ஆய்வில் கூறப்பட்டுள்ளது. சீனா உள்ளிட்ட பல நாடுகளில், குழந்தைகளின் பிறப்பை பதிவு செய்யாத காரணத்தால் குழந்தைகளின் உடல்நலம் குறித்த முழு தகவலும் அறிய முடிவதில்லை என உலக வங்கி தெரிவித்துள்ளது

அழியும் நிலையில் உள்ள இனங்களின் இருப்பிடம் சுவிட்சர்லாந்தில் திறப்பு

Paika Bidro (Paika Rebellion)
==================
ஒடிசாவைச் சேர்ந்த, பைகா விவசாயிகள் படையினர், 1817ல், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நடத்திய போராட்டம், நாட்டின் விடுதலைக்காக நிகழ்த்தப்பட்ட முதல் சுதந்திர போராட்டமாக ( First War Of Independence) அறிவிக்கப்பட உள்ளதாக மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர், பிரகாஷ் ஜாவடேகர் கூறியுள்ளார்
- ஒடிசாவில் ஆட்சி செய்து வந்த, கஜபதி மன்னர்களின் கீழ், பைகா விவசாயிகள் படை இருந்து வந்தது.
- இவர்கள், 1817ல், வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக போர்களை நடத்தினர். இந்த போர், பைகா புரட்சி என்ற பெயரில், வெள்ளையர்களுக்கு எதிரான, முதல் சுதந்திர போராக கருதப்படுகிறது.
- இந்த வரலாற்று உண்மை, நாடு முழுவதும், வரலாற்று புத்தககங்களில் அடுத்த கல்வியாண்டு முதல் இடம்பெறும் என அவர் கூறினார்.
"கஸ்தூரி ரங்கன் குழு"
================
நாட்டின் புதிய கல்விக் கொள்கையை தயாரிப் பதற்காக, ஒன்பது பேர் அடங்கிய குழு, பிரபல விஞ்ஞானி, கஸ்தூரி ரங்கன் தலைமையில் சமீபத்தில் அமைக்கப்பட்டது.

| |
|---|
| அக்டோபர் - 24<br>1.ஐநா தினம்<br>2.உலக போலியோ தினம்.. |
| கர்நாடக மாநில சட்டசபையின் 60வது ஆண்டு விழாவில் பங்கேற்க குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இன்று 24/10/17 பெங்களூரு செல்கிறார். நாளை 25/10/2017 கர்நாடக மாநில சட்டசபையின் 60வது ஆண்டு விழாவில் பங்கேற்கும் அவர், இரு அவைகளை சேர்ந்த உறுப்பினர்களிடையே உரையாற்ற உள்ளார். |
| டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தின் நுழைவு வாயிலுக்கு வீரேந்திர சேவாக் பெயர் வைக்கப்பட இருக்கிறது |
| ஜப்பான் பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்றுள்ளார் ஷின்சோ அபே. |
| உலகின் மிகவும் மதிப்புமிக்க சுற்றுச்சூழல் அறிவியல் விருதான ப்ளூ பிளானட் விருது (Blue Planet Prize ) சுற்றுச்சூழல் விஞ்ஞானியான ஜெர்மன் நாட்டை சார்ந்த Hans Joachim Schellnhuber மற்றும் அமெரிக்க நாட்டை சார்ந்த Gretchen C. Daily பெற்றுள்ளுன்னர்...<br>நன்றி - Kalaivani M |
| IPPB இன் MD & CEO ஆக 'Suresh Sethi' நியமிக்கப்பட்டுள்ளார்.<br>~>IPPB - India Post Payments Bank (IPPB) |
| தீபாவளியன்று நாட்டிலேயே அதிகம் மாசுபட்ட நகரம் பிவாண்டி: மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்<br>தீபாவளி பண்டிகை அன்று நாட்டிலேயே அதிகம் மாசுபட்ட நகரம் என்ற பெயரை ராஜஸ்தான் மாநிலத்தின் பிவாண்டி பெற்றுள்ளது. தீபாவளி பண்டிகையன்று பட்டாசுகள் வெடிப்பதால் காற்று மாசு அதிகரித்து வருகிறது... |
| காஷ்மீர் பிரச்சனை தொடர்பாக அனைத்து தரப்பினருடனும் விரிவான பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மத்திய அரசின் சிறப்பு பிரதிநிதியாக உளவு துறையின் (ஐ. பி) முன்னாள் தலைவர் தினேஷ்வர் ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார். |
| ரயிலில் ஓசி பயணம் செய்தால் போலீசாருக்கு அபராதம் : #தெற்குரயில்வே நிர்வாகம் #எச்சரிக்கை... |
| இந்திய மருத்துவ ஆய்வு மன்ற விருது :<br>2014 ஆம் ஆண்டுக்கான உயிரி மருத்துவ ஆய்வுக்கான விருது பேராசிரியர் முனைவர் கு. பிரேம்குமார் அவர்களுக்கு மத்திய அரசின் இந்திய மருத்துவ ஆய்வு மன்றம் வழங்கியுள்ளது.<br>~>புற்றுநோய்க்கான எதிர்விளைவுகளற்ற மருத்துவ கண்டுப்பிடிப்புக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. |
| ஐரோப்பிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திவிஜ் சரண்-அமெரிக்காவின் ஸ்காட் லிப்ஸ்கி ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.<br>~>இந்திய வீரரான திவிஜ் சரண் 2017-ஆம் ஆண்டில் ஏடிபி போட்டியில் வெல்லும் முதல் பட்டம் இதுவாகும்.<br>~>அதேவேளையில் இது ஒட்டுமொத்தமாக அவரது மூன்றாவது பட்டமாகும். |
| டெல்லியில் நடந்து வரும் உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி 10 மீ கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜித்து ராய் & ஹீனாசிந்து தங்கப்பதக்கம் வென்றுள்ளனர்.. |
| நேபாளத்தில் கடந்த ஆண்டு விபத்துக்குள்ளான விமானத்தை பைலட் ஒருவர் அருங்காட்சியகமாக மாற்றி பொதுமக்களின் பார்வைக்கு வைக்க உள்ளார்.<br>கடந்த 2015-ம் ஆண்டு மார்ச் மாதம் துருக்கி ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் ‘ஏர்பஸ் ஏ 330’ ரக விமானம் நேபாள தலைநகர் காத்மண்டு விமான நிலையத்தில் தரை இறங்கியபோது ஓடுதளத்தைவிட்டு விலகி தாறுமாறாக ஓடி விபத்துக்குள்ளானது.அதில் 224 பேர் பயணம் செய்தனர். அவர்களில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.<br>தற்போது அந்த விமானம் காத்மண்டுவில் அருங்காட்சியகம் (மியூசியம்) ஆக மாற்றப்பட்டுள்ளது. அதற்கான முயற்சியை விபத்துக்குள்ளான விமானத்தின் விமானி பெட் அப்ரெடி மேற்கொண்டார். தற்போது இதுவே நேபாளத்தின் முதல் விமான அருங்காட்சியகம் ஆகும்.<br>இதன் இறுதிக்கட்ட பணிகள் முடிவடைந்ததும், விரைவில் பொதுமக்களின் பார்வைக்கு திறந்து வைக்க உள்ளார் பைலட் அப்ரெடி. |
| Oct.24:உலக போலியோ தினம் |
| அக்டோபர் 24:ஐக்கிய நாடுகள் தினம் |
| அக்டோபர் 19 ல் UNESCO வால் உலக உயிரி நெறிமுறை நாள் கொண்டாடப்பட்டது |
| இந்தியாவில் சாலை விபத்துக்கள் பட்டியலில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. இரண்டாம் மூன்றாம் இடங்கள் முறையே |

மகாராஷ்டிரா,உத்திரபிரதேசம் பெற்றுள்ளது
சாலை விபத்துகளில் அதிகம் உயிரிழப்போர் பட்டியலிலும் தமிழகம் முதலிடம் வகிக்கிறது

நவம்பர் 10:திப்பு ஜெயந்தி கர்நாடகா மாநிலத்தில் கொண்டாட உள்ளது

தெற்காசிய பாதுகாப்பு துறை அமைச்சர்களின் மாநாடு பிலிப்பைன்ஸில் நடைபெறுகிறது.
இந்தியாவின் சார்பில் பாதுகாப்பு துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டு உள்ளார்
அவர் பதவி ஏற்ற பிறகு செல்லும் முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும்

பைத்துஜ் பண்டிகை ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்புரில் கொண்டாடப்பட்டது

ஈரோட்டில் உள்ள தாளவாடி குமிட்டாபுரம் பிரேஸ்வரர் கோவிலில் மலைவாழ் மக்களின் சாணியடி திருவிழா நடைபெற்றது

நேபாள நாட்டில் திகார் திருவிழா கொண்டாடப்பட்டது

மும்பையில் ஒரு தனியார் ஹோட்டலில் 'டெமாக்ரசி 11- தி கிரேட் இந்தியன் கிரிக்கெட் ஸ்டோரி' ( Democracy's XI: The Great Indian Cricket Story.) என்ற கிரிக்கெட் பற்றிய புத்தகம் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பேசினார் டெண்டுல்கர்.
எழுதியவர் - Rajdeep Sardesai

செல்லப்பிராணிகள் மற்றும் கால்நடைகளுக்கும் வரி செலுத்த வேண்டும் என்று பஞ்சாப் அரசு உத்தரவிட்டுள்ளது.
வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகள், கால்நடைகள் மற்றும் விலங்குகளுக்கு வரி செலுத்த வேண்டும் என்று அம்மாநில அரசில் உத்தரவில் கூறப்பட்டுள்ளது. அதன்படி, நாய், பூனை, பன்றி, ஆடு, மான் ஆகியவற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 250 ரூபாய் வரியாக செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.
எருமை, எருது, ஒட்டகம், குதிரை, பசு, யானை ஆகியவற்றிற்கு வருடம் ஒன்றுக்கு 500 ரூபாயும் வரி செலுத்த வேண்டும் என்று பஞ்சாப் அரசு கூறியிருக்கிறது.

இந்தியா-ஆப்கானிஸ்தான் இடையிலான உறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக உயர்மட்ட ஆலோசனை நடத்துவதற்காக ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானி ஒருநாள் பயணமாக இன்று டெல்லி வந்தடைந்தார்.
வெளியுறவுத்துறை மந்திரி சுஷ்மா சுவராஜ் மற்றும் இந்திய தரப்பு உயரதிகாரிகளை அதிபர் அஷ்ரப் கானி தலைமையிலான குழுவினர் சந்தித்து பேசினர்.
பின்னர், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடியை ஆகியோரை அஷ்ரப் கானி தனித்தனியாக சந்தித்தார்.
இரு நாடுகளுக்கிடையிலான பல்வேறு துறைசார்ந்த நட்புறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக அவர் ஆலோசனை நடத்தினார்.
டெல்லியில் உள்ள விவேகானந்தர் பன்னாட்டு மையத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் விழாவில் சிறப்புரையாற்றும் அஷ்ரப் கானி, இன்று மாலை விமானம் மூலம் காபுல் செல்கிறார்.
அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி ரெக்ஸ் டில்லர்சன் தனது முதல் அரசு முறைப்பயணமாக இன்று டெல்லி வரும் நிலையில் அஷ்ரப் கானியின் வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது

புதுதில்லி: இந்தியாவில் இணையத்தின் குறைந்தபட்ச வேகம் தற்போதுள்ள 512 கேபிபிஎஸ் என்னும் அளவில் இருந்து 2 எம்பிபிஎஸ் அளவுக்கு விரைவில் உயரப் போவதாக தொலை தொடர்புத் துறை செயலாளர் அருணா சுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் விளையாட்டு வீரர் ஹமீத் அஜிஸ், ஸ்ரீநகரில் இருந்து பல்டால் வரை ஒரு நாளில் 110 கி.மீ. தொடர்ந்து ஓடியுள்ளார்...

பிரேசிலில் உள்ள 30 அடி உயர பாலத்தில் 245 பேர் ஒரே நேரத்தில் ஊஞ்சலாடி கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்..

ஸ்காட்லாந்து பல்கலைக்கழகத்தில் நுரை திருவிழா: மாணவர்கள் உற்சாக கொண்டாட்டம்
ஸ்காட்லாந்து: ஸ்காட்லாந்தில் உள்ள செயிண்ட் ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் நுரை திருவிழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவை முன்னிட்டு, முதலாம் ஆண்டு மாணவர்கள் தங்கள் உடல் முழுவதும் ஷேவிங் க்ரீம் நுரையை பூசிக்கொண்டு உற்சாகமாக கொண்டாடினர்.

கிளர்ச்சியாளர்களின் பிடியிலிருந்த மராவி நகரம் விடுதலை: 148 நாட்கள் போராட்டம் முடிவுக்கு வந்தது
பிலீப்பைன்சில், கிளர்ச்சியாளர்களின் பிடியிலிருந்த மராவி நகரம், தீவிரவாதிகளுடன் நடந்த கடுமையான துப்பாக்கிச் சூட்டிற்கு பின் விடுவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் டெல்பின் லோரென்சானா அறிவித்துள்ளார். 148 நாட்கள்

| |
|---|
| நீடித்த முற்றுகையில் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர் என்றும் நகரத்தின் பல பகுதிகள் நாசப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. சுமார் 5 மாதங்கள் நடந்த போராட்டம் தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகவும், மராவி நகருக்குள் எந்தவொரு தீவிரவாதியும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்... |
| டே ஆஃப் தி டெட் திருவிழா :<br>மெக்சிகோவில் இறந்த நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் நடைபெறும் டே ஆஃப் தி டெட் எனும் வினோத திருவிழா தொடங்கியுள்ளது. |
| ஆசிய பாதுகாப்பு துறை அமைச்சர்களின் மாநாடு:<br>தெற்காசிய பாதுகாப்புத் துறை அமைச்சர்களின் மாநாட்டில்(பிலிப்பைன்ஸ்) இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார்.<br>~>இம்மாநாட்டில் சிங்கப்பூர், வியட்நாம், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் பங்கேற்றனர்.<br>~>கடந்த செப்டம்பர் 7-ம் தேதி பாதுகாப்புத் துறை அமைச்சராக நிர்மலா பொறுப்பேற்ற பிறகு மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும். |
| லக்னோ: உன்னோ அருகே லக்னோ-ஆக்ரா விரைவுநெடுஞ்சாலையில் இந்திய விமானப்படையினர் போர் விமானங்களை தரையிறக்கம் செய்து சோதனை நடைபெற்று வருகிறது.<br>~>அவசர காலங்களில் நெடுஞ்சாலைகளில் போர் விமானங்களை தரையிறக்கம் செய்வது குறித்து சோதனை நடைபெற்று வருகிறது.<br>~>சோதனையின் முதல் கட்டமாக 16 இந்திய விமானப்படையினர் போர் விமானங்கள் தரையிறக்கம் செய்யப்பட்டது.<br>Source : தினகரன் |
| world's first floating wind farm :<br>உலகின் முதல் மிதக்கும் காற்றாலை ஸ்காட்லாந்தில் இயங்கத் தொடங்கியது. |
| அமெரிக்கா: வியட்நாம் போர் வீரரான ஓய்வுபெற்ற இராணுவ கேப்டன் கேரி எம். ரோஸ்ஸிற்கு கௌரவ பதக்கத்தை அமெரிக்கா அதிபர் டொணால்டு டிரம்ப் வழங்கினார். வெள்ளை மாளிகையில் நடந்த இவ்விழாவில் வியட்நாம் போரின் போது ரோஸின் நடவடிக்கைக்கு பாராட்டு தெரிவித்த டிரம்ப், அவரை கௌரவித்து பதக்கம் அளித்தார் |
| Coeus Age Consulting அறிக்கையின் படி டிஜிட்டல் முன்முயற்சிகளில் மத்தியப் பிரதேசம் முதலிடமும், மகாராஷ்டிரா இரண்டாவது இடமும், ஆந்திரா மூன்றாவது இடமும் பெற்றுள்ளது. |
| 2017 ஆம் ஆண்டுக்கான பிஃபாவின் சிறந்த வீரர் :<br>~>போர்ச்சுக்கல் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பிஃபாவின் சிறந்த வீரருக்கான விருதை ஐந்தாவது முறையாக தட்டிச் சென்றார்.<br>~>ரியல் மாட்ரிட் அணியின் ஷினேடின் ஷிடேன் சிறந்த பயிற்சியாளருக்கான விருதை பெற்றார். |
| உத்தரபிரதேச யோகி ஆதித்யநாத் அமைச்சரவை மக்கள் பிரச்சினைகளை சரிசெய்ய 24 மணிநேர CCHelpline சேவை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது... |
| மங்கோலியாவில் 43 நாடுகள் பங்கேற்ற உலக பாடிபில்டிங் போட்டியில், ICF-யைச் சேர்ந்த தொழில்நுட்பவியலாளர் வி.ஜெயபிரகாஷ், 75 கிலோ பிரிவில் தங்கம் வென்றார்.<br>Source : விகடன் |
| நீட் தேர்வு பயிற்சி மையங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது என செங்கோட்டையன் தகவல் தெரிவித்துள்ளார். ஆந்திராவின் சைதன்யா, சென்னை ஸ்பீட் நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக 3 ஆயிரம் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நீட் தேர்வுக்கு தமிழகத்தில் விலக்களிக்க தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என சென்னை ஒப்பந்தம் கையெழுத்து நிகழ்ச்சியில் செங்கோட்டையன் பேட்டியளித்துள்ளார். |
| நாட்டின் சாலை கட்டமைப்பை மேம்படுத்த 'பாரத்மாலா' என்ற பெயரில் புதிய சாலை திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.<br>'பாரத்மாலா' என்ற பெயரில் ரூ.5.35 லட்சம் கோடி செலவில், நாட்டில் நெடுஞ்சாலைகள் உருவாக்கப்பட உள்ளதாக நிதித்துறை செயலாளர் அசோக் லவசா கூறினார். இதன்படி 9000 கி.மீ தூரத்திற்கு பொருளாதார காரிடார் சாலைகள் அமைக்கப்படும். 6000 கி.மீ தூரத்திற்கு உள் காரிடார் மற்றும் ஃபீடர் சாலைகள் அமைக்கப்படும். 2000 கி.மீ தூரத்திற்கு உள் இணைப்பு சாலைகளும் அமைக்கப்படும். 5000 கி.மீ தூரத்திற்கு சாலைகள் மேம்பாடு செய்யப்படும். |

| |
|---|
| 800 கி.மீ தூரத்திற்கு பசுமைவெளி எஸ்க்பிரஸ் சாலைகள், 10000 கி.மீ தூரத்திற்கு தேசிய ஹைவே மேம்பாடு திட்டத்தின்கீழும், 2000 கிமீ தூரத்திற்கு கடற்கரை மற்றும் துறைமுக இணைப்பு சாலைகளும் அமைக்கப்படும். |
| குஜராத் சட்டசபை தேர்தல் டிசம்பர் 9 மற்றும் 14 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக நடத்தப்படும் என தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.<br>தலைமை தேர்தல் கமிஷனர் ஏ.கே.ஜோதி டில்லியில் இன்று 24/10/2017 செய்தியாளர்களை சந்திது பேசினார்... |
| 2017 ஆம் ஆண்டின் ஆயூஷ் கண்காட்சியின் நிகழ்ச்சி பானாஜியில் இரண்டு நாட்கள் நடந்தது முடிந்தது.. |
| அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி டில்லர்சன் டெல்லி வந்தார். அங்கு அவர் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்தார் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினார்... |
| ஹைதராபாத்: விபத்தில் பிரபல பெண் பைக் சாதனையாளர் சனா இக்பால் உயிரிழந்தார்... |
| உலகலாவிய சக்தி வாய்ந்த பாஸ்போர்ட்-2017<br>(worldpassportindex2017) :<br>~>உலக நிதி ஆலோசனை அமைப்பான Arton Capital ஆண்டுதோறும் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.<br>~>தற்போது இந்த அமைப்பு ‘உலகலாவிய சக்தி வாய்ந்த பாஸ்போர்ட்2017’ பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் முதல் முறையாக சிங்கப்பூர் முதல் இடத்தை பெற்றுள்ளது.<br>~>இதுவரை வெளியிடப்பட்ட உலகலாவிய சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் பட்டியலில் முதல் 10 இடங்களில் பெரும்பாலும் ஐரோப்பாவைச் சேர்ந்த நாடுகளே இடம்பிடித்து வந்த நிலையில் ஆசியாவைச் சேர்ந்த ஒரு நாடு இப்பட்டியலில் முதல் இடம் பிடித்துள்ளது இதுவே முதல் முறை ஆகும்.<br>~>கடந்த ஆண்டு 78வது இடத்திலிருந்த இந்தியா 3 இடங்கள் முன்னேறி, 51 தர புள்ளிகளுடன் 75வது இடம் பிடித்துள்ளது. பிரதமர் மோடி உலக நாடுகளுடன் நல்லுறவு கொண்டுள்ளதே இதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.<br>Source : News7 |
| அனைத்து நலத்திட்டங்களுக்கும் ஆதார் எண் இணைக்க காலக்கெடு 2018 மார்ச் 31 வரை நீட்டிப்பு |
| பாயிண்ட் நீமோ(Point Nemo) :<br>~> பூமியில் இருந்து விண்ணிற்கு ராக்கெட் மூலம் பல்வேறு செயற்கைகோள்கள் அனுப்பப்படுகின்றன. அவ்வாறு அனுப்பப்படும் ராக்கெட்டுகளின் பாகங்கள் விண்ணில் இருந்து கீழே விழும் போது காணாமல் போய்விடுகின்றன. இவற்றிற்கு காரணம் விண்வெளியில் உள்ள வெற்றிடம் என கண்டுபிடித்துள்ளனர். இந்த மர்ம வெற்றிடமானது பூமியில் வாழும் மனிதர்களுக்கு தென்படாது. இவை மனிதர்களால் நெருங்க முடியாத இடத்தில் இருப்பதாகவும் ஆபத்து நிறைந்த இன்றாகவும் கருதப்படுகிறது.<br>~>இந்த விண்வெளி வெற்றிடத்திற்கு பாயிண்ட் நீமோ என நாசா விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். 1971-ல் இருந்து 2016 ஆம் ஆண்டு வரை பல செயற்கோள்களின் பாகங்கள் மற்றும் விண்கலங்கள் இங்கே விழுந்துவிட்டதாக கூறப்படுகிறது. இது குறித்த ஆய்வை மெற்கொள்ள சீன பல முயற்சிகள் எடுத்தும் அவை தோல்வியிலேயே முடிந்துள்ளது. |
| துபாயில் தொண்டு நிறுவனத்தோடு இந்தியர்கள் இணைந்து 22 டன் உணவு தானியங்கள் வழங்கி உலக சாதனை<br>துபாய்: சர்வதேச அளவில் அகதிகளுக்கு உதவும் நோக்கில் ஒரே நாளில் 22,172 கிலோ பருப்பு வகைகளை சேகரித்துக் கொடுத்த நெஞ்சம் நெகிழும் சம்பவம் ஒன்று அமீரகத்தில் கடந்த வெள்ளி அன்று எடிசலட் அகாடமி மைதானத்தில் நடந்தது. |
| பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை பெறுவதற்கு, தமிழகம் முழுவதும் ஆன்-லைன் வசதி ஏற்படுத்துவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. |
| அமெரிக்கா - மெக்சிகோ இடையே அமையவிருக்கும் மதில் சுவரின் மாதிரி படங்கள்<br>அமெரிக்காவுக்கும் மெக்சிகோவுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் பெருஞ்சுவர் கட்டப்படுவதற்கான அடையாளங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.கள்ளக் குடியேறிகள் நுழையும் பிரச்சினைக்குத் தீர்வாகப், பெருஞ்சுவர் ஒன்றை எழுப்பப்போவதாக அதிபர் டோனல்ட் டிரம்ப் வாக்குறுதி அளித்திருந்தார்.சுவருக்கென எட்டு மாதிரி வடிவங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று, பெருஞ்சுவருக்கான வடிவமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். அந்த மாதிரி-வடிவங்களைத் தயாரிக்கும் பணியில் ஆறு நிறுவனங்கள் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. |
| நன்றி - கீரத்தனா<br>தமிழகத்தின் 13வது மாநகராட்சியாக சிவகாசியை தரம் உயர்த்த படும் என முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி |

| |
|---|
| அறிவித்துள்ளார்.. |
| நவம்பர் 8-ம் தேதி கறுப்புப்பண எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்படும் : அருண் ஜேட்லி தகவல்.. |
| தள்ளாடும் வயது; தளராத தன்னம்பிக்கை: 70 வயதை கடந்தும் குறையாத பதக்க தாகம்<br>விளையாட்டில் சாதிப்பதற்கு வயது ஒரு தடையில்லை என்பதை கோவையைச் சேர்ந்த 4 மூத்த வீராங்கனைகள் நிரூபித்து வருகின்றனர்.<br>கோவையைச் சேர்ந்த வசந்தா, பெட்ரிசா, லட்சுமி, சிவகாமி 70 வயதைக் கடந்த மூத்த வீராங்கனைகள். கடந்த மாதம் சீனாவில் நடைபெற்ற மூத்தோருக்கான ஆசிய தடகளப் போட்டியில் கோவையைச் சேர்ந்த வீராங்கனைகள் மட்டும் 16 பதக்கங்களை வென்று வியக்க வைத்தனர்.<br>தங்களின் சாதனைப் பயணத்திற்கு குடும்பத்தினர் அளிக்கும் உற்சாகமே காரணம் எனக் கூறுகிறார், சர்வதேச தடகளத்தில் இதுவரை 26 பதக்கங்களை வென்ற லட்சுமி. விளையாட்டில் கவனம் செலுத்துவதால், உடல் நலத்தில் எந்தப் பிரச்னையும் ஏற்படுவதில்லை என மற்றவர்களுக்கும் உற்சாகமூட்டுகிறார் இவர். ஒலிம்பிக் போன்ற விளையாட்டுகளில் சாதிக்க அரசு உரிய ஊக்கம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மூத்த வீரர், வீராங்கனைகள் முன்வைக்கின்றனர். |
| தண்டவாளமே இல்லாமல் இயங்கும் உலகின் முதல் #ஸ்மார்ட்ரயில் #சீனா-வில் அறிமுகம்<br>பீஜிங்: சீனாவின் ஹுனான் மாகாணத்தில் தண்டவாளமே இல்லாமல் இயங்கும் ஸ்மார்ட் ரயிலின் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. |
| உலக ஜூனியர் டேபிள் டென்னிஸ் போட்டாயில் முதன் முறையாக (3,455 புள்ளிகள்)<br>ITTF (The International Table Tennis Federation) முதலிடத்தை பிடித்த இந்திய வீரர் மனவ் தக்கர் ஆவார்.<br>இவர் - சூரத்தை சார்ந்தவர்... |
| இந்தியாவின் டிவிஜ் ஷரன்(Divij Sharan) மற்றும் அமெரிக்காவின் ஸ்காட் லிப்ஸ்கி (Scott Lipsky) இரட்டையர் பிரிவில் ஐரோப்பிய ATP டென்னிஸ் ஓபன் சாம்பியன் பட்டம் பெற்றுள்ளனர்...<br>தோல்வி அடைந்தவர்கள் - Santiago Gonzalez and Julio Peralta |
| பருவ நிலை மாற்றங்கள், புவி வெப்பமயமாதல் போன்றவற்றால் பூமி சுனாமி, சூறாவளி மற்றும் பூகம்பம் போன்ற இயற்கை பேரழிவுகளுக்கு உட்படுமாம். படிப்படியாக இதுபோன்ற அழிவுகளால் பூமி, 2100 ம் ஆண்டிற்குள் முற்றிலும் அழிவை சந்திக்கும் என #மாசசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.<br>முதலில் கடல் இனங்கள் 95 சதவிகிதம் அழியும். இதைதொடர்ந்து, மற்ற இடங்களுக்கு பேரழிவு தொடருமாம். இதுவரை ஆர்டோவிசினியன், டெவோனியன், பெர்மியன் - ட்ராயாசிக், ஜூராஸிக், க்ரட்டாசியஸ் எனப்படும் 5 காலகட்டங்களில், உலகில் உள்ள உயிர்கள் 5 பேரழிவுகளைச் சந்தித்தது.<br>இதற்கு இணையான ஒரு பேரழிவு வரும் 2100ம் ஆண்டுக்குள் நடக்கும் என்றும் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். |
| ஸ்ரீபெரும்புதூரில் விமான உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்பூங்கா அமைய இருக்கிறது. |
| World Food India - 2017:<br>சர்வதேச உணவு கண்காட்சி நவம்பர் 3 முதல் 5 வரை புது டெல்லியில் நடைபெறுகிறது அதை முன்னிட்டு ஒடிசா மாநிலம் கண்காணிப்பு மாநிலமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. |
| இலங்கை கடலோர காவல்துறை கப்பல் 'சுரக்ஷா' கடந்த செப்டம்பர் மாதம் இந்திய கடலோரக் கப்பற்படையால் வழங்கப்பட்ட கடல்சார் ரோந்து கப்பலை பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது...<br>இதை இந்தியா வழங்கும் பொழது வருணா என்ற பெயரில் வழங்கியது... |
| இந்தியாவுக்கான நேபாள தூதராக பணியாற்றி வந்த தீப் குமார் உபாத்யா( Deep Kumar Upadhyay) பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட இருப்பதால் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். |
| 1 வயதான இந்திய அமெரிக்கன் மாணவியான கீதாஞ்சலி ராவ், "அமெரிக்காவின் சிறந்த இளம் விஞ்ஞானி" விருது பெற்றுள்ளார்....<br>ஏழாவது வகுப்பு மாணவி ஆவார்... |
| லூயிஸ் ஹாமில்டன் அமெரிக்கா கிராண்ட் பிரிக்ஸ் கார் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.. இவர் இத்துடன் 62 பதக்கம் வென்றுள்ளார்... |
| அடுத்தாண்டு 2018 மார்ச் மாதம் #சந்திராயன்2விண்கலத்தை அனுப்ப #இஸ்ரோ திட்டம்<br>ஐதராபாத் : ''சந்திராயன்-2 விண்கலத்தை மார்ச் மாதம் விண்ணில் ஏவ திட்டமிட்டுள்ளதால், அதற்கான ஆய்வு பணிகள் தீவிரமாக நடந்து வருவதாக இஸ்ரோ தலைவர் கிரண் குமார் தெரிவித்துள்ளார். |

| |
|---|
| இந்திய பொருளாதாரத்தின் இன்ஜின் போன்று கர்நாடகா செயல்படுகிறது என்று குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் பெருமிதத்துடன் கூறினார்.பெங்களூரு விதான சவுதாவின் வைர விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி பேரவை மற்றும் மேலவை கூட்டுக் கூட்டத்தில் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் சிறப்புரை ஆற்றினார். |
| மேகாலையா மாநிலத்தில் உள்ள இளம் வாக்காளர்களை (தேர்தல் துறை)உள்ளடக்கிய மிகப்பெரிய மனித லோகோவை உருவாக்கியதற்காக லிம்கா புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது...<br>அதன் அளவு - 120*75 அடிகள்... |
| மேற்கு வங்கத்தைச் சேர்ந்த இந்துஸ்தானி பாடகி கிரிஜா தேவி காலமானார். |
| இந்திய கடற்படை மற்றும் இந்தோனேசியா கடற்படை இடையே CORPAT EXCERCISE (ஒருங்கிணைந்த ரோந்து) 3 வது முறையாக 2017 அக்டோபர் 24 முதல் நவம்ப்ர - 5 வரை இந்தோனேசியா பெலாவான் என்ற இடத்தில் நடைபெறுகின்றது... |
| இலங்கை கடற்படை 22 வது தளபதியாக சிறிமெவன் ரணசிங்கே பொறுப்பேற்றார்... |
| சிறு வயதில் போலியோவால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட அரசு தொடக்கப் பள்ளி ஆசிரியைக்கு "டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது' கல்வித் துறை அலுவலர்களால் தேடி வந்து வழங்கப்பட்டுள்ளது.<br>ராசிபுரம் செம்மலை தெருவில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் 2000-ஆம் ஆண்டு முதல் ஆசிரியையாகப் பணியாற்றி வருபவர் மு. செல்வகுமாரி.<br>இடைநிலை ஆசிரியை தனக்கு வழங்கப்பட்ட விருதைப் பெறுவதற்கு சென்னை செல்ல முடியாத நிலையில், அரசிடம் தனது நிலை குறித்து தெரிவித்தார். இதன்பேரில், அரசு நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் விருதை வழங்க அறிவுறுத்தியிருந்தது. இதையடுத்து, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உஷாதேவி இந்த விருதை மு.செல்வகுமாரிக்கு அண்மையில் வழங்கிப் பாராட்டினார். இவருக்கு வெள்ளி விருது, அரசு சான்றிதழ், ரூ.10 ஆயிரம் ரொக்கம் போன்றவை வழங்கப்பட்டன. |
| இந்தியாவிலும் உதயமாகியது மேடம் துஸாட்ஸ் மியூசிம் : அப்துல் காலம், சச்சின் ஆகியோரின் மெழுகு சிலைகள் காட்சிக்கு வைப்பு<br>உலகின் தலைசிறந்த மியூசியங்களில் ஒன்றான மேடம் துஸாட்ஸ் மெழுகு மியூசியத்தின் கிளை, இந்திய தலைநகர் டெல்லியில் வருகின்ற டிசம்பர் மாதம் திறக்கப்படுகிறது. இது மேடம் துஸாட்ஸ் மியூசியத்தின் 23-வது கிளையாகும்.பாலிவுட் நட்சத்திரங்கள் ஐஸ்வர்யா ராய், கரீனா கபூர், ஷாரூக்கான், ஹிருத்திக்ரோஷன், சல்மான் கான் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு மேடம் துஸாட்ஸ் மியூசியத்தில் சிலை உள்ளது குறிப்பிடத்தக்கது. (நடிகர் - ரன்பிர் கபூர் )... |
| தெலுங்கானா முதல்வர்( Chandrasekhara Rao) வாரங்கல் மாவட்டத்தில் 'Kakatiya Mega Textile Park (Warangal Textile Park)' க்கு அடிக்கல் நாட்டினார்.<br>இது நாட்டின் மிகப்பெரிய ஜவுளி பூங்காவாக இருக்கும் என்று கூறியுள்ளார். |
| U-17 உலகக்கோப்பை கால்பந்து: முதன்முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது இங்கிலாந்து<br>#FIFAU17WC #ENGvsBRA |
| சவூதி அரேபியாவில் ஒருநாள் விமானியாக பணியாற்றிய 6 வயது சிறுவன்<br>ரியாத்: சவூதி அரேபியாவில் 6 வயது சிறுவன் ஒருநாள் விமானியாக பணியாற்றிய சம்பவம் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஆதம் என்ற சிறுவன் எதிகாட் விமானத்தை இயக்கிய விதத்தை பார்த்த அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். |
| கேரள மதுக்கடைகளில் பெண்களை நியமிக்க உத்தரவு. |
| இந்தியாவின் முதல் புல்லட் ரயிலுக்கான லோகோ:<br>மும்பை-அகமதாபாத் இடையே இயக்கப்பட உள்ள, முதல் புல்லட் ரயிலின் ((logo)) லோகோ இதற்கான வடிவமைப்பு போட்டியில் 100 பேர் பங்கு கொண்டனர். கட்டிட வடிவமைப்பாளரும் ஓவியருமான சதீஷ் குஜ்ரால் உள்ளிட்ட மூவர் குழு சிறந்த வடிவமைப்புகளைப் பரிசீலித்தது. இதில் அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு பயிற்சி நிறுவன மாணவர் வடிவமைத்த சிறுத்தை உருவம் கொண்ட லோகோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வேகத்திற்குப் பெயர்பெற்ற சிறுத்தை உருவம் அதிவேக புல்லட் ரயிலுக்கு பொருத்தமான லோகோவாக இருக்கும் என தேர்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.<br>Source : polimer |
| வீடியோ, ரிமோட் கண்ட்ரோல் உதவியுடன் இயங்கும் ஸ்மார்ட் பூட்டுக்களை அறிமுகபடுத்தியது அமேசான் நிறுவனம் |
| ஜூராசிக் காலத்தில் வாழ்ந்த ஊர்வன வகையைச் சேர்ந்த மீன்பல்லியின் முழுமையான புதைபடிவம் குஜராத்தில் (கட்ச் பகுதியில்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது |

| |
|---|
| உலக அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டி ( #worldsurfleague) :<br>போர்ச்சுகல் நாட்டில் உள்ள சூப்பர்டுபோஸ் கடற்கரையில் உலக அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி நடைபெற்றது.<br>~>இதில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த அலைச்சறுக்கு வீரர் கேப்ரியல் மெடினா சாம்பியன் பட்டம் வென்றார்.<br>~>ஆஸ்திரேலிய வீரர் ஜூலியன் வில்சன் இரண்டாம் இடம் பிடித்தார். |
| உலகின் விலை மதிப்பு மிக்க விளையாட்டு வீரர்கள் பட்டியலில் மெஸ்சியை முந்தினார் விராட் கோலி... |
| பினராயி விஜயனுக்கு ‘கேரள பெரியார்’ விருது வழங்கிய தமிழக அமைப்பு! |
| ராஜஸ்தான் மாநிலம் புஷ்கரில் நடக்கும் சர்வதேச ஒட்டகத் திருவிழாவில் பங்கேற்க குவிந்திருக்கும் ஒட்டகங்கள்... |
| இந்தியாவின் தற்போதைய Comptroller and Auditor General of India (CAG) Rajiv Mehrishi ஆல் தொகுக்கப்பட்ட 'India 2017 year book ' என்ற தலைப்பில் e- book ஒன்றை ராஜஸ்தான் மாநில முதல்வர் வசுந்தரா ராஜே வெளியிட்டுள்ளார்.<br>~>இ-புத்தகத்தில் முக்கிய பிரமுகர்கள், மாநிலக் கொள்கை, பொதுத் திட்டங்கள் மற்றும் மக்கள்தொகை, வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பல பிற தலைப்புகள் பற்றிய முக்கிய தகவல்கள் மிகுதியாகக் கொண்டுள்ளது. |
| ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியின் புதிய பதிப்பில் அப்பா, அண்ணா தமிழ் சொற்களும் ஹிந்தி சொல்லான ’அச்சா’வும் இடம் பிடித்துள்ளன.<br>ஆங்கிலம் தெரிந்தவர்கள் அதிகம் பயன்படுத்துவது ஆக்ஸ்போர்ட் அகராதி. அதன் புதிய பதிப்பு சமீபத்தில் வெளியானது. இதில் ஆயிரம் புதிய சொற்கள் இடம் பிடித்துள்ளன. குறிப்பாக தமிழ், தெலுங்கு, ஹிந்தி என இந்திய மொழிகளில் 70 சொற்கள் ஆங்கில வார்த்தைகளாக இடம் பெற்றுள்ளன. சகோதரனை குறிக்கும் 'அண்ணா' என்ற வார்த்தை புதியதாக ஆங்கில அகராதியில் எடுத்தாளப்பட்டுள்ளது. ஏற்கனவே நாணயத்தை குறிக்கும் 'அணா' சொல் இடம் பெற்றிருந்தது. அதேபோல் தமிழ் சொல்லான 'அப்பா' ஆங்கிலத்தில் அதே அர்த்தத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. 'அச்சா' என்ற ஹிந்தி வார்த்தை சந்தேகம், கேள்வி, வியப்பு, ஆச்சர்யம், சம்மதம், மகிழ்ச்சி என பன்முக சொல்லாக ஆங்கிலத்தில் இடம் பெற்றுள்ளது. |
| 100 பலூன்களால் கட்டப்பட்ட நாற்காலியில் அமர்ந்தபடி 8,300 அடி உயரம் பறந்து பிரிட்டன் வீரர் சாகசம்<br>ஜோகனஸ்பர்க்: தென் ஆப்ரிக்காவின் ஜோகனஸ்பர்க் பகுதியில் நடைபெறும் பலூன் போட்டிகளிடையே, பிரிட்டனை சேர்ந்த 38 வயதான டாம் மோர்கன் என்ற வீரர் 100 பலூன்களால் கட்டப்பட்ட நாற்காலியில் அமர்ந்தபடி பறந்து சாதனை படைத்துள்ளார். அதிகபட்சமாக 8,300 அடி உயரம் வரை பறந்தபடி 24 கிலோ மீட்டர் தூரத்தை அவர் பலூனில் 2 மணி நேரத்தில் கடந்து சாதனை படைத்துள்ளார். |
| செக் குடியரசு நாட்டில் பாரம்பரிய மீன்பிடி திருவிழா: ஏராளமானோர் பங்கேற்பு.. |
| ~>ஆஸ்திரேலிய கண்டத்தில் உள்ள சிறிய தீவான பப்புவா நியூ கினியாவில் கடந்த 1929-ம் ஆண்டு ஐடாப் என்ற இடத்தில் மனித மண்டைஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இந்த மண்டைஓடு எத்தகைய காலகட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கும் என விஞ்ஞானிகள் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து வந்தனர்.<br>~>1998-ம் ஆண்டு இதே பகுதியில் ஏற்பட்ட ஒரு சுனாமி தாக்குதலுக்கு பின்னர், இங்குள்ள மண் மற்றும் அந்த மண்டைஓடு ஆகியவற்றை சர்வதேச குழு ஒன்று ஆராய்ச்சிக்கு உட்படுத்தியது.<br>~>இந்நிலையில், 1929-ம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட மண்டைஓடு சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம் என்றும், இதற்கு சொந்தமான நபர் சுனாமி தாக்குதலால் இறந்திருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளனர்.<br>~>பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் சுனாமி ஏற்பட்டதற்கான புவியல் கூறுகள் கண்டெடுக்கப்பட்ட மண்டைஓடுகளில் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். |
| அமெரிக்காவின் கெண்டகி மாகாணத்தில் உள்ள லூயிஸ்வில்லே கிரிக்கெட் கிளப்பின் மைதானத்துக்கு 'லிட்டில் மாஸ்டர்' சுனில் கவாஸ்கர் பெயர் வைக்கப்பட்டுள்ளது.<br>~>இந்திய விளையாட்டு வீரர் ஒருவரின் பெயர் வெளிநாட்டில் உள்ள மைதானத்திற்கு வைக்கப்படுவது இதுவே முதன்முறை. |
| புதுச்சேரியில் தனியார் பள்ளிகளுக்கான கட்டணங்களை ஓய்வு பெற்ற நீதிபதி அக்பர் அலி தலைமையிலான கட்டண நிர்ணய குழு நிர்ணயித்துள்ளது. |
| ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24 ம் தேதி முதல் 30 வரை ஆயுதக் குறைப்பு வாரம் ஐநாவால் அனுசரிக்கப்படுகின்றது... |

| |
|---|
| அமெரிக்காவின் மின்சார கார் உறப்த்தியாளரான டெஸ்லா நிறுவனம் தனது கிளையை முதல் முறையாக அமெரிக்காவுக்கு வெளியில் சீனாநாட்டில் ஷாங்காய் நகரில் துவக்க உள்ளது... |
| தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் 4-வது டிவிசன் கிரிக்கெட் போட்டிக்கான லீக் தொடர் நடைபெற்று வருகிறது. இதில், என்.சி.சி. மற்றும் சவுந்தர் சி.சி. அணிகளுக்கு இடையேயான போட்டி சமீபத்தில் சென்னை அடையாறில் உள்ள காந்தி நகர் கிரிக்கெட் மற்றும் ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டிக்கு என்.ஜனனி மற்றும் ஏ.ஆர்த்தி ஆகிய 2 பெண்கள் நடுவர்களாக களம் இறங்கி திறம்பட செயல்பட்டு அசத்தினார்கள். |
| Fire Proof Paint<br>================<br>கங்கோத்ரி ஹைடெக் காஸ்டிங் & பெயிண்டிங் நிறுவனம் தீப்பிடிக்காத பெயின்ட்டை சென்னையில் அறிமுகம் செய்துள்ளது |
| பெங்களூரில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள வீடில்லா மற்றும் வீட்டு மனையில்லா குடும்பங்களுக்கு ஒரு லட்சம் வீடுகள் கட்டி தர கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது |
| தமிழ்நாடு மாநில ரத்த தான கொள்கை<br>================<br>இந்தியாவிலியே முதல் முறையாக ரத்த தானத்திற்கென தனி கௌள்கை தமிழகத்தில் இயற்றப்பட உள்ளது<br>- ரத்தம் வழங்குதல் தானம் பெறுதல் உள்ளிட்டவற்றில் ஏற்படும் நடைமுறைச் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இந்த கொள்கை அமைக்கப்பட்டுள்ளது<br>- மாநிலத்த்தின் எந்த பகுதியில் ரத்தத்துக்கான தேவை இருந்தாலும் குறித்த காலத்தில் தரமான, தேவையன அளவு கிடைக்க இவை வழிவகுக்கும் |
| "International conference on Consumer Protection for East, South, Southeast and Asian nations"<br>=========================<br>கிழக்கு, தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் சர்வதேச நுகர்வோர் பாதுகாப்பு மாநாடு டெல்லியில் தொடங்கியுள்ளது |
| 17 வயதுக்கு உட்பட்டோருக்கான(U17) உலகக் கோப்பை போட்டியின் இறுதி மற்றும் 3ம் இடத்திற்கான ஆட்டம் கொல்கத்தாவில் நடைபெற உள்ளது, அதன் முடிவில் அதிகமானோர் நேரில் ரசித்த உலகக் கோப்பை தொடர், அதிக கோல்கள் அடிக்கப்பட்ட உலகக் கோப்பை தொடர் என இரண்டு வரலாற்று சாதனைகள் இந்தியா வசமாகும் |
| நாடு முழுவதுமுள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களின்(IIT) தரத்தை மேம்படுத்த உலக வங்கியின்(World Bank) ஒத்துழைப்புடன் ரூ.6000 கோடியை ஒதுக்குவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது |
| "FICCI- Realise the Vision of Self-Reliance in the Defence Sector"<br>=====================<br>இந்திய தொழில் வர்த்தக சபைகளின் கூட்டமைப்பு(FICCI) சார்பில் பாதுகாப்புத் துறையை நவீனமயமாக்குவது தொடர்பான கருத்தங்கு டெல்லியில் நடைபெற்றது |
| "Global Investors Meet 2018"<br>=====================<br>தமிழகத்தில் வரும் 2018ம் ஆண்டு உலக முதலிட்டாளர்கள் மாநாடு நடைபெறும் என தொழில் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்<br>- முதல் மாநாடு 2015ம் ஆண்டு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது |
| சிங்கப்பூரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் 2018ம் ஆண்டு முதல் கார் விற்பனைக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது |
| நியுசிலாந்தில் ஆண்டுதோறும் 10 கோடி மரங்களை நட அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது |
| Lonely Planet (travel guide company) அறிக்கையின் படி 2018 ஆம் ஆண்டில் சுற்றி பார்ப்பதற்கான சிறந்த நாடு பட்டியலில் சிலி முதலிடமும், தென் கொரியா இரண்டாம் இடமும், போர்ச்சுக்கல் மூன்றாவது இடமும் பெற்றுள்ளது. |
| கத்தார் முதல் முறையாக அங்குள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை அறிவித்துள்ளது. |
| இந்திய கிரிக்கெட் வாரியத்தின் (பி.சி.சி.ஐ.) இணை உறுப்பினராக புதுச்சேரியை நிர்வாகிகள் குழு தேர்ந்தெடுத்துள்ளது. |
| பீஜிங்: சீனாவில் 1000 மீட்டர் நீளத்தில் தொங்கு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. சீனாவின் போக்குவரத்து நெரிசல் மிக அதிகமாக உள்ளது. இதனை கட்டுப்படுத்தும் விதமாக சீன அரசு பல இடங்களில் மேம்பாலங்கள் கட்டி வருகிறது. |

| |
|---|
| இதனையடுத்து ஜியாங்கி-ஹுனான் மாகாணங்களில் உள்ள இரு நகரங்களை இணைக்கும் வகையில் 1000 மீட்டர் நீளத்தில் தொங்கு பாலம் அமைத்துள்ளது.<br>ஐசாய் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பாலம் சிய் டு என்ற ஆற்றுக்கு மேலே தரைமட்டத்தில் இருந்து 1,854 அடி உயரத்தில் இரண்டு மலைகளை இணைத்து கட்டப்பட்டுள்ளது.<br>உலகிலேயே உயரமானதாக கருதப்படும் இந்த பாலத்தை கட்டி முடிக்க சுமார் ரூ.1000 கோடியை சீன அரசு செலவு செய்துள்ளது. |
| டெல்லியில் நடைபெறும் ISSF உலக கோப்பை இறுதி போட்டிகளின் 50m pistol பிரிவில் Amanpreet singh வெண்கல பதக்கம் வென்றுள்ளார் |
| சாகித்ய அகாடமி விருது மூத்த மலையாள எழுத்தாளர் புனத்தில் குஞ்ஞப்துல்லா தனது 77வது வயதில் காலமானார். |
| 1947 ஆம் ஆண்டு ஜம்மு மற்றும் காஷ்மீரில் பாக்கிஸ்தானுக்கு எதிராகப் போராடிய காலாட்படையால் செய்யப்பட்ட தியாகங்களை நினைவுகூரும் வகையில், அக்டோபர் 27, அன்று இந்தியா முழுவதும் காலாட்படை தினம் அனுசரிக்கப்பட்டது. இது சுதந்திரம் பெற்ற பிறகு இந்திய இராணுவத்தின் முதல் காலட்படை நடவடிக்கை ஆகும். |
| மேக்இன் இந்தியா திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட விக்ரம் ரோந்து கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு<br>திருவள்ளூர்: மேக்இன் இந்தியா திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட ரோந்து கப்பல் இந்திய கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. 186 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் L&T தனியார் கப்பல் கட்டும் நிறுவனம் வடிவமைத்துள்ள விக்ரம் ரோந்து கப்பல் ஒப்படைக்கப்பட்டது. |
| #அமெரிக்கா-வின் ஹார்வர்டு பல்கலைகழகத்தில் தமிழ் இருக்கை அமைவது உறுதியானது |
| துபாயில் சொத்துக்கள் வாங்குவதில் தொடர்ந்து இந்தியர்கள் முதலிடம்<br>துபாய்: துபாயில் சொத்துக்களை வாங்கும் வெளிநாட்டினர் பட்டியலில் இந்தியர்கள் முதலிடத்தில் உள்ளனர் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து துபாய் அரசு வெளியிட்டுள்ள தகவலின்படி, கடந்த 2014-ம் ஆண்டு துபாயில் இந்தியர்கள் 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு சொத்துக்களை வாங்கியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது |
| உலகிலேயே முதல் முறையாக சவுதி அரேபியா ரோபோவுக்கு குடியுரிமை வழங்கவுள்ளது.<br>இந்த ரோபோவுக்கு ஷோபியா என்று பெயரிடப்பட்டுள்ளது |
| உலக அளவில், கடந்த ஆண்டில் புதிதாக உருவான கோடீஸ்வரர்களில் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், அமெரிக்காவை விடவும், ஆசிய நாடுகளான சீனா மற்றும் இந்தியாவில் அதிகரித்துள்ளது.<br>சுவிட்சர்லாந்தை சேர்ந்த யுபிஎஸ் வங்கி மற்றும் ஆடிட்டர்கள் அமைப்பு, 2016-ம் ஆண்டில் புதிதாக உருவாகியுள்ள கோடீஸ்வரர்கள் பற்றிய புள்ளி விபரங்களை ஆய்வு செய்து வெளியிட்டுள்ளது.<br>அதன்படி, 2016-ம் ஆண்டில் உலகம் முழுவதும், புதிதாக 1550 கோடீஸ்வரர்கள் உருவாகியுள்ளனர். அவர்களில் 637 பேர் ஆசியாவையும், 563 பேர் அமெரிக்க கண்டத்தையும், 342 பேர் ஐரோப்பாவையும் சேர்ந்தவர்கள். இந்தமுறை, இதுவரை இல்லாத அளவு அமெரிக்க கண்டத்தை, ஆசியா முந்தியுள்ளது.<br>ஆசியாவில் புதிதாக உருவான கோடீஸ்வரர்களில் 75 சதவீதம் பேர் இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்தவர்கள் ஆவர். இதன் மூலம், இரு நாடுகளின் மொத்த கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை இந்தமுறை அமெரிக்காவைவிட அதிகரித்துள்ளது.<br>இந்த புதிய கோடீஸ்வரர்களின் பட்டியலில் இந்தியர்கள் 100 பேர் இடம் பிடித்துள்ளனர். |
| இந்தியாவுக்கான மியான்மர் தூதரகம் கொல்கத்தா நகரில் உள்ளது. இதில் தலைமை தூதரக அதிகாரியாக இருப்பவர் யி சோய். இந்நிலையில், ஜார்கண்ட் மாநிலம் கிரிதித் மாவட்டத்தில் உள்ள நிமியாகாட் என்ற பகுதியில் இன்று மதியம் யி சோய் தனது மனைவி மற்றும் இருவருடன் காரில் வந்து கொண்டிருந்தார்.<br>அப்போது, எதிர்பாராத விதமாக கார் எதிரே வந்த லாரி மீது மோதி சாலையில் உருண்டது. இந்த கோர விபத்தில் யி சோய் பரிதாபமாக பலியாகினார். அவரது மனைவி மற்றும் இருவர் காயமடைந்து அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். |
| டெல்லியில் நடைபெறும் ISSF உலக<br>கோப்பை இறுதி போட்டிகளின் Double Trap பிரிவில் இந்தியாவின் "Sangram Dahiya" வெள்ளி<br>பதக்கம் வென்றுள்ளார் |
| "3rd Global Investors' India Forum"<br>=========================<br>3வது உலக முதலீட்டாளர்கள் இந்திய கருத்தரங்கு டெல்லியில் நடைபெற்று முடிந்துள்ளது |

| |
|---|
